உ

ஓம் சக்தி

அளவெட்டி வடக்கு

தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயில்

திராவிட முகபத்திர எண் கோண வடிவ

புதிய சித்திரத்

தேரோட்ட விழா மலர்

11-07-2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

P54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சக்தி

அளவெட்டி வடக்கு

தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயில்

திராவிட முகபத்திர எண் கோண வடிவ புதிய சித்திரத்

தேரோட்ட விழா மலர்

11-07-2005

- வெளியீடு -
பரிபாலனசபை, தேர்த்திருப்பணிச்சபை,
அளவெட்டி வடக்கு
தவளக்கிரி முத்துமாரியம்மன் கோயில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்

(1990 கும்பாபிஷேக மலரில் இருந்து)

தொடுக்கும் கடவுட் பழம் பாடல்
　　தொடையின் பயனே,
நறை பழுத்த துறைத்தீந் தமிழின்
　　ஒழுகு நறுஞ்சுவையே,
அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர்
　　உளக்கோயிற் கேற்றும் விளக்கே,
வளர்ச்சிமய இமயப் பொருப்பில் விளையாடும்
　　இளமென் பிடியே.
புவனங்கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில்
　　அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமே,
இளவஞ்சிக் கொடியே,
　　உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரியம்மா

உன்பாதத்தில்,

சைவமுந்தமிழுந் தனிமணங்கமழும்
　　இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.
ஏற்று அருள்புரிவாய் எந்தாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவாயநம
அம்பிகை துணை

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலயம்

Regd. No. HA/5/JA/189

புதிய சித்திரத் தேர் உருவாக்கல் குழு அங்கத்தவர்கள்

திரு. க. சின்னத்தம்பி (தலைவர்)
செல்வி மு. சந்திரிக்கா (பொருளாளர்)
திரு. சி. செந்தில்நாதன் (செயலாளர்)
திரு. சொ. பசுபதிநாதன் ஐயா (பூசகர்)
திரு. பொ. சிவநேசன்
திரு. பொ. ஜெயபாலன்
திரு. க. ஜெயக்குமார்
திரு. பொ. ரங்கநாதன்
திரு. மா. சந்திரகாந்தன்
திரு. சு. முருகையா (கணக்காய்வாளர்)

திரு. சு. இரத்தினசிங்கம் (உபதலைவர்)
திரு. தா. நிகேதன் (உபசெயலாளர்)
திரு. க. துரைராசா
திரு. பொ. ஜெயானந்தன்
திரு. மா. தேவராசா
திரு. க. சுப்பிரமணியம்
திரு. க. சிவம்
திருமதி. ந. வாதவூர்

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய அறக்கட்டளை இலண்டன்

பாதுகாவலர்கள்

Dr. S. பாலச்சந்திரன்
Dr. K. அப்புலிங்கம்
Mr. K. நற்குணம்

தலைவர்

Dr. T. இராசமுத்தையா

உபதலைவர்

Mr. V. வைரமுத்து

செயலாளர்

Mr. P. கணேஸ்வரன்

பொருளாளர்

Mr. A. வைரவமூர்த்தி

செயற்குழுத் தலைவர்

Mr. V. வைரமுத்து

செயற்குழு இணைப்பாளர்

Mr. A. பத்மநாதன்

நிர்வாக உறுப்பினர்கள்

Mr. P. குமரேசன்
Mr. ரட்ணம் ரவீ
Mr. S. ஸ்ரீஸ்கந்தன்
Mrs. ரவீந்திரன்
Mrs. G. வைரவமூர்த்தி
Mr. K. விக்னராஜ்
Mrs. S. குணராஜா
Mr. M. சத்தியமூர்த்தி
Mr. K. பராபரன்
Mr. K. ஜெயவரதன்
Mrs.N. கணேஸ்வரன்
Mrs. R. விக்னேஸ்வரகுமார்
Mr. K. செல்வரட்ணம்

பாரிஸ் இணைப்பாளர்

Mr. V. சந்திரசேகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சக்தி

அளவெட்டி வடக்கு

தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயில்

திராவிட முகபத்திர எண் கோண வடிவ புதிய சித்திரத் தேர்

வெள்ளோட்டம்

07-07-2005

தேரோட்ட விழா மலர்

தொகுப்பு:
தா. நிகேதன்

- வெளியீடு -
பரிபாலனசபை, தேர்த்திருப்பணிச்சபை
பார்த்தீப வருடம் ஆனி மாதம் 23ம் நாள்

11-07-2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கீர்த்தனாஞ்சலி

(1990 கும்பாபிஷேக மலரில் இருந்து)

இராகம் - சிந்துபைரவி தாளம் - ஆதி

பல்லவி

தவளக்கிரி வளரும் தாயே - மாரி
தாமரைப் பதமலர் தந்தென்னை ஆதரி

(தவளக்கிரி)

அனுபல்லவி

புவனமஹேஸ்வரி புரந்தரி நிரந்தரி
அவனியில் நீயே கதி அம்பிகே முத்துமாரி

(தவளக்கிரி)

சரணம்

வேப்பிலைக் கரகமேந்தி விளையாடும் முத்துமாரி
காப்பணியும் கரத்தால் கருணைபுரிந் தாதரி
கூப்பி கரம் சிரமேல் குவித்துத் துதிபாடினேன்
கூப்பிட்டேன் வாதாயே குறைகளைத் தீராயோ

(தவளக்கிரி)

கவிமாமணி ந. வீரமணி ஐயர்,
இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தம் செறியளவை நற்றவள மாகிரிவாழ்
முத்துமா ரித்தாயே முன்னிற்பாய் - நித்தியமும்
சேய்போ லெமைவளர்த்துச் செங்கரத்தி னாலணைக்குந்
தாயேநின் பொற்றாள் சரண்.

அண்டமெங் கும்நிறைந் தாருயிர்க் குயிராகி
ஆண்டருள் தேவி நீயே
அன்னையாய்க் கன்னியாய் அன்புநிறை சக்தியாய்
ஆதரிப் பவளுநீயே
கண்டுதேன் பால்கனிச் சாறென்றி னித்திடக்
கருணை செய் பவளு நீயே
கண்களோ ராயிரங் கொண்டுலகி னுயிரினங்
காக்குமெய்ப் பொருளும் நீயே
மண்டுபிணி யானசின் னம்மைமுத லம்மையாம்
மாகொடிய வெப்பு நோய்கள்
மாற்றிடுந் தெய்வமாய்ப் போற்றுநல் லடியர்க்கு
வரமுதவு மாரி யனையே
திண்டிறற் பெருவாழ்வு கொண்டிடப் பாடுமிச்
சிறியனைக் காப்ப தென்றே
தேங்குபுக ழளவைசீர் தாங்குதவ ளக்கிரித்
தேவிமக மாரி யுமையே.

தவளக்கிரிப் பாடல் தொகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை ஆதீனம்

2 ஆவது குரு மஹா சன்னிதானம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களின்

அருளாசிச் செய்தி

அன்புள்ளவர்களிற்கு அளவெட்டி வடக்கு தவளக்கிரி பதியில் எழுந்தருளி இருந்து அருள் ஆட்சி புரியும் முத்துமாரி அம்மனுக்கு புதிதாக அமைக்கப்பட்ட சித்திர தேர் வெள்ளோட்ட விழா இன்று நடைபெறுவதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். நாங்கள் வாழும் யுகத்தை கலியுகம் என்பர். அம்பாள் வழிபாடு இம்மைக்கும் மறுமைக்கும் புண்ணியத்தை தரக்கூடியது. மனித வாழ்வின் உயர் நிலையை தரக்கூடியது இறை வழிபாடாகும். அதனை நமக்கு ஏற்படுத்துவது ஆலயங்கள் ஆகும். ஆலயத்தில் நடைபெறும் பூஜைகளும், விழாக்களும் மனிதன் சிந்தித்துச் செயற்பட வழிவகுக்கின்றன. அதற்காகவே ஆலயம் தொழுவது சாலவும் நன்று, நித்தலும் எம்பிரானுடைய கோயிலுக்கு போகவேண்டும் என்றும் எடுத்து இயம்பியுள்ளனர். இதனை உணர்ந்த அளவெட்டி வடக்கு தவளக்கிரி மக்கள் அம்பாளிற்கு ஆலயம் அமைத்து ஆலய வழிபாட்டில் தனித்துவமான தேர்த் திருவிழாவைச் சிறப்பாக கொண்டாடப் பல லட்சம் ரூபா செலவில் புதியதொரு தேரை உருவாக்கியுள்ளனர். தேர்த் திருவிழா அழித்தல் தொழிலைக் குறிப்பதாகும். ஆன்மாக்களைப் பற்றி இருக்கும் மாயை இருளை அகற்றி ஞான ஒளியை ஏற்றுவதாகும். அதனாலே தேர் வடம் பிடித்தால் வானத்தில் இடம் பிடிக்கலாம் என்று முன்னோர் இயம்பினர். தேரினுடைய அமைப்பு பல தத்துவங்களை எமக்கு உணர்த்துகின்றது. தேரினுடைய அமைப்பு பாதாளத்தையும், பூலோகத்தையும், மேலோகத்தையும் காட்டுவது ஆகும். உடம்பை மூன்றாகப் பிரித்தனர். கால், அரை, தலை என்று தேருக்கு மூன்று பாகங்கள் உள. இறைவனை தேரில் எழுந்தருளச் செய்வது. மனிதனின் மனத்தில் இறைவனை எழுந்தருளச் செய்வதாகும். இதனாலேயே தேர்த் திருவிழா சிறப்புடையது ஆகும். இத்தேரை உருவாக்கிய சிற்ப கலைஞனை வாழ்த்துகின்றோம். இத்தேருக்கு நிதி வழங்கியவர்களையும் ஆலய பரிபாலன சபையினரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக. இவ் வெள்ளோட்டத்தை நிதர்சனமாக்க வெளிவரும் மலர் சிறப்பாக அமைந்து எல்லோருக்கும் பயன்பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குரு மஹா சந்நிதானம்
நல்லை ஆதீனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர்
துர்க்கா துரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி
கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

ஆசியுரை

அளவெட்டி வடக்கில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கும் முத்துமாரி அம்பாளின் புதிய சித்திரத் தேர் வீதிவலம் வருவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். மஹோற்சவத்தில் முக்கியமான ஒரு உற்சவம் இரதோற்சவமாகும். பஞ்ச கிருத்தியங்களில் அழித்தல் தொழிலை விளக்கி நிற்பது இதுவாகும். தீமையை அழித்து நன்மையை மேலெழச் செய்வதும் தீயவர்களை அடக்கி நல்லவர்களை வாழ வைப்பதும் இவ்வுற்சவத்தில் பொதிந்த உண்மையாகும். மேலும் "திரிபுர தகனம்" இதனால் உணரக் கிடக்கிறது.

"அப்பணி செஞ்சடை ஆதிபுராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரம் என்பது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யார் அறிவாரே.

சைவ மக்கள் வாழ்வில் திருப்பணிகள் இன்றியமையாதவை. ஆலயத்தை மையமாக வைத்து தேர்த்திருப்பணி, கோபுரத் திருப்பணி, தீர்த்தக்குளத் திருப்பணி ஆகியவை இடம்பெற வேண்டும். அத்துடன் ஆதுலருக்கு அன்னமிடும் அன்னசத்திரங்களும் இடம்பெற வேண்டும்.

"ஏழைகள் சிரிப்பில் இறைவன் இருக்கிறான்" என்ற நம்பிக்கை அனைவருடைய உள்ளத்திலும் ஆழமாகப் பதியவேண்டும். எனவே இத்தகைய தெய்வீகக் கருமங்களுக்கு இடமாக அமைவது திருக்கோயில்களாகும். ஆண்டுதோறும் நடைபெறும் மஹோற்சவத்தின் மூலம் கோயில்கள் மூர்த்திகரம் பெறுகின்றன. எனவே இவ்வாலயத்தில் நடைபெறும். மஹோற்சவத்தையும் சிறப்பாக இரதோற்சவத்தையும் வாழ்த்தி ஆசி கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இங்ஙனம்
தங்கம்மா அப்பாக்குட்டி

துர்க்கை அம்மன் தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான முதல்வர்
அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களின்
வாழ்த்துப்பா

சிவம் செழிக்கக் கண்பாரம்மா

தங்குகலை பூத்தபுகழ் அளவை யூரில்
தவளக்கிரிப் பதிமேவும் முத்துமாரி
பொங்குமணித் தேரேறி வருதற்குப்
புதிய நவ ரத்தினத்தேர் ஆக்குவிக்கும்
துங்குமிகு தொண்டரெல்லாம் பாடுபட்டுத்
தொடர்ந்த பணி, மாரித்தாய் கருணையாலே
மங்களமாய் நிறைவாய வண்ணம் கண்டேன்
வாழ்த்துகின்றேன் அவள் அடியார் வாழி வாழி!

கூத்தாடி வேம்பருகே கோயில் கொண்டு
கும்பிடுவார் வினையெல்லாம் போக்குவதற்குக்
காத்தவரா யன்மகனை அருகிருத்தி
கருணைமழை பொழிபவளே, இயனெற்ற
சாத்தாவை வரவழைத்துக் காட்சி காட்டி
தணடியார் கேட்டவரம் தந்தாயம்மா,
ஏத்துமடியார் சுகமாய் வாழ்வதற் கிங்
கினிய ரதம் ஏறிவரும் தாயே போற்றி.

ஓங்காரப் புதுத் தேரில் வீற்றிருக்கும்
உத்தமியே ஆதிமுத்து மாரியம்மா
தீங்கான வினைநீக்கி வறுமை போக்கி
சீரடியார் மனங்குளிர வளம் செழிக்க,
பங்கான கலை செழிக்க நிதி செழிக்க
பக்திவளர் சிவம்செழிக்கக் கண்பாரம்மா
பூங்கரகக் கம்பத்தில் நடனமாடும்
பூரணியே தவளக்கிரி யாளே போற்றி.

அருட்கவி சீ. விநாசித்தம்பி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அகில இலங்கை வீரசைவ குருமாக சன்னிதானம்
கீரிமலை ஸ்ரீரேனுகாச் சிரமம்
சிவஸ்ரீ கி. உருத்திரபுரீஸ்வரக் குருக்கள் அவர்களின்

ஆசியுரை

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பார்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மலகாரியம்
அப்புரமெய்தமை ஆரறிவாரே' – என்பது திருமந்திரம்

திரிபுரதகனம் சைவத்தின் முக்கிய அம்சமாகும். அதாவது எம்மைப் பற்றிய மும்மலங்களையும் ஒடுக்கி அருள் செய்வதென்பது அதன் கருத்தாகும். மேற்படி திரிபுரதகனத்தின் பொருட்டு இறைவன் தேரேறினார். அத்தேரானது பல சிறப்பம்சங்கள் பொருந்தியது. அவையாவன பூமி தேராகவும் சூரிய சந்திரார்கள் தேர்ச்சில்லாகவும் அக்கினி குதிரைகளாகவும் பிரமா தேர்ச்சாரதியாகவும் இன்னும் பலவித அமைவுகளுடன் விளங்கியதே அத்தேர். ஆலயங்களில் அமைக்கப்படும் தேரும் மேற்கூறிய கருத்துக்கியைவாகவே அமைக்கப்படுகிறது.

ஆலயங்களில் நடைபெறும் வருடாந்த உற்வசம் (மகோற்சவம்) எம்பெருமானின் பஞ்ச கிருத்தியத்தின் அடிப்படையிலே அமையும். கொடியேற்றம் படைத்தலையும், வேட்டைத் திருவிழா காத்தலையும், தேர்த்திருவிழா அழித்தலையும், தீர்த்தத் திருவிழா அருளலையும் குறிக்கும். இதனாற் தேர்த்திருவிழாவுக்கும் சங்காரத்திற்கும் கருத்து ஒன்றே. அழித்தல் என்னும் சொல்லிற்கு இல்லாமற் செய்தல் அல்லது கொன்றொழித்தல் எனத் தவறாகப் பொருள் கொள்வோருமுளர். அழித்தல் என்பது ஒடுக்குதல் என்னும் கருத்தில் அமையும். சம்காரம் என்னும் வடமொழிச் சொல் சம்பூ கர என்று பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும். சம் - நன்றாக, கர - ஒடுக்குதல் எனவே மும்மலங்களையும் ஒடுக்கி ஆன்மாக்களை உய்வித்தலே சங்காரம் அல்லது அழித்தல் ஆகும். இதனாற் தேர்த்திருவிழாவின் மேன்மை நன்கு உணரலாம்.

இவ்வண்ணம் சிறப்பு வாய்ந்த மஹோற்சவத்தை ஆகமவிதிப்படி நடாத்தி வரும் அளவெட்டி வடக்கு தவளக்கிரி அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் புதிய சித்திரத்தேர் பவனி வருவதை அறிந்து பேருவகை கொண்டோம்.

இயற்கை வழம் பொருந்திய சூழலில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் எம்பெருமாட்டியின் பேரருள் சொல்லிலடங்கா. எல்லோர்க்கும் நல்லருளை வாரி வழங்கும் அம்பிகை ரதமேறி வரும் கண்கொள்ளாக் காட்சியைக் காண்போர் பேறுபெற்றார் எம்பெருமானின் இடப் பாகத்தை வரித்துக் கொண்ட தாய்த்தெய்வம் திரிபுர சங்காரமூர்த்தியாகத் தேரேறி அவளின் குழந்தைகளாகிய எமது பாசவினைகளைச் சுட்டெரித்து எம்மை ஈடேற்றும் பெரும் கருணையே கருணை.

மேற்படி புனித கைங்கரியமான சித்திரத் தேர்த்திருப்பணி புரிந்தோர்க்கும் உதவியோர்க்கும் அமைப்பு வேலைகளை செவனே நிகழ்த்திய சிற்ப வல்லுனர்களுக்கும் ஏனையோர்க்கும் எமது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும். மேலும் இவ்வாறான புனித கைங்கரியங்கள் இவ்வாலயத்திற் தொடர வேண்டுமென்பது எமது வேண்டுகோள்.

எல்லோர்க்கு எல்லா நலன்களும் கிட்ட எமது பெருமாட்டியின் பேரருள் துணை கொண்டு எமது நல்லாசிகள் உரித்தாகட்டும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சிவஸ்ரீ. கி. உருத்திரபுரீஸ்வரக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா கோவில்க்குளம் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத
அகிலாண்டேஸ்சுரர் திருக்கோயில்
அறங்காவலர்
சிவத்திரு ஆறுமுகம் நவரத்தினராசா அவர்களின்

ஆசிச் செய்தி

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய புதிய சித்திரத்தேரின் வெள்ளோட்ட விழா இறையருள் துணையோடு பார்த்திப ஆண்டு ஆனித்திங்கள் 23ம் நாள் (07-07-2005) அன்று நடைபெற உள்ளதென அறிகின்றோம்.

உற்சவங்களின் உன்னதமானது மகோற்சவம், மகோற்வத்தில் தலையானது தேர்த்திருவிழா, (ரதோற்சவம்) இவ்விழாவைச் சிறப்பிக்க எம் பெருமாட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மனுக்கு அப்பெருமாட்டியின் பெருங்கருணையோடு ஆலய பரிபாலன சபையின் திருப்பணிச்சபையினரின் அதிசிரத்தையான பணியில் வள்ளல்களின் அறக்கொடையில் இச்சித்திரத்தேர் உருவாகி இன்று அழகுற நிமிர்ந்து நிற்கின்றது.

இச்சித்திரத்தேரை அமைக்க முன்வந்த ஆலய பரிபாலன சபையினர், திருப்பணிச்சபையினர் நிதி வழங்கிய வள்ளல்கள், பொருள் கொடுத்த கொடையாளிகள், பணிசெய்த தொண்டர்கள், அடியவர்கள், பெருமைக்குரியவர்கள். அனைவரும் நீடுழி வாழவும், தெய்வீகக்கலைகள் சிறக்கவும் வாழ்த்துவதோடு, இன்று நடைபெறும் வெள்ளோட்டவிழா நன்கு சிறப்பாக நடைபெறவும் எல்லாம் வல்ல அகிலாண்டேஸ்வரி உடனுறை அகிலாண்டேசுரர் பாதம் பணிந்து ஆசி கூறி அமைகின்றேன்.

சுபம்

இறைபணியில்
சிவத்திரு ஆறுமுகம் நவரத்தினராசா
அறங்காவலர்

கோவில்க்குளம்
வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோவில்
பிரதம குரு
வேதசிவாகம ஞானபானு. சிவாகம கிரியா வித்தகர்
பிரம்மஸ்ரீ க. மு. சோமசுந்தரக் குருக்கள் அவர்களின்

ஆசிச்செய்தி

இறைவன் ஆன்மாக்களின் ஈடேற்றத்தின் பொருட்டு தமது திருநடனத்தின் பஞ்ச கிருத்தியங்களைச் செய்கின்றான். படைத்தல், காத்தல், மறைத்தல், அழித்தல், அருளல் என்பனவே பஞ்சகிருத்தியங்களாகும். கொடியேற்றம் படைத்தலையும், தேர்த்திருவிழா அழித்தலையும் குறிக்கிறது. அழித்தலின் பின்பே ஆன்மா இறை அருளைப்பெற முடியும். ஆன்மா ஈடேற்றம் பெற தேர்த்திருவிழா முக்கியமானதாக கருதப்படுகிறது.

ஊரிலே தேர் ஒன்று அமைக்கப்பட்டால் அந்த ஊரில் இருக்கின்ற தீமைகள் அனைத்தும் அன்றோடு அழிந்துவிடும் என்பது மக்கள் நம்பிக்கை. அளவெட்டியூர் மக்கள் அனைவரும் ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்ற வகையில் அனைவரும் ஒன்றிணைந்து தவளக்கிரி முத்துமாரி அம்மனுக்கு சித்திரத்தேர் அமைத்திருப்பது சிறப்பானதொரு முயற்சியாகும். இதுவரை காலமும் அம்மனுக்கு சித்திரத்தேர் இல்லாதது மக்கள் மனதில் பெரும் குறையாக இருந்துள்ளது. அம்மனுக்கு குறை நீக்கி மக்கள் அனைவரும் பவவினை அறுத்து திருவருள் பெற்று உய்ய தவளக்கிரி முத்துமாரி அம்மனின் திருவருள் கடாட்சம் கிடைத்துள்ளது.

இப் பெரும் முயற்சியை மேற்கொண்டு தேர் திருப்பணியை சிறப்புறச் செய்து முடித்த ஆலய நிர்வாக சபையினர், தேர்த் திருப்பணிச் சபையினர், தேரை உருவாக்கிய ஸ்தபதியார் அவரது குழுவினர், வர்ண வேலை செய்தோர், மற்றும் பக்தர்கள் அனைவருக்கும் எம்பெருமாட்டியின் திருவருட் கடாட்சம் கிடைக்கப்பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ பிரார்த்தித்து நல்லாசிகளைக் கூறுகின்றேன்.

பிரம்மஸ்ரீ க. மு. சோமசுந்தரக் குருக்கள்
பிரதமகுரு, பர்வதவர்த்தனி அம்மன் கோயில்
உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரும்பிராய் ஞானவைரவ ஆலய பிரதம குருவும்,
அளவெட்டி தவளக்கிரி முத்துமாரியம்மன் ஆலய
மஹோற்சவ குருவுமாகிய
சிவாகம கிரியா ரத்தினம்
சிவஸ்ரீ செ. வைரவநாதக் குருக்கள் அவர்கள் வழங்கிய

ஆசிச்செய்தி

அம்பிகையின் அருள் பரவட்டும்

திருக்கோயில்களிலே இடம் பெறுகின்ற நைமித்தியக் கிரியைகளிலே மஹோற்சவம் முக்கியமானதாகும். இம் மஹோற்சவக் கிரியைகள் பஞ்சகிருத்தியங்களான படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களையும் குறிப்பதாக அமைகிறது. இறைவன் திரிபுர சம்ஹாரம் செய்து மும்மலங்களாகிய மூன்று அசுரர்களையும் அழித்ததை அழித்தல் தொழில் நினைவுறுத்துகிறது.

அந்த வகையிலே மஹோற்சவத்திலும் தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறித்து நிற்கிறது. இத்தினத்திலே அம்பிகை தேரிலே வந்து அடியவர்களின் மும்மலங்களையும் அழித்து அருள் புரிவாள் என்பதில் ஐயமில்லை.

அளவெட்டி வடக்கில் கோவில் கொண்டெருந்தருளியிருக்கும் தவளக்கிரி அன்னை முத்துமாரியம்பாளுக்கு எனது தந்தையாரும் அவரைத் தொடர்ந்து நானும் பிரதம குருவாக இருந்து மஹோற்சவக் கிரியைகளை நடாத்தி வருகின்றேன்.

நீண்ட நாட்களாக அன்னைக்கு சித்திரத்தேர் இல்லாதது ஒரு பெருங்குறையாகவே இருந்து வந்துள்ளது. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டும் ஏதோ காரணத்தினால் அது கை கூடவில்லை. இருப்பினும் வெளிநாட்டில் வாழும் அம்பிகை அடியார்களும் உள்ளூரில் வசிக்கும் அடியார்களும் சேர்ந்து அம்பாளுக்கு அழகிய சித்திரத்தேரை உருவாக்கி இன்று வெள்ளோட்டம் நடைபெறுவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்புண்ணிய கைங்கரியத்தில் ஈடுபட்ட ஆலய பரிபாலன சபையினர், தேர்த்திருப்பணிச் சபையினர், அடியார்கள் மற்றும் கலையம்சம் பொருந்திய அழகிய தேர்களை உருவாக்கிய ஸ்தபதி சீவரத்தினம் ஜெயப்பிரகாஸ் மற்றும் அவரது குழுவினர், சிறு துளி பெரு வெள்ளமாக பெரு நிதியம் வழங்கிய அன்பர்கள் அனைவருக்கும் அன்னைமுத்துமாரியின் திருவருட் கடாட்ஷம் என்றும் கிடைக்க அம்பிகையைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

சர்வோ ஜனகாசுகிரே பவந்து.

இங்ஙனம்
சிவாகம கிரியா ரத்தினம்
சிவஸ்ரீ செ. வைரவநாதக்குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்
பிரதம குருக்களின்

ஆசிச் செய்தி

அளவெட்டி என்றால் பல சிறந்த கோவில்கள் சூழ உள்ள ஊர் என்பதை யாவரும் அறிவர். இங்குள்ள எல்லா கோவில்களிலும் மஹோற்சவங்கள் மிக சிறப்பாக நடைபெறுவது வழக்கம். திருவிழாக்களுக்குள் சிகரம் போல் அமைவது இரதோற்சவம் என்னும் தேர்த்திருவிழாவாகும். ஆகவே அப்படியான விழாவுக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவிலுக்கு ஓர் புதிய சித்திரத்தேர் அமைவது மிகவும் சிறப்புள்ளதாக அமையும். அந்த சித்திரத்தேர் இரதோற்சவத்துக்கு முன்பு ஒரு முறை கோவிலை வலமாக வந்து பக்தர்களுக்கு அருட்காட்சியாக வரப் போகின்றது என்பதை அறிவிக்கும் நோக்கமாக தேர் வெள்ளோட்டம் என்று தேரை பக்தர்கள் இழுத்து வருவார்கள். அத்திருக் காட்சியை காண்பதும் வடம் தொட்டு இழுப்பதும் நாம் செய்த பூர்வ புண்ய பலன் ஆகும். அந்த இரத வெள்ளோட்டம் எந்த விதமான விக்னங்களும் வராது நடைபெற வேண்டுமென்று நடுநாயகமாக விளங்கும் கும்பழாவளை விக்கினேஸ்வரனை வேண்டி வணங்கி எனது நல்லாசிகளையும் வழங்குகின்றேன். மேலும் இந்த சித்திரத்தேரை உருவாக்குவதற்கு பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் அதை ஆக்கிய சிற்பாசாரிகளும் சீரும் சிறப்புடன் விநாயகரின் அருளாலும் அம்பிகையின் அருளாலும் வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகின்றேன்.

சுபமங்களம்

கும்பிழாவளை,
அளவெட்டி.

பிரம்மஸ்ரீ இ. விஸ்வேஸ்வரக்குருக்கள்

அளவெட்டி அழகொல்லை விநாயகர் தேவஸ்தான
பிரதம குருக்களின்

ஆசிச் செய்தி

தேரேறி வந்திடுவாய் தேவி

அம்பிகையே ஈஸ்வரியே அகலாண்டநாயகியே
ஸ்ரீ புவனேஸ்வரியே ஆதிபராசக்தியே தாயே
நம்பியே சரணந்தோம் நான்மறைகளேத்திடும்
நாரணீ தேவி நீ புதிய சித்திர தேரேறி வந்திடுவாய்
தும்பிமுகன் தம்பியுடன் அருட்காட்சி நல்கியே
திருவீதி வலம் வரும் தேவி முத்துமாரியே
வெம்பியழுது நாம் வேண்டிய வடம் பிடித்தோம்
வேதவல்லி நீ வேண்டும் வரம் தந்திடுவாய்!

இவ் உற்சவத்தின் பெரும் திருவிழாவாக ஸம்காரம் என்னும் அழித்தலை குறித்து நடாத்தப்பெறும் உற்சவம் ரதோற்சவம் எனப்படுகிறது. ரதோற்சவ தினம் மிகவும் சிறப்பானதாகவும் முக்கியமானதாகவும் ஒற்றுமையின் இடமாகவும் ஆலயத்தின்கண் விளங்குவதைக் காணலாம். இதனையே" ஊர்கூடி தேர்வடம் பிடிப்போம்" என்னும் உயர்சிந்தனை கொண்ட முதுமொழியினால் அறிய முடிகிறது.

ஒரு நாட்டில், ஓர் ஊரில், ஒரு கிராமத்தில் ஆலய உற்சவமும், ரதோற்சவமும் இனிது நடைபெற்றால் ஊருக்குச் சிறப்பு. நாட்டுக்குச் சிறப்பு. மக்களுக்குச் சிறப்பு. அரச நிதிக்குச் சிறப்பு. மக்களின் மகோன்னத வாழ்வுக்கு வீடுபேறு, செல்வச் செழிப்பு என ரதோற்சவத்தின் பலன்கள் பலவாறு கூறப்படுகின்றன.

"அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்" என்ற அனுபூதி மஹான்களின் வாக்குக்கேற்ப நாட்டு மக்கள், ஊர்மக்கள், அம்பிகை அடியார்கள், ஆலயதர்மகர்த்தாக்கள், இளைஞர்கள், மாணவ சமூகத்தினர் என எல்லா அனைத்து மக்களும் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாளை சரணடைந்து அம்பிகையின் பரிபூர்ண அனுக்கிரகத்தைப் பெறவேண்டுமெனப் பிரார்த்தித்து இந்நன்னாளில் ஆசிகள் பல கூறுகின்றேன்.

பிரம்மஸ்ரீ இரத்தின ஐயர் - மகாலிங்கக்குருக்கள்

அழகொல்லை பிள்ளையார் தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அம்பாள் துணை

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய உரித்துடைய பூசகர் வழங்கிய வாழ்த்து

"அன்னையைச் சரணடைவோம்"

அகிலலோக மாதாவாகிய அன்னை பராசக்தி அடியவர்களுக்கு அருள் பாலிக்கு முகமாக பல்வேறு பெயர்களையும் வடிவங்களையும் தாங்கி நிற்கின்றாள். அந்தவகையில் அளவெட்டி வடக்கிலே முத்துமாரி என்னும் நாமம் பூண்டு தவளக்கிரி பதியிலே அருளாட்சி புரிந்து வருகிறாள்.

இந் அம்பிகையின் திருமேனி தீண்டி முப்பொழுதும் பூசை செய்யும் பரம்பரையிலே அடியேனும் வந்துதித்ததைப் பெரும்பேறாகக் கருதுகின்றேன். எமது முன்னோர்களும் பின் எனது தந்தையார் அமரர் சொக்கலிங்கக் குருக்கள் பசுபதிநாதஐயரும் அம்பிகையின் மேல் அளவில்லாத பற்றுக் கொண்டவர்கள் எனது தந்தையார் நாளுக்கு நாள் பெருகி வரும் அன்னையின் ஆலய வளர்ச்சி கண்டு பெரும் பூரிப்படைந்திருந்தார். அம்பாள் சித்திரத்தேரில் ஆரோகணித்து வரும் காட்சியினை மனக்கண்களிலே நினைத்து அந்நினைவுடனேயே அமரத்துவமடைந்தார்.

அன்னாரின் கனவும் அடியார்களின் நீண்ட நாள் பேரவாவுமான சித்திரத்தேரை ஊர் மக்களும் வெளிநாட்டில் வாழும் அம்பிகையின் அடியார்களும் சேர்ந்து மிக அழகுற வடிவமைத்து இன்று வெள்ளோட்டம் நிகழ்வதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பார் போற்றும் அன்னை பராசக்தியே உன்றன்
பாதமலர் பணிந்தேத்தி நின்றேன்
கார்குழல் மேல் கருநாகம் குடை பிடிக்கும்
கமலாசனத்து முத்துமாரியே உன்னடியார்
ஊர் கூடியே உன்னைச் சரணடைந்து நின்றே
உவகையுடன் உவந்தளித்த
தேரேறித் தீவினையகற்றிடுவாய் திரிபுர சுந்தரியே
தேசு நிறை தவளக்கிரித் திரவியமே

என்ற அம்பிகை அடியார் ஒருவரின் மனதில் உதித்த கவிதை வரிகளுக்கேற்ப அன்னை தேரேறி வந்து அனைத்து மக்களுக்கும் அருள்மழை பொழிவாள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இந்த அழகிய சித்திரத் தேரை உருவாக்க முன்னின்றுழைத்த அனைவருக்கும் தேரைச் சிறந்த முறையில் வடிவமைத்த ஜீவரத்தினம் ஜெயப்பிரகாஸ் அவர்களுக்கும் அம்பிகையின் எல்லையற்ற திருவருள் என்றும் நிறைவாகக் கிடைக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல அம்பிகையின் பாதார விந்தங்களை பணிந்து அமைகிறேன்.

இங்ஙனம்
சிவஸ்ரீ ப. மகேசன் ஐயா

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சித்திரத் தேரை நிர்மாணித்த ஆறுமுகம் சிற்பாலய ஸ்தபதி
திரு. ஆ. ஜீ. ஜெயப்பிரகாஸ் அவர்களின்

வாழ்த்துரை

ஆறுமுகம் சிற்பாலயம் ஈழத்தின் பலபாகங்களிலும் சிங்கப்பூர், மலேசியா முதலிய இடங்களிலும் பல சித்திரத் தேர்களை நிர்மாணித்துச் சாதனை படைத்ததை யாவரும் அறிவர். அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் எழுந்தருளி அருள்பாலிக்கவெனப் புதிய சித்திரத்தேரொன்றினை எமது சிற்பாலயம் நிர்மாணித்துள்ளது.

எமது அருமைத் தந்தையார் தேர்க்கலை அரசு, ஆ. ஜீவரத்தினம் ஸ்தபதி அவர்கள், அமரராகிய பின் அவரது வழிகாட்டலில் வளர்ந்த அடியேன் இப்பணியினைத் தொடர்ந்து செய்து வருகின்றேன்.

ஆறுமுகம் சிற்பாலயத்தின் வளர்ச்சியில் எமது தந்தையாருக்கு உதவியாக அவரது சகோதரர்களும் பணியாற்றி வந்துள்ளனர். வருகின்றனர்.

திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயத்தின் சித்திரத்தேர்களின் சிறப்பையும், செம்மையையும் கலைநேர்த்தியையும், தெய்வாம்சத்தையும் அவற்றைக் கண்ணுறுவோர் நிதர்சனமாகவே தரிசிப்பர்.

ஈழத்துத் தேர்த்திருப்பணிச் செயற்பாடுகளிற் சாதனை படைத்த எமது அருமைத் தந்தையார் அமரர் ஆ. ஜீவரத்தினம் ஸ்தபதி அவர்களின் ஆசீர்வாதத்துடன் இத்திருபணியிலே ஈடுபட்டுள்ள அடியேன், மிகச் சிறப்பாகவும் நேர்த்தியாகவும் தவளக்கிரி முத்துமாரி அம்மனின் சித்திரத் தேரைச்சிறப்பாக நிர்மாணிக்கத் திருவருள் கைகூடியுள்ளது.

அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்ட இச் சித்திரத்தேரிலே பலதனித்தன்மைகள் உள்ளன.

கைதேர்ந்த சிற்பிகளின் கைவண்ணத்தில் உருவான பல அழகிய சிற்பங்கள் இச்சித்திரத்தேரின் சிறப்பை மேலும் மெருகுபடுத்துகின்றன.

ஈழத்துத் திருத்தலங்களில் உள்ள மிகமுக்கியமான சித்திரத்தேர்களில் ஒன்றாகத் தவளக்கிரி முத்துமாரி அம்மனின் தேரும் இடம்பெறும் என்பது எமது நம்பிக்கையாகும்.

எல்லாம்வல்ல ஸ்ரீமுத்துமாரி அம்மன் இச்சித்திரத்தேரில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலிக்க வேண்டுமென இறைஞ்சுகின்றேன்.

அன்புடன்
சித்திரத்தேர்த் திருப்பணி நிர்மாணத்தில்,
ஸ்தபதி ஆ. ஜீ. ஜெயப்பிரகாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி வடக்கு தவளக்கிரி ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய இலண்டன் அறக்கட்டளைத் தலைவர் டாக்டர் து. இராசமுத்தையா அவர்களின்

வாழ்த்துச் செய்தி

நந்தம் செறியளவை நற்றவள மாகிரிவாழ்
முத்துமா ரித்தாயே முன்னிற்பாய் - நித்தியமும்
சேய்போ லெமைவளர்த்துச் செங்கரத்தி னாலணைக்குந்
தாயேநின் பொற்றாள் சரண்.

சிவபூமியான ஈழத்தின், சிறப்புற்று விளங்கும் யாழ்ப்பாண நன்நகரில், வளம்மிக்க கிராமங்களில் ஒன்றான வரலாற்றுச் சிறப்புமிக்க அளவையூரின் வடபகுதியில் தவளக்கிரி என்னும் பகுதியில் காவல் தெய்வமாக வீற்றிருக்கிறாள் முத்துமாரி அம்மா. தவளக்கிரிப் பதி பண்டுதொட்டு கல்வி, கலை, கலாச்சாரம், ஆன்மீகம் முதலாய சகல துறைகளிலும் புகழ் பூத்து விளங்குவது உலகின் பலபாகங்களிலும் வாழும் தமிழ் மக்கள் யாவரும் அறிந்ததே. கலைஞர்களும், கவிவாணர்களும், ஆன்மீகவாதிகளும், தத்துவஞானிகளும், சிற்பசாத்திர வல்லுனர்களுக்கும், மருத்துவநிருபர்களுக்கும் உறைவிடமாக இருந்ததும், இருப்பதும், தவளக்கிரி பதியே. அன்னை முத்துமாரியே அவர்களின் குலதெய்வமாவாள்.

1980 களில் அன்னை மகோற்சவ காலங்களில் பவனிவந்த தேர் பழுதடைந்து அன்னை திருவீதி உலா வரமுடியாத நிலையடைந்தது அன்னைக்கு புதுத் தேர் அமைக்க 1984 ஆம் ஆண்டு 33 பேர் கொண்ட நிருவாகசபை அமைக்கப்பட்டு, 1985 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் தேர் திருப்பணி அங்குராப்பணம் செய்யப்பட்டது. தமிழ் மக்களின் இருண்ட காலமான இக் கால கட்டத்தில் திருப்பணி வேலைகள் தடைப்பட்டன. ஆலயத்தைச் சுற்றி வாழ்ந்தோரும், அயல் கிராமங்களின் வாழ்ந்தோரும் புலம் பெயர்ந்தார்கள்.

அன்னைக்கு ஒருகாலப் பூசைகூட செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டதை புலம்பெயர்ந்து வாழும் அளவெட்டி வடக்கு தவளக்கிரியை சேர்ந்தோர் அறிந்து 2002 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 5ஆம் நாள் உயர்திரு. அ. வயிரவமூர்த்தியின் இல்லத்தில் அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய அறக்கட்டளை இலண்டன் என்பதை உருவாக்கி இன்றுவரை பணியாற்றி வருகின்றோம். தொடர்புகள் அற்ற தமிழர் வாழ்வின் இருண்ட காலப்பகுதியில் நாமும், ஆலய பரிபாலன சபையும் பல சிரமங்களுக்கு இடையில் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக, அன்னைக்கு, மூன்றுகாலப் பூசை, மாதாந்த அன்னதானம், மகோற்சவகால அன்னதானங்கள் மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றன. அத்தோடு நின்றுவிடாமல் நாம் அன்னையின் பெயரால் அளவெட்டி மக்களின் பொது நலத்தையும் நினைவில் கொண்டு பல சமுதாயப் பணிகளை செய்துவருகிறோம். அளவெட்டியில் உள்ள பாடசாலைக்கு எம்மால் முடிந்த அளவு உதவிகளை செய்து வருகிறோம்....

மூன்று பாடசாலைக்கும், முதலியவேள் முன்பள்ளிக்கும் குடி நீர் வசதி செய்து கொடுத்துள்ளோம், கடந்த வருடம் நிதியுதவி செய்து நவராத்திரி விழாவை அளவெட்டியிலுள்ள பாடசாலைகளில் சிறப்பாக கொண்டாடச் செய்துள்ளோம். இவ்வருடம் தைப்பொங்கல் தினத்தன்று ஆலயத்தில் சிறுவர் முன்பள்ளி அமைத்துள்ளோம். மற்ற ஆலயங்களும் கட்டிடங்களைத் திருத்த நிதி சேர்த்து அனுப்பியுள்ளோம். எம்மை நாமே விளம்பரப்படுத்திக் கொள்வது தற்பெருமை கொள்வதாகும். இவையெல்லாம் எம் அன்னையின் திருவிளையாடல்கள், எம்மைப் பின்பற்றி மற்ற ஆலய பரிபாலனசபைகளும் செயல்படவேண்டுமென்பது அன்னையின் திருவுளம் போலும்.

இத்தனை திருவிளையாடல்களையும் புரிந்து மக்களின் நல்வாழ்வுக்காக தன்னையே தனமாக தந்திருக்கும் முத்துமாரி அன்னை பவனிவர சித்திரத்தேர் பல சிரமங்களுக்கிடையிலும், எதுவித தடங்கலும் இல்லாமல் வேலை தொடங்கி ஒருவருடத்துக்குள் பூர்த்தியானது விந்தையிலும் விந்தையே. இதுவும் அன்னையின் திருவிளையாட்டில் ஒன்றே.

மேலும் எனக்கு தலையான பணியுள்ளது. ஆலயத் திருப்பணிகளுக்கும், ஆலயசார்பாக செயற்பட்ட அறப்பணிகளுக்கும், பொருள் தந்தும், சாரீ உழைப்பு நல்கியும் பெரும்பணி ஆற்றிய அன்னையின் அடியார்கள் அனைவருக்கும் எம் நன்றிகளையும், வணங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இரவு பகலெனப் பார்க்காது "செய்யும் தொழிலே தெய்வம்" என சேவை புரிந்த பரிபாலன சபை உறுப்பினர் அனைவருக்கும் எனது வணங்கல்களையும். இப்பணியில் தம்மை முழுதாக ஈடுபடுத்தி உழைத்த பரிபாலனசபைத் தலைவருக்கும், பொருளாளர்க்கும், செயலாளர், தேர்த்திருப்பணி செயலாளர் செந்தில்நாதன், திரு. வடிவேலு, சிவநேசன் ஆசிரியர், மற்றும் தொண்டர் சபை உறுப்பினர்க்கும் என் பணிவான வணக்கங்கள் எல்லோருக்கும் அன்னை அருள்பாலிக்க பிரார்த்திக்கிறேன்.

"அன்னையை சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாமே"
"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

நன்றி
வணக்கம்

து. இராசமுத்தையா
தலைவர்
அளவெட்டி வடக்கு, தவளக்கிரி முத்துமாரியம்மன் ஆலய
அறக்கட்டளை இலண்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி வடக்கு தவளக்கிரி ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய இலண்டன் அறக்கட்டளைச் செயற்குழுத் தலைவர். திரு. வ. வையிரமுத்து அவர்களின்

வாழ்த்துச் செய்தி

மூவர்க்கும் முதற் பொருளாய்
முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத் திற்கும்
நாடறியப் பேரறிவாய்
தேவர்க்கும் முனிவர்க்கும்
சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும்
எழிற்பரையை வணங்குவோம்.

அறிஞர்கள், கலைஞர்கள், முத்தமிழ் வித்தகர்கள், வீரசைவப் பெருமக்கள் வாழும் அளவெட்டி வடக்கு தவளக்கிரிப்பதியில் எம் முத்துமாரியன்னை எழுந்தருளி அருளாட்சி செய்து வருகிறாள். அமைதி மிகுந்த சூழலில் அதிகாலை வேளையில் ஓம் என்னும் ஓங்கார மந்திரத்தின் இனிய ஒலியும், நாதஸ்வர கலைஞர்கள் எழுப்பும் மங்கல நாதமும் அதிகாலை வேளையில் ஒலித்து மக்கள் உள்ளங்களில் ஆனந்தப் பிரவாகத்தை ஊட்டும். தன்னை நாடிவரும் பக்தகோடிகளின் துயர் துடைப்பவளாக அன்னை அருள் கோலத்துடன் தவளக்கிரிப் பதியில் தனியாட்சி செய்கிறாள்.

தன் குழந்தைகள் எங்கு வந்தாலும் அவர்களின் துயர்துடைக்க தன் கரங்களை நீட்டி அணைப்பவர் எம் முத்துமாரி அம்மா. அரசியல் சூழ்நிலையால் அவளைச் சுற்றி வாழ்ந்த அவள் பிள்ளைகள் புலம்பெயர்ந்த பொழுதும், அவள் நல்வாழ்விற்காக திருவருள் பாலித்து அவர்கள் வாழ்வின் உற்றாத் துணையாக வீற்றிருப்பவள் எம் காவல் தெய்வம். தன்பிள்ளைகளின் அமைதியான வாழ்வுகண்டு பூரிப்பவள் எம்தாய்.

கடந்த 25 வருடங்களாக அவளின் அடியார்கள் அளித்த கட்டுத்தேரில் அமர்ந்து தன்னை நாடிவரும் அடியவர்க்கு அருள் பாலித்தாள். தாயை அலங்காரத் சித்திரத்தேரில் எழுந்தருளச் செய்து திருவருள் பாலிக்கும் காட்சியை தரிசிக்க நாம் கடந்த 25 வருடங்களாக முயன்றோம். இதுவரை காலமும் பக்தர்களின் நலன்கருதி அன்னை ஆடம்பரத்தை வேண்டாதிருந்தாள். இடைவிடாது தம் பக்தர்களின் வேண்டுகோளுக்கு கருணை கூர்ந்து திருவருள் செய்தாள். இந்த திருப்பணி ஆரம்பித்து எதுவித தடங்கல்களும் இன்றி ஒருவருடத்துக்குள் பூர்த்தியடைந்தமை அவளின் திருவருள் அன்றோ.

1990 ஆம் ஆண்டு தொடங்கிய தமிழர் இருண்ட வாழ்வின் காலகட்டத்தில் அன்னை அன்றாட நித்திய வழிபாடுகள் அருகியதை அறியமுடியாத நிலையில் இருந்தோம். இச்செய்தியை 2001 ஆம் ஆண்டு இலண்டனில் புலம்பெயர்ந்து வாழும் அன்னையின் பக்தர்கள் மூலம் அறிந்தோம். எமது இடைவிடாத முயற்சியாலும் அன்னையின் திருவருளாலும் இன்று முக்காலப் பூசை நியமம் தவறாமல் நடக்கிறது. மாதத்தில் வரும் பௌர்ணமியிலும், மகோற்சவ காலங்களிலும் ஆலயத்தில் அன்னதானம் நடைபெற அவள் திருவருள் பெற்று ஒழுங்குகள் செய்துள்ளோம். அன்னை எம்மை சமுதாயப் பொதுப்பணிகளிலும் ஈடுபடுத்திவருகிறாள். ஆலய வளர்ச்சி அல்ல எம் நோக்கம். அன்னையும் அதை விரும்பமாட்டாள். மக்கள் சேவையே எம் தலையான குறிக்கோள். அன்னை அலங்காரத் தேரில் பவனிவரும் இந்தத் திருநாளில், அன்னையின் அருள் கொண்டு அளவெட்டி மக்களுக்கு எம்மால் சேவையை செய்ய முனைவோம் என்று உறுதியளிக்கிறோம். நாம் கேட்டதை செயல் வடிவாக்கிய ஆலய பரிபாலனசபையினரை நான் வாழ்த்துகிறேன்.

இன்றைய இக்கட்டான சூழ்நிலையிலும் மனம் சோராமல் மனசுத்தியோடு அன்னைக்கு திருப்பணி செய்த அனைவருக்கும் என்பணிவான வணக்கங்கள்.

"அம்பிகையை சரண் புகுந்தால் எல்லாம் பெறலாமே"
"தென்னாடுடைய சிவனே போற்றி, எல்லோருக்கும் இறைவா போற்றி"
"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"வணக்கம்

வ. வைரமுத்து
செற்குழுத் தலைவர்
அளவெட்டி வடக்கு, தவளக்கிரி முத்துமாரியம்மன் ஆலய
அறக்கட்டளை இலண்டன்.
தலைவர்
அளவெட்டி வடக்கு, சீனன்கலட்டி ஞானோதய வித்தியாலயம்
(மாணவர், பெற்றோர், ஆசிரியர், நண்பர்கள் சங்கம் (இலண்டன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி வடக்கு தவளக்கிரி ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய இலண்டன் அறக்கட்டளைப் பொருளாளர். திரு. அ. வயிரவமூர்த்தி அவர்களின்

வாழ்த்துச் செய்தி

அண்டமெங் கும்நிறைந் தாருயிர்க் குயி ராகி
ஆண்டருள் தேவி நீயே
அன்னையாய்க் கன்னியாய் அன்புநிறை சக்தியாய்
ஆதரிப் பவளு நீயே
கண்டுதேன் பால்கனிச் சாறென்றி னித்திடக்
கருணைசெய் பவளு நீயே
கண்களோ ராயிரங் கொண்டுலகி னுயிரினங்
காக்குமெய்ப் பொருளும் நீயே
மண்டுபிணி யானசின் னம்மைமுத லம்மையாம்
மகாகொடிய வெப்புநோய்கள்
மாற்றிடுந் தெய்வமாய்ப் போற்றுநல் லடியர்க்கு
வரமுதவு மாரி யனையே
திண்டிறற் பெருவாழ்வு கொண்டிடப் பாடுமிச்
சிறியனைக் காப்ப தென்றோ
தேங்குபுவ ழளவைசீர் தாங்குதவ ளக்கிரித்
தேவிமக மாரி யுமையே.

எங்கள் குலதெய்வமான அன்னையின் தாள் பணிந்து என் பணியை தொடங்குறேன்.

சகல வளங்களும் கொண்ட அளவையூர் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடபால் அமைந்துள்ளது. தவளக்கிரி என்னும் திருப்பதியில், அமைதிமிக்க சூழலில் ஓம் என்னும் ஓங்கார மந்திரம் ஒலிக்க எங்கள் குலதெய்வம் முத்துமாரிஅன்னை எழுந்தருளியுள்ளாள். அன்னையின் திருவிளையாடல் பற்றி கருணபரம்பரையாக வரும் சரித்திரச் சான்றுகள் அனேகம்.

அன்னை இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் இன்றும் வளர்த்து வருகிறாள். அளவை மக்களின் காவல் தெய்வம் அவளே. நாகங்கள் வாழும் அந்த மண்ணில் விடம் தீண்டி இறந்தவர் இன்றளவும் எவரும் இல்லை. தன்னை நம்பி சரண் அடைந்தோரை கைகொடுத்து தூக்கிவிடுபவள் அவள். திருவிழா காலங்களில் அன்னை பவனிவந்த இரதம் 1980 ஆம் ஆண்டுகளில் முற்றாக சேதம் அடைந்தது. அன்னை கட்டுத்தேரில் பவனிவரும் காட்சி கடந்த இருபது வருடங்களாக அன்னையின் அடியார்களின் மனத்தை உறுத்தியது.

இலங்கைத் தமிழர் வாழ்வின் இருண்ட காலம் 1990 களில் தொடங்கியது. ஆலயத்தை சுற்றி வாழ்ந்தோர். புலம் பெயர்ந்தார்கள். இக்காலக்கட்டத்தில் அன்னையின் மூன்று கால நித்தியபூசை ஒரு காலப் பூசையாயிற்று. அதுவும் தொரடமுடியாமல் இருந்த காலமான 2001ஆம் ஆண்டு சிவநேசன் ஆசிரியரின் தொடர்பு விடிவெள்ளிபோல் எமக்கு கிடைத்தது.

அவள் அருளால் அன்றே தொடங்கிய திருப்பணி விரிந்தது. அன்னை எம்மைக் கொண்டு பல சமுதாயப் பணிகளையும் தொடங்கி வைத்துள்ளாள். தன்னை நினைப்போரின் வாழ்வு வளம் பெறும் வண்ணம் தவளக்கிரித் தலத்தில் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கிறாள். தன் பக்தர்களை கஷ்டப்படுத்தி தனக்கு சித்திரத்தேர் அமைப்பதை அவள் விரும்பவில்லை. அவளின் குழந்தைகள் "அம்மா" சித்திரத்தேரில் பவனிவந்து அருளும் காட்சியை காண விளைந்தார்கள்.

எங்களின் வேண்டுகோளுக்கு செவிசாய்ந்து பலமுறை தடைப்பட்ட இத்திருப்பணி ஆரம்பிக்க கடந்த வருடம் திருவருள் பாலித்தாள். காலத்துக்குள் பூர்த்தியானது விந்தையிலும் விந்தையே. தன் குழந்தைகளின் நலத்தை பேணுபவள் தாய். அதற்காக கிராமத்தில் வாழும் மக்களின் நலன் கருதி எம்மை அறப்பணிகளிலும், ஈடுபடவைத்துள்ளாள்.

இந்த நல் நாளில் எமக்கு ஆதரவு தந்து பொருளுதவி நல்கிய அன்னையின் அடியவர்களுக்கும், வெளியூர் அன்பர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அத்தோடு இத்திருப்பணியை இனிதே நிறைவேற்றிய பரிபாலன சபையினருக்கும், அவர்கள் இந்தப் பணியை இனிதே நிறைவேற்ற உதவிய அனைவருக்கும் எனது நன்றிகளும் பாராட்டுக்களும். மேலும் அவர்கள் நற்பணி தொடர இந்த நல்லாளில் வாழ்த்துகிறேன். அவர்களுக்கு அன்னை என்றும் துணையிருப்பாள்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

"அம்பிகையை சரண் அடைந்தால் அதிக வரம் பெறலாமே"

நன்றி
வணக்கம்

அ. வயிரவமூர்த்தி
பொருளாளர்
அளவெட்டி வடக்கு
தவளக்கிரி முத்துமாரியம்மன் ஆலய
அறக்கட்டளை இலண்டன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அளவெட்டி மக்கள் சங்கத் தலைவரும்,
இலண்டன் அறக்கட்டளைப் பாதுகாவலருமான
உயர்திரு. க. நற்குணம் அவர்களின்

வாழ்த்துச் செய்தி

"அன்பும் அறமும் உயிரெனக் கொண்டால் அதுதான் ஆனந்தம்"

உங்கள் தொண்டு போற்றக்கரியது. இந்த இன்பகரமான வேளையில், மக்கள் சங்க உறுப்பினர்களும் உங்களில் ஒருவராக கலந்து கொள்ள முடியவில்லையே என்ற துயரம் எம்மை வாட்டுகிறது. அன்னையின் பெயரால் ஆலயப் பரிபாலன சபையினர் ஆரம்பிக்கும் முயற்சிகள் மக்கள் சங்கம் ஆதரவளிக்கும். உங்கள் சேவை மக்களிடையே வரவேற்கத்தக்க மாற்றங்களை உண்டாக்கும். அவை ஆன்மீகத்தையும், மனிதநேயத்தையும் கிராம மக்களிடையே வளர்க்கும் என்பதில் எமக்கு ஐயமில்லை. நீங்கள் கிராம மக்களின் நல்வாழ்விற்காக ஆரம்பிக்கும் எந்த முயற்சிக்கும் நாமும் உங்களுடன் ஒருவராக கலந்து அதற்கு தோள் கொடுப்போம். அதற்கு எங்கள் முத்துமாரி அம்மா என்றும் துணைபுரிவாள். இப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் எம் மனமார்ந்த வாழ்த்துக்களும், நன்றிகளும் உரித்தாகட்டும்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

நன்றி
வணக்கம்

க. நற்குணம்
தலைவர்
அளவெட்டி மக்கள் சங்கம் (இலண்டன்)
பாதுகாவலர்
அளவெட்டி வடக்கு,
தவளக்கிரி முத்துமாரியம்மன் ஆலய அறக்கட்டளை இலண்டன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய அறங்காவல் தலைவரும் (பாரீஸ்)
நெறியாளரும், சைவப்பெருந்தகையும், சிவனருட் செல்வருமான
உயர்திரு. வ. சந்திரசேகரம் அவர்களின்

வாழ்த்துச் செய்தி

அன்னையே அகலாண்ட கோடிகளென லாம்காக்கும்
அங்கயற் கண்ணி உமையே
அடங்காத மாரனெனும் அசுரன்கொடுங் கோலாட்சி
அழித்துத் தெய்வீக ஞானம்
உன்னுமவன் மகனாட்சி ஓங்கநல் வரமுதவி
உலகெலாம் வறுமை நீக்கி
ஊனொழுகு நோய்போக்கி வானமுயர் கம்பத்தில்
ஒளிர்கரக மீதமர்ந்து
பன்னக மணிந்தபரன் பாலித்த கலசத்தால்
படியளக்கும் செல்வியே
பாரோடு விண்மருவு தங்கரத மேறிவரும்
பரந்தாமன் மகிழ் தங்கையே
மன்னுநின் பணித் தொண்டர் எண்ணிய கைகூடி
மனங்குளிர வந்தருளுவாய்
வடஅளவைப் பதிதவளக் கிரிமேவு சிங்கார
மகா முத்து மாரித்தாயே.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் நிலைக்கு ஒருவர் உயர்ந்தார் என்றால் அதற்கு இன்றியமையாதது தன்னலமற்ற அன்பு. இந்த தன்னலமற்ற அன்பே மனித நேயத்தை இயல்பாக வேரூன்றச் செய்கின்றது. அன்பே சிவம். சிவத்தோடு ஒன்றியிருப்பவள் சக்தி. அருள் வடிவானவள் சக்தி.

அருள் வடிவமாக சக்தி தவளக்கிரிப்பதியில் எம் முத்துமாரியன்னையாக எழுந்தருளி அருளாட்சி செய்து வருகிறாள். முத்தமிழ் தனியாட்சி செய்வது தவளக்கிரிப் பதியில். மங்களகரமான இன்னிசையுடன் ஓம் எனும் ஓங்கார மந்திரத்தின் ஓசையும் ஒன்றாக கலந்து மக்கள் மனத்தில் பக்திப் பிரவாகத்தை உருவாக்குவது இப்பதியில்.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக அன்னை கட்டுத்தேரில் மகோற்சவ காலங்களில் எழுந்தருளி தன் பக்கதர்களுக்கு திருவருள் பாலித்தாள். அந்தக் குறையை அன்பர்கள் அன்னையின் அருள்பெற்று ஒருவருடத்துக்குள் பூர்த்தி செய்தமை போற்றற்கரியது.

எம்மிடம் ஒற்றுமை மலரவேண்டும். மனிதநேயம் செளித்து வளரவேண்டும். அந்த ஒற்றுமையை, மனிதநேயத்தை, தம் பக்தர்களிடம் இனபேதமின்றி வளர்ப்பவள் எம் அன்னை. அந்த அன்னைக்கு புதிய சித்திரத்தேர் அமைந்து அதில் அன்னை எழுந்தருளி அடியார்களுக்கு, திருவருள் பாலிக்கும் காட்சியைக் காண திருவருள் எனக்கு கிடைக்கவில்லையே என மனம் வருந்துகின்றேன்.

இப்புனிதமான தெய்வீகத் திருப்பணியிலே பங்கு பெற்ற ஸ்தபதிகள், பரிபாலன சபையினர், நிதியுதவி, சரீர உதவி செய்த அன்பர்கள் எல்லோரும், சகல சௌபாக்கியங்களையும் பெற்று என்றும் பேரின்ப பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல எம் முத்துமாரியன்னையை வணங்கி, எனது நல்லாசிகளை தெரிவிக்கின்றேன்.

அன்னையின் திருவருள் துணையோடு மனித சமுதாயத்துக்கு பலன் தரும் ஆக்கப் பணிகளில் தொடர்ந்தும் இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.
என் கடன் பணி செய்து கிடப்பதே.

நன்றி
வணக்கம்

வ. சந்திரசேகரம்
தலைவர்
ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம் பாரீஸ்
ஐரோப்பிய நாடுகள் தொடாபாளர்
அளவெட்டி வடக்கு,
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய அறக்கட்டளை இலண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி வடக்கு தவளக்கிரி ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய இலண்டன் அறக்கட்டளை கௌரவ பொதுச் செயலாளர் திரு. பொ. கணேஸ்வரன் அவர்களின்

வாழ்த்துச் செய்தி

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

'கொடிகளாட முடிகளாட
குடிபடை எழுந்தாட வரும் கலையழகே!
பிள்ளை உள்ளம் துள்ளும் வண்ணம்
பேரிகை கொட்டி வர
மத்தளமும் சத்திமிட வாரயம்மா....!
செங்கையில் வண்டு கலின் கலின் என்று
ஜெயம் ஜெயம் என்றடா - இடை
சங்கதமென் சிலம்பு புலம்பொடு
தண்டை கலந்தாட - இரு
கொங்கை கொடும்பகை வென்றவென்று
குழைந்து குழைந்தாட - மலர்
பங்கயமே உன்னைப்பாடிய பிள்ளை முன்
நிலவு எழுந்தாட....!

விரைந்து வாராயோ! எழுந்து வாராயோ!
கனிந்து வாராயோ!

காளி பயங்கரி சூலி மதாங்கினி!
கண்களில் தெரிகின்றாள்
கண்கள் சிவந்திடும் வண்ணம் எழுந்தொரு
காட்சியைத் தருகின்றாள்!
வாழிய மகன் இவன் வாழிய என்றொரு
வாழ்த்தும் சொல்கின்றாள்."

அன்னையின் திருப்பாதம் பணிந்து என் பணியை தொடங்குகிறேன்.

சகல வளங்களும் அமைந்த அளவையூர் என்னும் அழகிய கிராமம் தமிழ் ஈழத்தின் வடபால் அமைந்துள்ளது. அக்கிராமத்தின் ஆன்மீக வளர்ச்சிக்கும், மனித நேயத்தையும் பறைசாற்றுவது போல தொன்மையும் சரித்திரப் பிரசித்தி பெற்ற நான்கு விநாயகர் ஆலுயங்களும், வடக்கிலும் தெற்கிலும் காவல் தெய்வமாக மாரியம்மன் ஆலயங்களும் அமைந்துள்ளன. வீரசைவம் வளர்ந்த தவளக்கிரி என்னும் திருப்பதியில், அமைதிமிக்க சூழலில் ஓம் என்னும் ஓங்கார மந்திரம் எந்நேரமும் ஒலிக்க காவல் தெய்வமான முத்துமாரி அன்னை எழுந்தருளியுள்ளாள். தன்னை தஞ்சமடைந்த தன்குழந்தைகளின் குறைகளை போக்க அன்னை அன்றாடம் நடாத்திய திருவிளையாடல் பற்றி கரணபரம்பரையாக வரும் சரித்திரச் சான்றுகள் அனேகம்.

உலகெங்கும் வேதகாலம் தொட்டு பெண் தெய்வ வழிபாடு நிலவியதற்கு சான்றுகள் பலவுண்டு. தாய் வழிபாடு இந்து மதத்துடன் பின்னிப்பிணைந்தவொன்று. தமிழ் மக்கள் வாழ்வில் பெண் தெய்வ வழிபாடு அவர்கள் இரத்தத்துடன் கலந்த ஒன்று அன்னையை பலவுருவங்களில், பலபெயர் சொல்லி வழிபடுவார்கள் இந்துக்கள். உயிர்கள் தாயின் உதிரத்தில் இருந்துதான் தோன்றியது என்பதை எவரும் மறக்கவோ, மறைக்கவோ முடியாது. அந்த வகையில் இறைவனை, பெண்ணாக உருவகித்து வழிபட்டவர்கள் இந்துக்கள். இந்த வகையில் தமிழ் மக்கள் சமூக வாழ்வில் பெண்ணுக்கு முன்னுரிமை கொடுத்து, தாம் பிறந்த நாட்டை தாய்நாடடென்றும், தம் தாய் பேசிய மொழியை தம் மொழியாகப் கொண்டு தாய்மொழியென்றும், தாம் வாழும் பூமியை தாய் என்றும், கல்வி, செல்வம், வீரம் என்பனவற்றை முறையே சரஸ்வதி, இலஷ்சுமி, துர்க்கையென்றும் வழிபடுகிறார்கள்.

வாழ்வில் எம்மோடு ஒன்றாக கலந்திருப்பவள் பெண். அவளை தாயாக போற்றி தம் குலதெய்வமாக வழிபட்டு வருவோர் தவளக்கிரிப் பதி வாழ்மக்கள். தவளக்கிரி கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் அன்னையை குலதெய்வமாக வழிபட்டவர்கள், சுழிபுரம், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மக்கள் என்பதை கர்ணபரம்பரையாக வரும் செய்திகள் மூலம் நாம் அறியக்கூடியதாகவுள்ளது. ஆயினும் தவளக்கிரி மக்களுக்கும், பன்னாலை கிராமத்தவர்களுக்கும் அவள் குலதெய்வமாக விளங்கினாள். மாவை காவடிச் சிந்துகளில் காத்வராயர் கோயிலில் இருந்து காவடி எடுத்துச் சென்றதாக செய்திகள் உண்டு. இன்றும் பலருக்கு காத்தவராயர் கோயில் என்றால்தான் புரியும். இன்றும் காத்தவராயர் உற்சவ மூர்த்தி ஆலயத்தில் உள்ளது.

இப்பகுதியில் முத்தமிழான இயல், இசை, நாடகமும், சிற்பம், சித்திரம், நுண்கலைகள் யாவும் சிறப்புற்று வளர்ந்தன. முத்துமாரி அன்னையின் அருள்பெற்ற கலைஞர்கள் உலக அரங்கில் தம்பெயர்களை பொறித்துள்ளார்கள். மகோற்சவ காலங்களில் எழுந்தருளி பவனிவந்த இரதம் 1984 ஆம் ஆண்டு முற்றாக சேதமடைந்தது. அன்னைக்கு புது இரதம் செய்ய சுபவேளை பார்த்து ஆரம்பித்த திருப்பணிகளுக்கு அன்னையின் திருவருள் கிடைக்கவில்லை. புலம் பெயர்ந்து வாழும் தன் பக்தர்களின் பாதுகாப்பையும், நலனையும் கருதி தனக்கு ஆடம்பரங்கள் தேவையில்லையென இருந்தாள் எம் தாய். தனக்கு அன்போடு தன் அடியார்கள் கட்டும் கட்டுத்தேரில் பவனி தன் செல்வங்களின் நலன் காக்க திருவருள் பாலித்து வந்தாள்.

தான் கட்டுத்தேரில் பவனிவருவதைக் கண்டு பரிதவிக்கும் பக்தர்களின் மனம் குளிர இரதம் அமைக்கும் பணிக்கும் திருவருள் பாலித்தவளும் அவளே. இத்திருப்பணி தொடங்கி ஒருவருட காலத்திற்குள் பூர்த்தியானமை விந்தையிலும் விந்தையே. இத்திருப்பணி இனிதே நிறைவேற முன்னின்று உழைத்த அத்தனை பேருக்கும் இலண்டன் அறக்கட்டளைச் செயலாளர் என்ற முறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி கூறக் கடமைப்பாடுடையேன். ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக நன்றி கூறமுற்பட்டால், நான் பலரை தவறவிட்டு அன்பர்களின் மனக்குமுறல்களை சந்திக்க நேரிடும். ஆகையால் அன்னையின் சேவையில் அல்லும் பகலும் அயராது உழைத்த அனைவருக்கும் என வணக்கங்கள்.

"கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல்"

பரிபாலன சபையினர் தாம் எடுத்துக் கொண்ட திருப்பணியில் பல எதிர்ப்புக்கள், தடைகள் வந்தபோதும் மனம் சோர்வடையாமல் தாம் எடுத்துக் கொண்ட பணியை சிறப்பாக செய்து முடித்துள்ளமை பாராட்டிற்குரியது. அவர்களுக்கு என் நன்றிகளை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

"சொல்லுதல் யாவர்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

இலண்டன் செயலாளர் என்ற வகையில் நான் சொல்லுவது எளிது. அத்தனையும், நாம் சொல்லியபடி செய்து முடித்த உங்களை வாழ்த்த எனக்கு சொற்கள் கிடைக்கவில்லை. எனினும் எம் எண்ணப்படி நடந்து துன்பங்களையும், துயர்களையும் பொருட்படுத்தாமல் செயலாற்றிய ஒரு சிலரை நான் இங்கே குறிப்பிடாவிட்டால் நன்றி கொன்றவன் ஆவேன். அன்னை சித்திரத்தேரில் எழுந்தருளி வரும் காட்சியைக் காண அயராது அல்லும் பகலும் உழைத்த சைவப்பெருந்தகையும், சிவநேயச்செல்வருமாகிய பரிபாலனசபைத் தலைவர், உயர். திரு. சின்னத்தம்பி அண்ணருக்கு வயதில் சிறியவனான என் பணிவான வணக்கங்கள். அவர் சகலதும் பெற்று நீடுழி வாழ அன்னை என்றும் திருவருள் பாலிப்பாள். அத்தோடு என்றும் மனம் கோணாது உழைத்த சாந்தமே உருவான தம்பி செந்தில்நாதன், எல்லோரையும் அனுசரித்து செல்லும் நிகேதன், ஆயத்தின் வளர்ச்சியே தன் வாழ்வின் இலட்சியமாக நாளும் ஓடியாடி உழைக்கும் சகோதரி சந்திரிகா இவர்களுக்கு எப்படி நான் நன்றியை தெரிவிக்கப் போகிறேன். அவர்களுக்கும் என் நன்றிகள் உருவாகட்டும் அத்தோடு வடிவேலு அண்ணர், எனது அண்ணன் சிவனேசன் ஆசிரியருக்கு இம்மலர் வாயிலாக நன்றியை தெரிவிகின்றேன். இன்று இலண்டனில் அன்னைக்கு ஒரு அறக்கட்டளை ஒருவாக்கியதத்திற்கு மூலகாரணம் சிவநேசன் ஆசிரியர் என்பதை எல்லோரும் அறிந்ததே. சாந்தமே உருவான அவர் என் தமையனாராக இருக்கலாம். ஆனால் அவர் அன்று கடைப்பிடித்த நிதானமான போக்குத்தான் இன்றைய எம்வெற்றி. முதல்கண் அவருக்கு அறக்கட்டளை சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"இன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை"

முடிவில் இனிதே முடிக்க உறுதுணையாகவிருந்தோர் இருவர். அவர்களை அடையாளம் கண்டு பிடித்து வாழ்வதோடு, அல்லாமல் அன்னையின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திப்பதும் என தலையான கடன். அவர்கள் வேறு யாருமல்ல. தம்பி செந்தில்நாதனும், சகோதரி சந்திரிகாவும் தான். அவர்கள் நல்வாழ்வுக்கு அன்னையிடம் பிரார்த்திக்கின்றேன்.

இலண்டன் அன்னையின் அறக்கட்டளையின் பணிகள் இத்துடன் முடிவில்லை. அதன் ஆரம்பச் செயல்பாடுகளே இவையனைத்தும் நம்மிடம் ஒற்றுமை உணர்ச்சியும், மனிதநேயமும் இல்லாமல் போனால் சைவ ஆலயங்களும், தமிழ் கலை கலாச்சாரங்களும் எந்த நாட்டில் இருந்து காலப்போக்கில் மறைந்துவிடும். இன்றைய தலைமுறையினர், பதவிகளையும், பொருள் பெருக்குவதையும் குறிக்கோளாகக் கொண்டால் நாம் மீண்டும் அழிவுப் பாதையில் தான் செல்ல நேரிடும். நாம் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் ஒற்றுமையில்லாமல் எம்மைச் சுற்றி வாழ்பவர்களிடம் ஏற்றத் தாழ்வுகளைப் பார்ப்போமானால் இன்று மீண்டும் தழைத்துவரும் மனிதநேயத்தைப் போதிக்கும் சைவநெறி அழிந்துவிடும். கிறிஸ்தவ மதகுருமார் மக்களோடு ஒன்றிப் பிணைத்து அவர்கள் துன்பங்களிலும், கவலைகளிலும் பங்கேற்கிறார்கள். அதனாலன்றோ இன்று கிழக்கில் அதிவேகத்தோடு கிறிஸ்தவம் பரவுகிறது. அங்கு யேசுநாதர் அருள்வாசகங்கள் அவர்களை கவரவில்லை. மனிதநேயம் தான் அவர்களை கவர்கிறது. இங்கே கிடையாததை அவர்கள் அங்கே பெறுகிறார்கள்.

எனவே ஆலயங்கள் அன்பையும், அறிவையும், அறநெறியையும் வளர்க்கும் அமைப்புக்களாக தொண்டு செய்யும் மனப்பான்மை கொண்டவைகளாக மாறவேண்டும். அதற்காக எம்மை மாற்றவேண்டும். எந்த மாற்றத்தையும் எதிர்கொள்ளும் துணிவு எமக்கு வேண்டும். மனித நேயத்தை வளர்ப்பது சைவநெறி. அதற்காக நாம் உழைக்க வேண்டும். ஒவ்வொருவரும் இக்குறிக்கோளுடன் உழைப்பார்களானால் சைவநெறி தானாக மலரும். உழைப்பினால் வரும் ஊதியத்தை பற்றி கவிஞர் கண்ணதாசனின் கூற்றைப் பாருங்கள்.

தெய்வம் இருப்பது எங்கே?
தெளிந்த நினைவும் சிறந்த நெஞ்சம்
நிறைந்ததுண்டோ அங்கே!
எண்ணும் எழுத்தும் நிறைந்தவர் நெஞ்சம்
இறைவன் திகழும் வீடு.
இசையில் கலையில் கவியில் மழலை
மொழியில் இறைவன் உண்டு!
இவைதான் தெய்வம் என்பதை அறிந்தால்
ஏற்கும் உனது தொண்டு!

இதற்கு உதாரணம் உங்களுக்கே நன்றாகத் தெரியும். இன்று எழும்பியிருக்கும் அழகுத் சித்திரத் தேர், ஆலயத்தில் புதிதாக எழும்பிவரும் சிறுவர் முன்பள்ளி அத்தோடு அன்னையின் பெயரால் நடக்கும் அறத்தொண்டுகள்தான் முக்கிய காரணங்கள். முத்துமாரி அம்மன் ஆலயம் எங்கே என்று கேட்பவர்க்கெல்லாம் இதோ நான் இருக்கிறேன். அளவெட்டி மக்களுக்கும், அதன் அயல் ஊர்களுக்கும் கலங்கரை விளக்குப் போல் எழுந்து காட்சிதருகிறாள். எம்மை ஒதுக்கியவர்களும் எம்மை நாடிவரும் நாள் அதிதூரத்தில் இல்லை. கடந்த மூன்று வருடங்களில் அன்னையின் முத்திரையை எம் கிராமத்திலும், அயல் கிராமங்களிலும் பொறித்துவிட்டோம். உங்களிடம் தன்னம்பிக்கை மேலும் வளர அவள் அருள்பாலிப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம் ஒரு பெண்ணால் இன்று இந்த நிலைக்கு உயர்ந்திருக்கிறது. அறச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தன்னை நாடி வருபவர்களுக்கு அரும் சகோதரியாக, அன்னையாக அன்பும் ஆதரவும் காட்டுகிறார்கள். தீரா நோய்களை அன்னை துர்க்காதேவி தீர்ப்பாள். என்பர்க்கு ஆதரவு கொடுத்து அவர்களின் பாதிக்குறைகளை எம் கண்கண்ட தெய்வமான அறச்செல்வி தீர்த்துவிடுகிறார்கள். அவர்களை முன்மாதிரியாக கொண்டு நாமும் செயல்படுவோம் என்ற உறுதியை அன்னையின் பக்தர்களான நாம் அனைவரும் இந்த நல்நாளில் உறுதி கொள்வோம்.

ஆலயம் ஆலயம் ஆலயம்
கோயில் என்பதும் ஆலயமே
குடும்பம் என்பதும் ஆலயமே
நாணயம் என்பதம் ஆலயமே
நன்றியும் இறைவன் ஆலயமே.
உழைக்கும் கைகள் எங்கே!
உண்மை இறைவன் அங்கே!
அணைக்கும் கைகள் யாரிடமோ!
ஆண்டவன் அவரிடமே!

உங்கள் சேவை போற்றற்கரியது. இந்த மகிழ்ச்சிகரமான வேளையில், நாமும் உங்களில் ஒருவராக கலந்து கொள்ள முடியவில்லையே என்ற கவலை எம்மை வாட்டுகிறது. அன்னையின் பெயரால் ஆலய பரிபாலனசபையினர் தொடரும் முயற்சிகள் கிராம மக்களிடையே வரவேற்கத்தக்க மாற்றங்களை உண்டாக்கும். அவை எங்கள் கலை கலாச்சார, ஆன்மீக, சமூகவாழ்வியல் வளர்ச்சிக்கும் துணைபுரியும். அதற்கு எங்கள் முத்துமாரி அம்மா என்றும் துணைபுரிவாள்.

முத்துமாரியம்மா

திருச்சிற்றம்பலம்

உலகத்து நாயகியே! - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
உன்பாதம் சரண்புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
கலகத் தரக்கர் பலர் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
கருத்தினுள்ளே புகுந்துவிட்டார் - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி!
பலகற்றும் பலகேட்டும் எங்கள் முத்துமாரி!
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
பயனொன்று மில்லையடி - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
நிலையெங்கும் காணவில்லை - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
நின்பாதம் சரண்புகந்தோம், - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
துணிவெளுக்க மண்ணுண்டு, எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
தோல்வெளுக்கச் சாம்பருண்டு - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
மணிவெளுக்கச் சாணையுண்டு, - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
மனம் வெளுக்க வழியில்லை, - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
பிணிகளுக்கு மாற்றுண்டு, - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
பேதைமைக்கு, மாற்றில்லை - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
மாரியம்மா எங்கள் முத்துமாரி!
அடைக்கலமி குனைப்பு குந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்துமாரி!

திருச்சிற்றம்பலம்

அன்னைக்கு எடுக்கும் இந்த இரதோற்சவ வைபவம் அன்னையின் திருவருளால் இனிதாக நடைபெற அன்னையை பிரார்த்தித்து இதற்காக உழைத்த உங்கள் அனைவரையும் வாழ்த்தி மகிழ்கிறேன். தாங்கள் அறப்பணிகளுக்கு என்றும் துணையாக இருப்போம்.

"அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு"
"அன்னையை சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாமே"
"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

நன்றி
வணக்கம்

பொ. கணேஸ்வரன்
கௌரவ பொதுச் செயலாளர்
அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரியம்மன்
ஆலய அறக்கட்டளை அளவெட்டி வடக்கு, சீனன்கலட்டி
ஞானோதய வித்தியாலயம் மாணவர், பெற்றோர், ஆசிரியர், நண்பர்கள்
சங்கம் (இலண்டன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவாயநம
அம்பிகை துணை

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபை (Regd. No. HA/5/JA/189)

தலைவர் திரு. க. சின்னத்தம்பி , காரியதரிசி - திரு. தா. நிகேதன், தனாதிகாரி - செல்வி மு. சந்திரிக்கா
தேர்த் திருப்பணிச் சபைச் செயலாளர் திரு. சி. செந்தில்நாதன்

அளவெட்டி வடக்கு தவளக்கிரி ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய பரிபாலனசபை, தேர்த்திருப்பணிச் சபைத் தலைவரின்

வாழ்த்துச் செய்தி

எல்லா வளமும் வாய்க்கப் பெற்ற யாழ் குடாநாட்டில் வடக்கே சிறப்புடன் திகழும் கலையூராம் அளவையம்பதியின் காவல் நாயகியாய் வடக்கு எல்லையில் வீற்றிருந்து எமக்கெல்லாம் அருள் பாலிக்கும் முத்துமாரித் தாய்க்கு சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெறத் திருவருள் எமது காலத்தில் கிடைத்தமையையிட்டு அளவற்ற மகிழ்ச்சியடையும் அடியவர் குழாத்தில் நானும் இணைந்து கொள்வதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பல ஆண்டுகள் செய்த தவத்தின் பயனாய் அன்னையின் இத்திருப்பணி இனிது நிறைவு பெற்றதை இட்டு மகிழ்வுறுவதுடன் கலைத்திறன் மிக்க இளம் கலைஞன் ஆறுமுகம் சிற்பாலய ஸ்தபதி ஜீ. ஜெயப்பிரகாஸ் அவர்களினதும் அவர் தம் குழுவினர்களினதும் கைவண்ணத்தில் உருப்பெற்ற இத்தேர் எழிலுடன் விளங்குகின்றது.

இத்தேரில் தவளக்கிரி அன்னை எழுந்தருளி வரும் காட்சியை காணப்பெற்றவர்கள் பெரும் பாக்கியசாலிகள் ஆவர்.

இத்திருப்பணி சிறப்புடன் நடைபெற எம்முடன் நின்று உழைத்த, ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் ஒருமித்து நன்றி கூறிக்கொள்வதுடன் எல்லாம் வல்ல தவளக்கிரி முத்துமாரித் தாயின் திருவருள் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்து அவள் தாழ் பணிகின்றேன்.

நன்றி

இறைபணிச் சேவையில்
க. சின்னத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய தேர் உபயகாரரின்

வாழ்த்துச் செய்தி

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மனுக்கு ஒரு சித்திரத் தேர் இல்லையே என்ற கவலை எங்களை மிகவும் வாட்டியது. எங்களாலியன்ற நிதி உதவி செய்து ஒரு சித்திரத் தேரை அன்னைக்கு உருவாக்க வேண்டும் என்ற உந்துதலின் காரணமாக தேர்த்திருப்பணிச் சபையுடன் தொடர்பு கொண்டு இதற்கான முயற்சிகளைச் செய்தேன்.

அன்னையின் அருளால் இப்பணி சீக்கிரம் கைகூடியது. இப்பணியில் தம்மை அர்ப்பணித்த அனைத்து திரு. திலிப்குமார் அவர்களுக்கும் தேர்த்திருப்பணிச் சபை பரிபாலன சபையினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறி வெள்ளோட்டம் சிறப்பாக நடைபெற வாழ்த்தி அமைகின்றேன்.

அ. யோகபரன்
(அவுஸ்திரேலியா)

நாம் எங்கு வாழ்ந்தாலும் எமக்கு வளமான வாழ்வு தரும் அன்னை முத்துமாரி

முத்துமாரி எங்கள் முத்துமாரி
தவளக்கிரி வதியும் முத்துமாரி
பத்து வயது முதல் முத்துமாரி - உன்
பக்கத்தே நான் இருந்தேன் முத்துமாரி
கத்தும் குரல் கேட்டு விட்டால் முத்துமாரி
கருணை மழை பொழிந்திடுவாய் முத்துமாரி
தத்தெடுத்து வளர்த்து விட்டாய் முத்துமாரி
தாயன்பு காட்டி நின்றாய் முத்துமாரி
சித்தமெல்லாம் உன் நினைவே முத்துமாரி - உன்
சிலையழகில்மனம் நிறைந்தேன் முத்துமாரி - உன்னை
சகடையில் இழுத்து வந்தோம் முத்துமாரி - மனம்
சங்கடமாய் இருந்ததம்மா முத்துமாரி
உன் விருப்பம் அறிந்து கொண்டு முத்துமாரி
உலகத்தார் நிதிதந்தார் முத்துமாரி
மணிமுடித்தேர் செய்து விட்டோம் முத்துமாரி
மனமெல்லாம் குளிர்ந்ததம்மா முத்துமாரி
மும்மாரி பொழிய வைப்பாய் முத்துமாரி
மூவுலகும் வாழ வைப்பாய் முத்துமாரி.

மாணிக்கம் சத்தியமூர்த்தி
பண்டிதர் மகன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உன் பாதம் தீண்டும் பாக்கியத்தைத் தந்த
எம் தாயே கோமகளே உன்னருள் இன்னருளாய்
என்றென்றும் எல்லோர்க்கும் கிடைத்திட வருள் செய்வாய்
தவளக்கிரிப் பதிவாழ் ஆனந்த வல்லியே

புதிய சித்திரத் தேரில் அருள் பாலிக்க இருக்கும்
தவளக்கிரி அன்னையின் தேரோட்டம்
சிறப்புடன் நிகழ வாழ்த்துகின்றோம்.

ஆலய உரித்துடைய பூசகர்
அமரர் சிவஸ்ரீ பசுபநாதன் ஐயா குடும்பத்தினர்

தினமும் உன் பாதம் சேவை செய்யும்
பாக்கியம் இசைந்த தாயே
வையத்துள் வாழ்வாங்கு வாழவைத்த தாயே
உன் பாதம் சரண் புகுந்தேன்
காத்தருள் தாயே

**எம் அன்னை அவள் புதிய தேரேறி உலாவரும் நன்னாள்
சிறக்க வாழ்த்துகின்றேன்.**

**திரு. வ. நகுலேஸ்வரன் குழுவினர்
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.**

எம் வாழ்வின் பொன்நாளாம் அன்னை அவள் தேரோட்டம்
என்றென்றும் காணாத காட்சியல்லோ இன்னாளாம்
எல்லோரும் இன்புற்று வாழ அருள் செய்பவளே
ஏழைகள் குறை தீர்த்தருள் தவளக்கிரித் தாயே
உன்பாதம் சரண்புகுந்தோம் காத்தருள்வாய் எமை நீயே



அன்னையினுடைய தேர்த்திருவிழா நன்னாள்
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

8 ஆம் திருவிழா உபயகாரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் கொண்ட கொள்கை அதில் நிலைபெற்று
நாளும் வளர்ச்சி பெற எம்முள் இருந்து
எமை வழிநடத்தும் உத்தமியே
உன் பாதம் சிரம்மேற் கொண்டு
தொடரும் எம் பணி சிறக்க அருள்வாய் – தாயே

**அளவையூர் நாயகியாம் தவளக்கிரி முத்துமாரி அன்னை
கலைநிறை சிற்பத் தேரில் பவனி வரும்
காட்சி காண ஆயிரம் கண் வேண்டுமல்லோ
அவள் தேரோட்டம் சிறந்திட வாழ்த்துகின்றோம்.**

அம்பாள் இந்து இளைஞர் சைவ நற்பணி மன்றம்

வடஅளவையூர், அளவெட்டி.

எம் குல நாயகியாம் தவளக்கிரியாள்
சித்திரத் தேர் ஏறி அருள் புரிந்து
வையத்துள் உள்ளவர்கள் துயர் துடைத்து
அருள் மழை பொழியும் நன்நாளை
என்னாளும் எம்மகத்தே காண்போமே

அன்னையவள் தேர்த்திருவிழா
சிறப்புடன் நடந்தேற வாழ்த்துகின்றேன்.

சுப்பிரமணியம் காமாட்சிசுந்தரம்
"கீர்த்தனா இல்லம்"

தெல்லிப்பழை பண்டத்தரிப்பு வீதி,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

நாதகானந்தன்னை என்நாவில் ஊட்டி
நாயகனாய் ஆக்கிய கோமகளே - பார் போற்றும் அன்னையே
நீ கொடுத்த அருங்கொடையால் உயர்வுற்றேன்.
என்றும் என்னுள் இருந்து எனை இசைவிப்பாய் தாயே

புதிய சித்தரத் தேரில் ஒய்யாரமாய் உலாவரும் அன்னையவள்
தேரோட்டம் சிறக்க வாழ்த்துகின்றேன்.

"சங்கீத நாதசாகரம்"
திரு. இ. கேதீஸ்வரன்

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில்
தொண்டர் சபையினரின்
வாழ்த்துச் செய்தி

கலைவளமும் ஏர்வளமும் சிறந்து விளங்குகின்ற அளவெட்டிக் கிராமத்தின் வடக்கு எல்லையில் அழகிற்கு ஒவ்வாத வல்லியாக தவளக்கிரிப்பதியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் உலகத்து நாயகியாம் எம் அன்னை முத்துமாரி அம்பிகை இருந்து வருவதற்காக அமைக்கப்பெற்ற சித்திரப் பெருந்தேரின் வெள்ளோட்டம் இன்று நடைபெறுவதை எண்ணும் போது அம்பிகை அடியவர்கள் அனைவரும் புளகாங்கிதம் கொள்ளாமல் இருக்க முடியாது. வெள்ளோட்டத்தில் தேரின் வடம் பற்றி இழுப்பவர்கள் அனைவரும் பெரும் பேறு பெற்றவர்கள் ஆகின்றனர். தேர்த்திருவிழா என்றாலே அப்பகுதியில் வாழுகின்ற இந்துக்கள் அனைவருக்கும் உணர்வு பூர்வமான பக்தித் திருநாளாகும். சிற்ப வேலைகள் நிறைந்த தேரில் அம்பிகையை வைத்து வீதிவலம், ஊர்வலம் வரச்செய்வது அவ்வூருக்குச் சிறப்பையும் புனிதத்தன்மையையும் அளிக்கின்றது.

அப்பர் சுவாமிகளால் கூறப்பட்ட கோயில் அமைப்புகளில் "கரக்கோயில்" என்பது தேர்வடிவமாக சக்கரங்களோடு அமைக்கப்பட்ட கோயிலும் ஒன்றாகும். எம்மன்னையின் திருத்தேரானது அழகிய கலையம்சம் பொருந்திய சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த முகபத்திர வேலைகளுடன் அமையப்பெற்ற திராவிட மரபுத் தேராகும். இத்தேரின் அடிப்பாகத்தில் பூலோகவாழ்க்கை, ஆகாயவாழ்க்கை, சுவர்க்க வாழ்க்கை ஆகியவற்றை சித்தரிக்கும் அழகிய உருவங்களை நாம் காணக் கூடியதாக இருக்கும். இத்திருத்தேரை உருவாக்கிய சிற்பிகள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

எம் அன்னையின் சித்திரத்தேர்த்திருப்பணியானது 1985ம் ஆண்டு அப்போதைய பரிபாலனசபை, தொண்டர்சபை ஆகியோரின் உள்ளங்களில் கருவாகி உதித்தது. இதற்கென இருபது அங்கத்தவர்களைக் கொண்ட தேர்த்திப்பணிச்சபை தேர் உபயகாரர் ஆ. இராமசாமி அவர்கள் தலைமையில் உருவாக்கப்பட்டது. அனைவரும் மிக வேகமாகச் செயற்பட்டு தேரிற்குத் தேவையான மரங்களில் எண்பது வீதமானவற்றை சேகரித்து 1985ம் ஆண்டு ஐப்பசி மாதத்திலிமைந்த விஜயதசமியில் நாள் வேலையை ஆரம்பித்தனர். நாள் வேலையை கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்கள் ஆரம்பித்து தொடர்ந்து சிலவேலைகள் நடைபெற்று வந்தன.

தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட குழப்பச் சூழ்நிலைகளினால் தேர் வேலை தொடர்வது சாத்தியமற்ற ஒன்றாகியது. 1992 இல் ஏற்பட்ட இடப்பெயர்வினால் சேகரித்த பலகைகளையும் மரங்களையும் முற்றாக இழக்க நேரிட்டது. எமது தவக்குறைவே, இத்தேரின் வெள்ளோட்டம் காண விளைந்த பலர் இன்று அமரத்துவம் எய்திவிட்டனர். தேர்த்திருவிழா உபயகாரரும் அப்போதைய தேர்த்திருப்பணிச் சபைத்தலைவருமாகிய மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்கள், அமரர் சி. சின்னத்துரை ஆசிரியர் அவர்கள், அமரர் இ. சோமசுந்தரம் அவர்கள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். 1985 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திருப்பணியானது கைவிடப்பட்ட நிலையில் மீண்டும் 2003 ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2005 ம் ஆண்டில் வெள்ளோட்டம் காணுவது அம்பிகை அடியவர்களுக்கெல்லாம் மனநிறைவு தரும் என்பது கண்கூடு இதற்கு முன்னின்று உழைத்த பரிபாலனசபையினர், தொண்டர்கள், லண்டன் நிர்வாகிகள், நிதி உதவிய அம்பாள் அடியார்கள் புலம் பெயர்ந்து வாழும் அம்பிகை அடியவர்கள் அனைவருக்கும் அம்பாள் திருவருள் கிடைக்க அவளின் திருப்பாதங்களை வேண்டுவோமாக.

"அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்"

தொண்டர் சபையின் சார்பில்
ந. துளசிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில்

தேர்த் திருப்பணிச் சபையின் அறிக்கை

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின் கொடி மென் கடிக் குங்குமத் தேயம் என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி எந்தன் விழித்துணையே.

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலயம் தெல்லிப்பளை பண்டத்தரிப்பு வீதியில் கீரிமலையின் தென்பால் அமைந்துள்ள மிகவும் பழைமையான ஆலயமாகும். இங்கு ஆனி உத்தரத்தில் வரும் தீர்த்தோற்சவத்தை முன்வைத்து முதல் 10 தினங்கள் வருடாந்த மஹோற்சவம் இடம்பெறுகின்றது.

இந்த ஆலயத்தில் இதுவரை காலமாக இருந்து வந்த சகடை வகையான கட்டுத்தேர் கடந்த கால அசம்பாவிதங்களினால் சேதமடைந்தது. எத்தனையோ தடவைகள் புதியதொரு தேரை ஆலயத்துக்கு நிர்மாணிக்க முயன்றும் முயற்சி கைகூடாமல்ப் போனமை நீங்கள் அறிந்த விடயமே. இந்த வகையில் எமது ஆலயத்தில் அன்னைக்குரிய தேரினை அமைக்க வேண்டுமென்ற எமது மூதாதையர்களின் செயற்பாட்டினையும் இங்கு குறிப்பிடுதல் எனது கடமையாகும்.

எமது புதிய திருப்பணிச் சபைக்கு முன்பு இடம்பெற்ற தேர்த்திருப்பணி விபரம்

புதிய தேர் ஒன்றை நிர்மாணிக்க விரும்பிய அடியவர்கள் 21-10-1984 இல் ஒரு ஆலோசனைச் சபையைக் கூட்டி இச்சபைக் கூட்டத்தின் பிரகாரம் 28-07-1985 இல் தேர்த்திருப்பணிச் சபைத் தெரிவுகள் இடம்பெற்றன. இதில் தேர்த்திருவிழா உபயகாரர் ஆறுமுகம் இராமசாமி ஆசிரியர் தலைமையில் 33 பேர் கொண்ட தேர்த் திருப்பணிச் சபை அமைக்கப்பட்டது.

இச்சபையின் தீர்மானப் பிரகாரம் தேர் நிர்மாண வேலைகள் ஸ்தபதி ஆறுமுகம் தம்பித்துரை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு 13-09-1985 விஜய தசமி அன்று சுபவேளையில் திரு. வைத்திலிங்கம் செகராசசிங்கம் அவர்கள் அன்பளிப்புச் செய்த மரம் வெட்டும் நிகழ்வுடன் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து அடியவர்கள் நிதியுதவியுடன் தேர் வேலைகள் இடம்பெற்று வருகின்ற வேளை 1992 இல் ஏற்பட்ட இடப்பெயர்வின் காரணமாக இப்பணி தடைப்பட்டமையை நீங்கள் யாவரும் அறிவீர்கள்.

எமது தேர்த்திருப்பணிச் சபையின் செயற்பாட்டு விபரம்

இதன் பின் 1997 ஆம் ஆண்டு மீண்டும் ஆலயத்திற்கு வந்து சேர்ந்த சந்தர்ப்பத்தில் தேர்த்திருபணிக்கென சேரிக்கப்பட்ட மரங்கள் உள்ளிட்ட பொருட்களில் பெரும் பகுதி அனர்த்தத்தினால் அழிவுக்குள்ளாகி இருந்த நிலையில் இப்பணியை உடன் ஆரம்பிக்க இயலாது சென்றது. (1997 தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரை பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயத்தின் உடைய சகடையையே தேர்த்திருவிழாவுக்கு பயன்படுத்தினோம்.) இருப்பினும் ஆலயச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு, மக்களில் பெரும் பகுதியினர் ஊர் மீண்ட நிலையில் 05-08-2003 ஆம் ஆண்டு அன்று இடம்பெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பரிபாலனசபையினரின் முயற்சியால் 07-09-2004 அன்று தேர்த்திருப்பணி சபைத் தெரிவுப் பொதுக்கூட்டம் அறிவிக்கப்பட்டு அக்கூட்டத்தின் தீர்மானப் பிரகாரம் புதிய தேர்த்திருப்பணிச் சபை உருவாக்கப்பட்டு திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையின் ஆலயத்தின் சில தோற்றக் காட்சிகள்



கட்டுத் தேரில் 2004 ஆம் ஆண்டு வரை அன்னை பவனி வரும் காட்சி

08-11-2003 அன்று புதிய தேரிற்கான நாள் வேலை ஆரம்பித்தல் காட்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02-06-2004 அன்று புதிய தேரிற்கான அச்சு வைத்தல் காட்சிகள்





25-03-2005 அன்று பவளக்கால் வைத்தல் காட்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07-07-2005 அன்று சிற்பாசாரியார்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகள்





"அளவை தவளக்கிரி அம்பிகை பொற்பாதம்
உளம் விரும்பி ஏத்தும் உரவோர் - வளமிகுந்த
வாழ்வு பெறுவார் வரம் பெறுவார் மாநிலத்தில்
ஊழ்வினையும் தீர்ந்தே உயர்வாழ்வு பெறுவார்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07-07-2005 அன்றைய வெள்ளோட்ட நிகழ்வுக் காட்சிகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்த்திருப்பணி வேலைகள் தொடர்பாக திருப்பணிச் சபையால் கூறப்பட்ட கூறு விலையின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட ஆறுமுகம் சிற்பாலயம் தெரிவு செய்யப்பட்டது. தொடர்ந்து 08-11-2003 அன்று இவர்களுடனான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு அன்றைய தினமே நாள் வேலை ஆரம்பிப்பு வைபவமும் இடம்பெற்றது.

25-12-2003 அன்று கூடிய கூட்டத்தின் பிரகாரம் தேர்க்கொட்டகை அமைப்பதற்கான கூறுவிலைகள் ஆராயப்பட்டு திரு. திலிப்குமார் அவர்களிடம் இக்கொட்டகை அமைப்பு வேலை ஒப்படைக்கப்பட்டது. 05-02-2004 தைப்பூச தினத்தன்று தேர்க்கொட்டகைக்கான அடிக்கல் நாட்டு வைபவம் வெகு சிறப்பாக இடம்பெற்றது. தொடர்ந்து தேர்க்கொட்டகை வேலைகள் சிறப்பான முறையிலே இடம்பெற்றது.

புதிய சித்திரத் தேருக்கான பூதப்பார் (அச்சு) வைத்தல் இந்நிகழ்வானது 02-06-2004 வைகாசி விசாக தினத்தன்று சுபவேளையில் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து தேர் வேலைகள் விரைவுபடுத்தப்பட்டு 25-03-2005 பங்குனி உத்தரதினத்தன்று அன்னையின் தேரிற்கான பவளக்கால் ஏற்றும் வைபவம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இக்காலப் பகுதியில் இருந்து ஆறுமுகம் சிற்பாலய ஸ்தபதி ஜீ. ஜெயப்பிரகாஸ் அவர்களினதும் அவர்தம் குழுவினரதும் அயராத முயற்சியின் பயனாய் ஏறத்தாள ஓராண்டு காலப்பகுதியில் பலவிதமான இன்னல்கள் கஷ்டங்கள், எதிர்ப்புகள், இழப்புகள் என்பவற்றைச் சந்தித்த போதும் தளராது அன்னைக்கான புதிய சித்திரத்தேரை யாவரும் வியக்கத்தக்க வகையில் பல லட்ச ரூபா செலவில் தேர்த்திருவிழா உபயகாரர்களின் பெரும் நிதிப்பங்களிப்புடனும் இலண்டன் அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய அறக்கட்டளையினரின் நிதி உதவியுடனும், எமது ஊர் மக்களின் பொருள், பண அன்பளிப்புகளுடனும் தொண்டகளினது உடல் உழைப்பினாலும் அழகிய சிற்ப சித்திர வேலைப்பாடுகளுடன் இத் தேர் வேலைகை இனிதே நிறைவுபடுத்தி 07-07-2005 வியாழக்கிழமை காலை 10.30 மணியளவிலே சிறப்பாக வெள்ளோட்டம் விடப்பட்டும் உள்ளது. இந்த வகையில் இவ்வாண்டு நடைபெறும் மஹோற்சவத்தில் எம்பெருமாட்டி ரதோற்சவதினத்தன்று (11-07-2005) திங்கட்கிழமை காலை தனது புதிய சித்திரத்தேரில் பவனி வந்து அருட்காட்சி அளிப்பாள் என்பதை எண்ணும் பொழுது எமக்கெல்லாம் பெருமகிழ்ச்சியாக இருக்கின்றது என்று கூறி அன்னையவளின் சித்திரத்தேரின் வடம் பிடிப்போம் வாரீர் என்று கூறி அமைகின்றேன்.

நன்றி

வணக்கம்

திரு. சி. செந்தில்நாதன்
தேர்த்திருப்பணிச் சபைச் செயலாளர்
பரிபாலனசபை உபசெயலாளர்

எல்லா உயிர்களிடத்திலும் உம்மை எனக்குக் காட்டி எவ்வுயிர்க்கும் என் மனத்தினாலும், வாக்கினாலும், காயத்தினாலும் எவ்விதத் தீமையும் செய்யாமல் வாழும் படியாகவும் என்னிடத்தில் அன்பு செலுத்துகின்றவர்களிடத்திலும் அன்பு செய்யாதவர்களிடத்திலும் நான் அன்பு செலுத்தி வாழும் படியாகவும், எனக்கு இவ்வுலகில் உதவுகின்ற உடம்பு, அறிவு, செல்வம், முதலியவை என்னுடையவை அல்ல என்றும் என்னிடத்தில் அடைக்கலமாக மற்றவர்களுக்கு பயன்படும் படியாக ஒப்புவிக்கப்பட்டவை என்றும் நான் நம்பி வாழும் படியாகவும் அருள்புரிவீராக என்று இறைவனை வேண்டுவாயாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சக்தி

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில்

தலவரலாறு

சைவமும் தமிழுந் தழைத் தோங்கும் ஈழவளநாடு தக்ஷிண கைலாசம் என்னுஞ் சிறப்புப் பெயருங் கொண்டுள்ளது. ஊர்கள் தோறும் கோவில்கள் பக்தி மணம் பரப்பி நிற்கின்றன. இங்கும் சைவம் வளர்த்த சான்றோர்கள் பலர் வாழ்ந்திருக் கின்றனர்.

அளவெட்டி

இவ்வீழ நாட்டில் யாழ்ப்பாணக் குடா நாட்டின் வடபால் அளவெட்டி என்னும் அரிய புகழ் படைத்த ஊர் அமைந்துள்ளது. வயலும் வயல்சார்ந்த பண்ணைகளும் வளஞ் செழித்து பச்சைப் பசேலென்று காட்சியளிக்கும் இவ்வூர் ஆன்றவிந் தடங்கிய கேள்விச் சான்றோர் பலர் வாழ்ந்த பெருமை பெற்றது. இங்கு வாழ்ந்த வடமொழி தென் மொழி வல்லுநரான வைத்தியநாத முனிவர் வியாக்கிரபாத புராணம், புலியூர்ப் புராணம் என்னும் நூல்களை ஆக்கி, சைவ நல்லுலகத்திற்குத் தந்திருக்கிறார். சங்கீதம், நாட்டியம், நாடகம், சிற்பம், ஓவியம் ஆகிய இன்கலைகளின் இருப்பிடம் இவ்வூர்.

நகுலேஸ்வரத்திற்கு நேர் தெற்கே இரண்டு கல் தொலைவில், தெல்லிப்பளை பண்டத்தரிப்பு வீதியில் அளவையூரின் அமைதி மிகு சூழலில், ஓமெனும் மந்திரத்துட் பொருளா யிருக்கும் உலகத்து நாயகி அன்னை முத்துமாரி கோயில் கொண்டு அருள் பாலிக்கும் தவளக்கிரித் திருத்தலம் அமைந்திருக்கிறது.

தவளக்கிரி

தவளக்கிரித் திருத்தலத்தின் வரலாற்றைச் சரிவரச் சொல்லக் கூடிய சரித்தர புராணச் சான்றுகளோ சாசன ஏடுகளோ எவையுமில்லை. கர்ண பரம்பரைக் கதைகளே ஓரளவுக்குக் கைகொடுக்கின்றன. கோவிலின் பழமையை அன்னையின் திருவுருவ அமைப்பும் முன்பிருந்த தூண்களும் கட்டடமமைக்கப் பயன்படுத்தப்பட்ட பொருள்களும் எடுத்துச் சொல்லு கின்றன.

முணு முணுத்த அம்மன்

அன்னை முத்துமாரி அளவெட்டி யில் கோயில் கொண்ட வரலாறே அதிசயமானது. நீண்ட நெடுங் காலத்துக்கு முன்பு வட்டுக்கோட்டை சுழிபுரம் வாழ் மக்கள் கடலிலிருந்து எடுத்த அன்னையின் திருவுருவச் சிலையை வீடொன்றில் வைத்து ஆராதித்து வந்திருக்கின்றார்கள். இரவு நேரங்களில் அன்னையை வைத்திருந்த இடத்திலிருந்து முணு முணுக்கும் சப்தம் வந்து கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சமும் அதிசயமுங் கொண்ட அவ்வூரவர் பொங்கலென்றும் பூஜை யென்றும் பக்தி செய்து வந்தார்கள். முணு முணுப்பு நிற்கவேயில்லை. அன்னை பேசியது ஆருக்கும் புரியவு மில்லை. முணு முணுத்த அம்மன் என்று பெயர் சூட்டி விட்டார்கள்.

கூடத்தம்மன்

அக்காலப்பகுதியில் அளவெட்டி யிலிருந்து, ஆசார சீலர்களாய சிலர் அவ்வூர்களுக்குப் போய் வருவதுண்டு. அங்குள்ளவர்கள், இவர்களிடம் அம்பிகையைப் பற்றிப் பிரஸ்தாபித்து, தங்கள் அச்சத்தையும் கூறினார்கள். அம்பிகையை உரிய முறையில் ஆராதிக்க முடியாதென்பதை உணர்ந்த அவர்கள் எடுத்துச் சென்று ஆராதிக்கு மாறும் வேண்டிக் கொண்டார்கள். அவர்கள் வேண்டுகோட்படி தேவியைக் கொண்டு வந்தவர்கள் அளவெட்டியில் தவளக்கிரிக் கோயிலுக்குத் தென் புறமாக பிரதான வீதியோரம் இப்போதுமுள்ள மடத்தின் பின் புறமுள்ள வீட்டின் கூடத்தில் வைத்து வழிபடலாயினர். முதன் முதலில் தேவியை ஆராதித்து வந்தவர் ஒரு சாமியார் என்று கூறப்படுகிறது. சாமியார் காலமானபின், மடத்து வளவின் பின்பக்கம் அவரை அடக்கம் செய்த இடத்தில் ஒரு சிறுசமாதி கட்டப்பட்டுள்ளது. கூடத்தில் வைத்து வணங்கியமையால் கூடத்தம்மன் என்ற பெயருங் கூடவே வழங்கலாயிற்று. இங்கு வந்த பின்பும் தேவியின் முணுமுணுப்பு நீடித்ததாகவும் பின்னர் படிப்படியாகக் குறைந்து முற்றும் இல்லாமல் போய் விட்டதாகவும் கூறுகின்றார்கள்.

அம்பிகை, அளவெட்டிக்கு வந்து சேர்ந்தாலும் வட்டுக்கோட்டை சுழிபுரம் வாழ் மக்கள் நெல்லும் பூஜைத் திரவியங்களும் தேவி வழிபாட்டுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். இடையிடையே வந்து வணங்கியும் சென்றார்கள். மாவிட்டபுரம், சந்நிதி கோவில்களுக்குச் செல்லும் போதும் இங்கு தங்கி, பொங்கலிட்டுப் பூஜை செய்யத் தவறுவதில்லை. அவர்களின் வசதிக்காகவே இந்த மடம் ஏற்படுத்தப் பட்டது என்பார் சிலர். முன்பு இருந்தது விரிவு படுத்தப்பட்டது என்பார் சிலர், மடமும் காலப்போக்கில் பல மாறுதல் களைக் கண்டுள்ளது. மடத்தைக் கட்டுவித்தவர் அளவெட்டியைச் சேர்ந்த, றங்கூன் நாகலிங்கமவர்களின் முன்னோர்களாவர்.

இப்போது அம்பிகையை பிரதிஷ்டை செய்திருக்கும் தவளக்கிரிக் கோவிலுக்கும் மடத்து வளவுக்கு மிடையே, கோவில் தெற்கு வீதி மட்டுந்தான் உண்டு. கூடத்தம்மன் தவளக்கிரிக் கோவில் எக்காலத்தில் யாரால் பிரதிஷ்டை செய்யப் பெற்றாள் என்பது அறிய முடியாதிருக்கின்றது.

காத்தவராயர் கோவில்

இத்தவளக்கிரிக் கோவில், கூடத்தம்மனைப் பிரதிஷ்டை செய்ய முன்பு காத்தவராயர் கோவில் என்றே வழங்கி வந்திருக்கின்றது. இன்றுங்கூட,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்திலிப்பவர்கள் காத்தவராயர் கோவிலென்றே கூறுகின்றார்கள். மரபு வழி வந்த மாவைக் கந்தன் காவடிப் பாடலொன்றில் "செங்கழனி சூழ் அளவை நடுவண் கோவில் அமர் காத்தவராயன் சந்நிதியிலிருந்து துங்கமிகு காவடியை எடுத்து..." என்று இக் காத்தவராயர் கோவிலிருந்து காவடிகள் புறப்பட்டு மாவிட்டபுரம் சென்றதாகப் பாடப் பட்டுள்ளது இன்னும், காத்தவராயர் உற்சவ மூர்த்தியும் கழுமரமும் இன்னுங் கோவிலில் உள்ளன. பலியிடும் வழக்கமும் நீண்ட காலமாக இருந்திருக்கிறது. எது எப்படியாயினும் இப்போது தேவி முத்துமாரி கருவறையில் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றாள்.

அன்னையின் கருவறையமைந்த பகுதி அளவையூரைச் சேர்ந்தது. ஆயின் வடக்கு வீதி பன்னாலையூரைச் சேர்ந்தது. அன்னையை முதன் முதலில் வணங்கி வந்தவர்கள் வட்டுக்கோட்டை சுழிபுரம் வாழ் மக்கள். இந்த நான்கு ஊரவர்களும் தேவியைத் தங்கள் குலதெய்வமாகக் கொள்ளுவதில் வியப்பேதுமில்லை. அயல் ஊரவர்கள் மட்டுமன்றி, தொலைவிலிருந்தும் அன்னையின் அருள் வேண்டி வந்து கொண்டிருப்பவர்களுக்கு அளவே இல்லை.

பலியிடுதல்

நீண்ட காலமாக இக்கோவிலில் வேள்விக் கொடியேற்றி பலியிடும் வழக்கம் இருந்து வந்திருக்கிறது. நாமறிந்தவரையில் 1918 ம் ஆண்டளவில் ஒரு மகா கும்பாபிஷேகம் நடைபெற்று இருக்கின்றது. இக் கும்பாபிஷேகத்தைக் கோணேசர் கோவிலைச் சேர்ந்த சிவஸ்ரீ சரவணமுத்துக் குருக்கள் அவர்கள் நடத்தி வைத்திருக்கின்றார்கள். 1924, 1925 அளவில் பலியிடுதல் நிறுத்தப்பட்டு மஹோற்சவம் செய்யத் தொடங்கி இருக்கிறார்கள். தொடர்ந்து பத்து ஆண்டுகள் வரையில் மஹோற்சவம் நடந்திருக்கின்றது. ஆயின் திரும்பவும் பலியிடும் வழக்கத்தைக் கொண்டு வரும் முயற்சியில் சிலர் ஈடுபட்டமையால் பெரிய குழப்பநிலை தோன்றி மஹோற்சவம் தடை படலாயிற்று. பலியிடும் முயற்சியும் பலிக்கவில்லை. 1935 ம் ஆண்டளவில் தூபியின் திருத்த வேலைகள் செய்யப் பெற்று இரண்டாவதாக மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து சில ஆண்டுகளின் பின்னர் திரும்பவும் மஹோற்சவம் நடைபெறத் தொடங்கியது. கொடியேற்றத்திலிருந்து பத்தாம் நாள் தேரும். பதினொராம் நாள் ஆனி உத்தரத்தன்று தீர்த்தமும் நடைபெறலாயிற்று. கும்பாபி ஷேகத்தையும் மகோற்சவத்தையும் பண்டித, சிவஸ்ரீ மாணிக்கத்தியாகராஜக் குருக்கள் அவர்கள் செய்து வைத் தார்கள். 1965 ம் ஆண்டு தை மாத அத்த நட்சத்திரத்தில் மூன்றாவது மகா கும்பாபிஷேகம் கோவிலில் செய்யப் பெற்ற பல திருத்த திருப்பணி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வேலைகளைத் தொடர்ந்து நடை பெற்றது. இக் கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்கள் செய்து வைத்தார்கள்.

வீர சைவக்குருக்கள் மட்டுமன்றி பிராமணக் குருமாரும் சில சந்தர்ப் பங்களில் மஹோற்சவத்தில் பணி புரிந்திருக்கின்றார்கள். இதுவரையில் இக்கோவிலில் குருமாராகப் பணி புரிந்தோர்.

சிவஸ்ரீ	சி. மாணிக்கத்தியாகராஜா	குருக்கள்	வீரசைவர்
சிவஸ்ரீ	ச. தற்பரானந்தம்	குருக்கள்	வீரசைவர்
சிவஸ்ரீ	சி. ஐயம்பிள்ளை	குருக்கள்	வீரசைவர்
சிவஸ்ரீ	கந்தையா	குருக்கள்	வீரசைவர்
சிவஸ்ரீ	இராசையா	குருக்கள்	வீரசைவர்
சிவஸ்ரீ	சரவணமுத்து	குருக்கள்	வீரசைவர்
பிரம்மஸ்ரீ	சதாசிவக் குருக்கள்	மாதகல்	பிராமணர்
பிரம்மஸ்ரீ	இரத்தினம் குருக்கள்	வதிரி	பிராமணர்
சிவஸ்ரீ	ஐ. செல்வரத்தினம்	குருக்கள்	வீரசைவர்
சிவஸ்ரீ	ச. சொக்கலிங்கம்	குருக்கள்	வீரசைவர்
சிவஸ்ரீ	உருத்திரபுரீஸ்வரக்	குருக்கள்	வீரசைவர்
பிரம்மஸ்ரீ	க. மு. சோமசுந்தரக் குருக்கள்	உரும்பிராய்	பிராமணர்
சிவஸ்ரீ	செ. வைரவநாதன்	குருக்கள்	வீரசைவர்

இந்த ஐந்து வீரசைவ குடும்பத் தைச் சேர்ந்தவர்கள் பரம்பரையாகப் பூசை உரிமை பெற்றிருக்கின்றார்கள். சமீப காலத்தில் இங்கு பூஜை செய்பவர்கள். வீராகமவிதிப்படி இலிங்க தாரணம் செய்தவர்களாக இருக்க வேண்டுமென்று விதிக்கப் பட்டிருக்கிறது.

இக்கோவிலுக்குரிய தல விருட்சம் சரக்கொன்றை. இது வடக்கு வெளிவீதியில் வானுற வளர்ந்து நிற்கிறது. ஆனி மஹோற்சவ காலத்தில் பொன் போலப் பூச்சொரிந்து தேவியைப் பூசித்து நிற்கிறது. வயல் நிலங்களும், தோட்டக்காணிகளும் இக் கோவிலுக்குத் தர்ம சாசனம் செய்யப் பட்டுள. இத்தகைய நிலமொன்றில் தவளக்கிரிக் கோவிலின் பின் புறமாக ஆதி வீரபத்திர சுவாமி ஆலயம் 1982 ம் ஆண்டில் எடுக்கபட்டிருக்கிறது.

கோவிலின் முன்புறமும், வலப்புறமும் கோவில் தொண்டு செய்யும் இசையாளர் மரபினரும் மலர்மாலை புனைவோரும், வேளாண் பெரு மக்களும் ஏனையோரும் வாழ்கின்றனர். சிற்ப சித்திர நுண்கலை வல்லுநர்களும் இங்கு வசிக்கின்றனர். அன்னையின் அடித்தொண்டே வாழ்க்கையில் ஆக்க மெலாந் தருமென்று உறுதியாக நம்புகின்றனர்.

உற்சவமூர்த்தி

முன்பு, விநாயகர், காத்தவ ராயர், அம்பிகை மூவரும் உற்சவ

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

காலங்களில் பவனி வரும் வழக்கம் இருந்திருக்கிறது. இப்போது அம்பிகை மட்டுமே உற்சவ காலங்களில் வீதி வலம் வருகிறாள். 1935 ம் ஆண்டு நடந்த மகா கும்பாபிஷேகத்துக்குச் சிறிது காலம் முன்னதாக இப்போதி ருக்கும் உற்சவமூர்த்தி உருவாக்கப் பட்டது. இவ்வம்பிகையின் அழகும், ஒளியும் அருட் பொலிவும் மிகமிகச் சிறப்பாக அமைந்திருக்கிறது. இந்த வகையில் சிற்பச் சிறப்பம்சம் பொருந்திய தேவி திருவடிவம் இப் பகுதியில் இல்லையென்று சிற்ப நூல் வல்லுநர்கள் கூறுகின்றார்கள். இச் சிலையை வடித்த சிற்பி மூன்று முறை முயன்றும் ஏதோ ஒரு ஊனம் சிலையில் ஏற்பட்டு வந்தமையால் மனம் சோர்ந்து இருந்தபோது அம்பிகையே ஒரு மூதாட்டி உருவில் வந்து ஆறுதல் கூறி ஆசி வழங்கிய பின் நான்காவதாக வடித்த திருவுருவம் தான் இது என்றும் இம் மூதாட்டி நிழல் கருவில் பதிந்திருந்ததாகவும் ஒரு கதை கூறப்படுகிறது.

நடராஜப் பெருமானுக்கு இங்கு தனிச் சந்நிதி இருக்கிறது. இது தெற்கு நோக்கி அமைக்கப் பெற்றிருக்கிறது. வருடத்தில் ஆறு விசேட அபிஷேக தினங்களோடு ஏனைய இருதினங்களில் மட்டும் நடராஜப் பெருமான் வீதி வலம் வருகிறார். பரிவார மூர்த்திகளான விநாயகர், முருகன், நாகேஸ்வரர், வைரவர் சந்நிதிகளும் இங்கு இருக்கின்றன.

சில வழக்கங்கள்

இக்கோவிலுக்கே சிறப்பாக அமைந்த சில வழக்கங்கள் நீண்ட காலமாக இருந்து வருகின்றன. சிவராத்திரி தினத்தன்று இரண்டாம் ஜாமப்பூசை முடிவுற்றதும் பூசகர் மூலஸ்தானத்திலிருந்து கர்ப்பூரச் சட்டி யொன்றை ஏந்திவருகிறார். மங்கள வாத்தியங்கள் ஒலிக்க அது எதிரே சிறிது தூரத்திலிருக்கும் ஐயனார் ஆலயத்துக்குக் கொண்டு வரப்பட்டு வீதி வலம் வந்து மூலஸ்தானத்தில் வைக்கப்பெற்ற பின்னரே அங்கு பூஜை நடைபெற்று, பிரசாதம் வழங்கப் படுகிறது. விஜயதசமியன்று தேவி கும்பிழாவளைப் பிள்ளையார் கோவி லுக்குச் செல்கிறாள். அங்கு வாழை வெட்டி மகா நோன்பு விழா முடிந்து திரும்பி வரும் போது ஐயனார் ஆலயத்திலும் வாழை வெட்டும் வழக்கம் இருந்திருக்கிறது.

பங்குனி மாதம் கோவில் குளிர்த்திக்கு வரும் பண்டங்களிலிருந்து சிறிய அளவில் சேர்த்து அயலிலுள்ள ஆலயங்களுக்கு முதல் நாள் மாலையி லேயே அனுப்பப்படுகிறது. குளிர்த்தி தினத்தன்று அதிகாலை நான்கு ஐந்து மணியளவில் சோறு ஆக்கும் முதல் அண்டா அடுப்பேற்றப்படுகிறது. இந்த அடுப்பேற்றும் வைபவத்தை ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பரம் பரையாகச் செய்து வருகின்றார்கள். இவ் வழக்கங்கள் எப்போது ஏற்பட்டன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைச் சொல்ல வல்லவர்கள் எவருமில்லை.

குளிர்த்தி

இங்கு நடைபெற்று வரும் பங்குனிக் குளிர்த்தி இரண்டாவது திங்கட்கிழமை நிகழ்கிறது. அன்னை முத்துமாரியின் அருள் கொடையை முதல் நாளும் குளிர்த்தியன்றும் அறையப் பெறும் முரசொலி வெளிப்படுத்திக் கொண்டிருந்த நிலை சமீப காலமாக இல்லாது போய்விட்டது. ஆயினும் அன்னையின் அருட் பிரசாதத்தைப் பெற்றுக் கொள் வதற்காக ஆயிரம் ஆயிரமடியார்கள் நாலா திசையிலிருந்தும் எந்த வேறுபாடுமின்றிக் கூடுகின்றார்கள். இங்கே நடக்கும் குளிர்த்தியைப் போல இவ்வளவு பெரிய அளவில் வேறெங்கும் நடப்பதாகத் தெரியவில்லை. தனிப்பட்ட முறையில் அன்னதானங்களும் இங்கு செய்யப்படுகின்றன.

விழாக்கள்

விழாக்களுக்குக் குறைவே யில்லை. தை மாசத்தில் பொங்கலும் தைப்பூசமும் இலட்சார்ச்சனையும் அபிராமிபட்டர் விழாவும் விசேட விழாக்கள். மாசியில் சிவராத்திரியும் பங்குனியில் குளிர்த்தியும் சித்திரை வருடப்பிறப்பு சித்திரா பௌர்ணமியும் ஆனி மகோற்சவமும் ஆடிப்பூரமும் புரட்டாதி நவராத்திரியும் ஐப்பசி வெள்ளியோடு தீபாவலித்திருநாளும் கார்த்திகை ஆயிரம் தீபத் திருநாளும் மார்கழித் திருவெம்பாவையும் விசேட விழாக்களாக நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாதமும் மாதோதய பூஜை விசேடமாக நடைபெறுகின்றது. வெள்ளிக்கிழமை தேவிக்கு இக் கோவிலில் விசேடதினம், ஒவ்வொரு வெள்ளியும் மாலைப் பூஜையுடன் தேவி உள்வீதி வலம் வருகிறாள்.

கோவில் பரிபாலனம்

1935 ம் ஆண்டின் பின் கோவிலில் திருப்பணி வேலைகள் பல நடைபெற்றுள்ளன. இக்காலத்திலிருந்து கோவில் மேலாளர்களாக அளவெட்டி யைச் சேர்ந்த வேறு வேறு குடும்பத்தவர்கள் இருந்து வந்து உள்ளனர். ஆரம்பத்தில் வைத்தியர் கதிர்காமர் குடும்பத்தவர்கள் பதவி வகித்துள்ளனர். பின்னர் அண்ணாவி தம்பர் குடும்பம், சேனாதிராஜா குடும்பம், வைத்தியர் கணபதிப்பிள்ளை குடும்பத்தவர்கள் பொறுப்புக்களை ஏற்று கோவில் வளர்ச்சிக்காக உழைத்து வந்துள்ளனர். 28-05-55 ல் இருந்து கோவில் பரிபாலனம் அடியார்களால் தெரிவு செய்யப் பெற்ற பரிபாலன சபையாரிடம் முறையாகக் கொடுக்கப்பட்டது. பரிபாலன சபையார் கோவில் நிர்வாகத்தை சிறந்த முறையில் செய்து வருகின்றனர். பரிபாலன சபையாருக்குப் பக்கத் துணையாக 1965ம் ஆண்டிலிருந்து தொண்டர்சபை "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்று ஔவையார் கூறியது போன்று செயற்பட்டு வருகிறது. 09-05-1982 இடம்பெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பரிபாலனசபைக்கென வகுக்கப்பட்ட அமைப்பு விதிகள் முதல் தடவையாக அங்கீகரிக்கப்பட்டது. 12-08-1982 இல் இந்து சமயத் திணைக்களத்தில் ஆலயம் பதிவு செய்யப்பட்டது. (6/3/T/5/S/O/29) 11-09-1988 இல் பொதுச்சபையின் அங்கீகாரம் பெற்று யாப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டன. 26-04-1989 இல் ஆலயத்தில் ஏற்பட்ட ஆசூசம் காரணமாக 27-04-1989 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. இக்காலத்தில் ஆதி மூலம் புதுப்பிக்கப் பட்டமை, அர்த்த மண்டப வேலைகள் மேற்கொள்ளப்பட்டமை, நவக்கிரகம் மண்டபம் புதிதாக அமைக்கப்பட்டமை முதலான பல வேலைகள் மேற் கொள்ளப்பட்டு 31-01-1990இல் நவக்குண்டபஷ்க்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா திருக்குட திருமஞ்சன மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் நடை பெற்றது. 1992 இல் நாட்டில் ஏற்பட்ட யுத்த நிலை காரணமாக ஆலய பரிபாலனம் 1997 வரை நடைபெறாது இருந்தது. அதன் பின் ஆலய பூஷகர் சொ. பசுபதிநாதன் ஐயா மற்றும், பரிபாலன சபையின் தலைவர் திரு. க. சின்னத்தம்பி ஆகியோரின் அரிய முயற்சியினால் நூதன கும்பாபிஷேகம் இடம்பெற்று ஆலயம் மீள் வளர்ச்சி பெறத் தொடங்கியது. 1998 இல் விநாயகரும் அன்னையும் தேரில் பவனி வருகின்ற நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. இக்காலப் பகுதியைத் தொடர்ந்து ஆலயம் மீண்டும் இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளின் படி பதிவு செய்யப்பட்டது. (HA/5/JA/189) 2002 ஆம் ஆண்டு எழுந்தருளி விநாயகர் ஒன்று புதிதாக குடமுழுக்கு மேற் கொள்ளப்பட்டது. அன்னையின் உடைய பெயரில் இலண்டனில் அறக்கட்டளை ஒன்று அளவையூர் அன்பர்களால் ஆரம்பிக்கவும் பட்டது. இக்காலம் முதல் ஆலயத்தில் பூரணை தோறும் அன்னதானம் வழங்கும் வைபவம் இவர்களின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றது. 15-01-2005 அன்று ஆலயத்தின் பெயரில் முன்பள்ளி ஒன்றும் அமைக்கப் பட்டுமுள்ளது. 01-07-2005 இல் வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியர் எழுந்தருளி விக்கிரக கும்பாபிஷேகம் மேற்கொள்ளப்பட்டது. 07-07-2005 புதிய சித்திரத் தேரும் வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது. இந்த வகையில் அன்னையின் உடைய ஆலயம் வளர்ச்சிப் பாதையில் முன்னேறி கொண்டிருப்பதைக் காணலாம். இன்னும் ஆலயம் உயலர்ச்சி பெறும் என்பதும் திண்ணம்.

புகழ்ப் பாமாலைகள்

அன்னையின் அருட்பெருக் கினைப் போற்றிப் புகழ்ந்து பாடப்பட்ட பாடல்கள் சில நயமிக்கவை. ஆக்கியவர் யாரென்று தெரியாத தவளக்கிரி முத்துமாரியம்மை பதிகம், வழிவழி அண்ணாவிமார் போற்றிப் பரவிய துதிப்பாடல் தொகுப்பு, வைத்தியர் அம்பலவாணர் கதிரித்தம்பி அவர்கள் செய்த தவளக்கிரி முத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரியம்மன் இரட்டை மணி மாலை, பன்னாலையூரைச் சேர்ந்த அறிஞர் மு. பொன்னம்பலம் அவர்கள் இயற்றிய முத்துமாரியம்மன் திருவூஞ்சல் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை அவர்களின் திருப்பள்ளியெழுச்சி, தவளக்கிரி முத்துமாரியம்மன் அந்தாதி என்பன குறிப்பிடத் தக்கவையாகும்.

அற்புதங்கள்

அன்னை முத்துமாரியின் அருளுக்கு எல்லையேது. அவள் அருட்பார்வை பெற்ற இவ்வூரில் விடந்தீண்டி மாய்ந்தவர்கள் எவரும் இல்லை. தொற்று நோய்களும் மக்களைத் துன்புறுத்தியதில்லை. மரத்திலிருந்து விழுந்தோ நீருள் மூழ்கியோ எவரும் இறந்ததில்லை. அம்மையைத் தஞ்ச மடைந்தவர்களுக்கு அல்லல் எதுவுமில்லை. பக்தியுடன் அணுகுவார்க்கு அவள் ஒரு கற்பகம். கேட்டதெல்லாம் தருவாள். பிள்ளை வரம் வேண்டுவார்க்கு அவள் பேரருளால் கிடைத்துவிடும். தீராத பிணிகளெல்லாம் அவள் திருவடிகள் தீர்த்து வைக்கும். அம்மை செய்த அற்புதங்கள் அனேகம், அனேகம். சிவராத்திரி தினத்தன்று விரதம் அனுஷ்டிக்க வந்தவர்களில் சிலர். தேவி வெண்பட்டுடுத்து மின்னொளியுடன் சர்வாலங்கார பூஷிதையாக மூலஸ்தானத்தில் உலவியதை நேரில் கண்டிருக்கின்றனர். 1-பூசகர் மகள் மறுநாள் புதிய வெண்பட்டு எடுத்து வந்து தேவிக்கு அணிவித்த பின்னரே உணவு உட்கொண்டாராம். தேவியின் வாயிலில் வந்து பொய்ச் சத்தியம் செய்தவர் அனுபவித்த தண்டனைகள் சொல்லுந்தரமன்று. மஹோற்சவத்தில் ஒரு விழாவைச் செய்பவர், விழாபற்றி ஏனோதானோ என்றிருக்க, பின்னிரவு இவர்கள் தோட்டத்துக்கு இறைத்த நீர் முழுவதையும் மாடாக வந்து பருகிய மாயமும், விழாவொன்றுக்கு அலங் கரிக்க வாழை தருபவர் ஒருதரம் மறுத்த போது அப்போது வீசிய சிறு காற்றால் அவர் தோட்டத்தில் மட்டும் நின்ற வாழைகள் அத்தனையும் சாயச் செய்த அதிசயமும், அம்மை செய்த திருவிளையாடல்கள். சமீபகாலத்தில் குளிர்த்திக்கு இளநீர் கேட்டுச் சென்றபோது தர மறுத்த ஒருவரின் தென்னையில் இருந்த இளநீர் மட்டுமன்று குரும்பை முதலாக அத்தனையும் மறுநாள் விடி காலை வீழ்ந்து விட்டன.

அன்னையிடம் ஆரா அன்பு பூண்ட 2-தவில் மேதைக்கு வித்வத் சபையில் வெற்றி கிடைக்க கனவில் தோன்றி அவர் கைவிரலில் புதுப்புது வித்தைகளைப் புகுத்திய விந்தையும் கோவில் 'உல்லனுக்கு ஈயம் வார்க்கும் போது கண்களில் ஈயம் தெறித்து அதனால் கண்பார்வை இழந்த 3-கரக ஆட்ட வல்லுநர் பிடிவாதமாகத் தேவியின் தீர்த்தத்தையே மருந்தாக விட்டுக்கொள்ள அவர் கண் பார்வை பெற்ற கண்கட்டு வித்தையும், 4-கோவிலில் பல தொண்டுகள் செய்தவர் கண்பார்வையிழந்து வைத்திய வகையால் பயன் கிடையாது போகவே தினமும் தேவி வாயிலில் வந்து அன்னையோடு அன்போடு பேசியே கண்பார்வை பெற்றதுவும் குறிப்பிட வேண்டிய வையாகும்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 5-ஒருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசான மூலையில் உள்ள கிணற்றை வெட்டினார். ஏதோ காரணத்தால் தண்ணீர் காணும்வரை வெட்ட முடியவில்லை. 6-பருத்தித் துறையிலிலுள்ள ஒருவரிடம் தேவி கனவில் தோன்றி, தாகத்துக்குத் தண்ணீர் கிணற்றிலிருந்து மொண்டு தருமாறு கேட்க, அவர் கிணற்றைப் பார்த்தபோது தண்ணீர் இல்லாமை கண்டு திகைத்து நிற்க 'வாளியை விடு தண்ணீர் வரும்' என்று கூறி, அவர் எடுத்துத் தந்த தண்ணீரைப் பருகி தவளக்கிரிக் குறிப்பையும் காட்டி மறைந்திருக்கின்றாள். மறுநாள். தவளக்கிரி வந்து சேர்ந்தவர் கனவில் கண்ட அதே கிணற்றைக் கண்டு அதிசயித்து, தேவியின் திருவிளை யாடலை நினைந்து மெய்சிலிர்த்தது. கிணற்றை முழுமை யாக வெட்டி வேண்டிய வசதிகளும் செய்து வைத்திருக்கிறார்.

கோவில் தேவைக்காக இலுப்பை மரமொன்றைத் தருமாறு பிற மதத்தவர் ஒருவரிடம் கேட்டபோது அவர் மறுத்துவிட்டார். சில தினங்களில் அவர் குடும்பத்தவர் அத்தனை பேருக் கும் சின்னம்மை, வேதனையால் அவர்கள் வருந்த, அயலவர் தேவியின் திருவிளையாடலைச் சுட்டிக் காட்டிய போது, தான் செய்த தவறுக்காக வருந்திய அவர் ஆளனுப்பி இலுப்பை மரத்தைத் தறிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

குளிர்த்திக்குத் தந்த அரிசி யுடன் தவறுதாலாகச் சேர்ந்து போன குழந்தை யொன்றின் காதணிகள் ஆயிரம் ஆயிரம் மக்கள் உண்ணும் சோற்றில் போகாது அக்குழந்தையின் 7-பாட்டனார் கொண்டு வந்த குளிர்த்திச் சோற்றிலேயே வெளிவரச் செய்ததும் அன்னை புரிந்த அற்புதங்களில் ஒன்று.

சிவஸ்ரீ சண்முகம் பூசகர் வாழ்க்கையில் தேவி விளையாடிய சுவையான செய்தி ஒன்று. அப்போது சிறுவர் சண்முகம் சாதாரண பூசகர். ஆனால் பக்திப் பயித்தியம். தேவி பூசையில் சிறிய தவறும் செய்ய மாட்டார். வழக்கம் போல ஒரு நாள் வட்டுக்கோட்டை சென்று, நெல்லோ, அரிசியோ பெற்றுக் கொண்டுவர நேரமாகி விட்டது. பூஜை நேரம் போய்விட்டது. அவசர அவசரமாகக் குளித்து அமுது பொங்கி வைத்துவிட்டு கர்ப்பக்கிரக அறைக்கதவின் பூட்டை திறந்தார். கதவைத் தள்ளினார். கதவு திறபடவில்லை. பலங் கொண்ட மட்டும் தள்ளிப்பார்த்தார். பயன் இல்லை. கும்பிட வந்தவர்களும் முயன்றார்கள். கதவு திறபட மறுத்தது. சண்முகத் தாருக்குப் பயம் வந்துவிட்டது. கூடவே அழுகையும் வந்தது. அங்கேயே விழுந்து புலம்பினார். 'அம்மா! தாயே! உனக்காகத்தானே சென்று இந்த உச்சி வெயிலில் திரும்பி வந்திருக்

1. பூசகர் கணபதிப்பிள்ளையவர்கள் மகள்.
2. தவில்மேதை அளவெட்டி தட்சிணாமூர்த்தி, அன்னை தந்த அந்த வாசிப்பைத் திரும்ப அவரால் வாசிக்க முடிவதில்லை என்று கூறுவார்.
3. கரகாட்டவல்லுநர் அளவெட்டி ஐயாத்துரை
4. அளவெட்டியைச் சேர்ந்த றங்கூன் நாகலிங்கம்
5. வட்டுக்கோட்டை வல்லிபுரம்
6. பருத்தித்துறை கந்தையா
7. அண்ணாவி வல்லிபுரம் அளவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டுக்கோட்டை, சுழிபுரம் மக்கள்
கடலிலிருந்து அன்னையின்
திருவுருவை எடுத்தல்

இம் மக்கள் வீடொன்றில் வைத்து
வழிபடுகின்ற பொழுது சத்தம் ஏற்படுதல்
இதனால் முணுமுணுத்தல் அம்மன் எனப்
பெயர் சூட்டல்



அளவெட்டி ஆசார சீலர்களிடம்
ஒப்படைக்கப்பட்ட சிலை தற்போதைய
ஆலயத்தின் தெற்கு வீதியிலுல்ல
கூடத்தில் வைத்து வழிபடப் படல்
கூடத்து அம்மன் எனப்
பெயர் சூட்டல்



வட்டுக்கோட்டை, சுழிபுரம் மக்கள்
பொங்கல் இட்டு பூஜை செய்து
நெல் பூஜைத் திரவியங்கள் வழங்குதல்

அம்மனை முதல் முதலில் ஆதரித்த
சாமியாரின் சமாதி ஆலயத் தெற்கு
வீதியில் உள்ளது.



ஆலயத்தில் காத்தவராயர்
தனிக் கோயில்
இருப்பதால் கார்த்தவராயர் கோயில்
என்று பெயர் ஏற்படல்

மாவைக் கந்தன் காவடிப் பாடலின்
"செங்கழனி சூழ் அளவை நடுவன்
கோவில் அமர்ந்த காத்தவராயர்
சன்னிதியில் இருந்து தூக்கமிடு
காவடியை எடுத்தல்.

சிவராத்திரி காலத்தில்
வெண்பட்டாடை உடுத்த சர்வ
அலங்கார பூஷனியாக
அன்னை மூலஸ்தானத்தில் உலாவுதல்

தவில் மேதை தட்சணாமூர்த்தி
இந்திய வித்துவான்களுடன்
போட்டியிடும் வேளை அவரது
விரல்களுக்கு இசை நுட்பத்தைப்
புகுத்தியமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேங்காய் கூறுவிலையில் கூடிய விலை கேட்டு பரிதவித்த சிறுவனுக்கு அடியவர் வேடத்தில் வந்து உதவுதல்

கோயில் உல்லனுக்கு ஈயம் வார்த்த கரகாட்ட வல்லுநர் ஐயாத்துரை அவர்கள் கண்ணில் ஈயம் தெறிக்க ஆலய தீர்த்தத்தை விட்டு குணமாதல்

ரங்கவன் நாகலிங்கம் அவர்களுக்கு கண்பார்வை கொடுத்தல்

வட்டுக்கோட்டை வல்லிபுரம் பிட்டிய ஆலய ஈசான கிணறை வெட்ட முடியாது தடைப்பட பருத்தித்துறை கந்தையாவின் மூலம் இவ் வேலையை நிறைவேற்றுதல்

இலுப்பை மரம் தர மறுத்த பிற மதத்தவர் ஒருவர் குடும்பமே சின்னம்மை நோயினால் வேதனைப்பட்டமை

குளிர்த்தி அரிசியுடன் பேர்த்தியின் காதணி பாட்டனாரின் சோற்றிலேயே கிடைத்தல்

சிவஸ்ரீ சண்முகம் பூஷகர் வாழ்க்கையில் அன்னை செய்த அற்புதம்

அன்னையின் விழாவில் கலந்து கொள்ளாது செயற்பட்ட வேளை மாடாக வந்து இறைத்த நீர் முழுவதும் பருகியது

விழாவிற்கு அலங்கரிக்க வாழைக்குழை தராதவர் வாழைத்தோட்டம் அழிவுற்றமை



பூசைக்கு இளநீர் கொடுக்காதவர் தென்னை மரம் முற்றாகக் காய் சொரிதல்

அன்னையின் அற்புதக் காட்சிகளை ஓவியமாக வரைந்து கொடுத்து உதவியவர் அளவையூர் சிற்ப கலாநிதி செ. சிவப்பிரகாசம்

பொய்ச் சத்தியம் செய்தவர்கள் துன்பத்துக்கு உட்படுதல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கின்றேன். சற்று நேரத் தாமதத்துக்காக என்னைத் தண்டிக்கிறாயா' என்று வேண்டினார். ஆவேசம் வந்தவர் போல் எழுந்து சென்றவர் கதவைத் தொட்டதும் கதவு தானாகவே திறந்து கொண்டது. நின்றவர்களும் மெய் மறந்து நின்றார்கள். அன்று சண்முகத்தார் செய்த பூஜையைப் பற்றிச் சொல்ல வேண்டுமா. தேவி விளையாடிய சின்ன விளையாட்டு இது. இச் செய்தியைச் சமீப காலத்தில் சிவஐக்கியப் பேறுபெற்ற சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்கள் அவர்கள் கூறும் போது அவர் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது.

அளவெட்டியைச் சேர்ந்த தேவி பக்தரொருவர் மன்னார். (வவுனியா) செட்டிகுளத்தில் வசிக்கின்றார். தவளக்கிரிக் கோயிலிருந்து ஒரு கல்லை எடுத்துச் சென்று தேவியாக வைத்து வணங்கினார். குறுகிய காலத்தில் அன்னை முத்துமாரியின் அருள் அங்குள்ளார். அனைவருக்கும் அன்னை அருள் கிடைக்கவே இன்று அங்கு துவிதளத்துடன் கூடிய பெரிய அழகிய தவளக்கிரி முத்துமாரியம்மன் கோவிலே உருவாகி விட்டது.

வெண்மையான சிகரங்களைக் கொண்டிருப்பதனால் இமய மலைக்குத் தவளக்கிரியென்றும் பெயர் உண்டு. இமயத்தின் திருச்செல்வி பார்வதி. பார்வதி தேவியின் ஒரு அம்சமான அன்னை முத்துமாரி எங்கள் தவளக்கிரியிலிருந்து அருளாட்சி செய்து வருகிறாள்.

தவளக்கிரிவளர் தாயைப் பணிந்து சஞ்சலம் தீர்ந்திடுவோம்.

☆☆☆

தொண்டு

தொண்டருடைய உள்ளத்தில் இறைவன் இருக்கின்றான். ஆகவே தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிது. தொண்டுக்குப் "பணி" என்றும் பெயருண்டு. இறைவன் பணித்தவற்றைச் செய்யத் தெரிய வேண்டும். பணி செய்பவனுக்குப், பணிவு முக்கியம். பணி செய்பவன் பணிந்து போகின்றான். எல்லோருக்கும் பணிதல் நன்றாம். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்றார் அப்பர் பெருமான். பணி செய்வது பெருமையல்ல. பணி செய்து கிடப்பது தான் பெருமை. கிடப்பது என்ற சொல்லை நினைக்க, நினைக்க ஆணவத்தின் தலையில் அடிவிழுந்து கொண்டே இருக்கின்றது. தொண்டனுடைய இலக்கணம் கிடப்பது என்ற சொல்லிலேதான் அடங்கியுள்ளது. "அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்" என மாணிக்கவாசகர் வேண்டியது சிந்திக்கற்பாலது. நாரதர் ஒரு தொண்டர். கண்ணபெருமான், நீயும் ஒரு தொண்டர். என்று சொன்ன போது தான் நாரதருக்குத் தானும் ஒரு தொண்டர் என்பது தெரியவந்தது. ஆகவே, நாமும் தொண்டு செய்வோம். தொண்டுக்குள் நம்மை மறைத்துக் கொள்வோம். ஆண்டவன் எம்மைத் தன் அருளுக்குள் அழைத்துக் கொள்வான். தெண்டு செய். பலனை எதிர்பாராதே. ஏன்? பலன் அவனுக்குரியது. பலன் இறைவனுக்குச் சமர்ப்பணமாக வேண்டியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரும் தேரோட்டமும் வெளிப்படுத்தும் தத்துவ விளக்கம்

ஆசிரியர் தாயுமானவர் நிகேதன்
National. Dip. in. Teaching (Hin..)

கலைகளை வளர்ப்பதில் ஆலயங்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இந்த வகையிலே அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயிலும் சிற்ப சித்திர வேலைகள் நிறைந்ததாக காணப்படுவதோடு உருவாக்கி இருக்கின்ற புதிய சித்திரத் தேரின் கலை அம்சங்களின் நிறைவின் ஊடாகவும் மேலும் மெருகூட்டப்பெற்று கலை வளர்த்த வளர்க்கின்ற ஆலயம் என்கின்ற பட்டியலிலே இணைந்து கொண்டுள்ளது. இந்த வகையிலே தேரும், தேரோட்டமும் வெளிப் படுத்தும் தத்துவம் என்கின்ற வகையிலே இக் கட்டுரையை ஆக்கி அன்னையின் பாதத்திற்கு சமர்ப்பித்து உட்செல்கின்றேன்.

இந்திய சிற்ப வல்லுனர்கள், சிற்ப சாஸ்திரம், ஆகமங்கள் அடிப்படையில் கட்டிடக் கலையை நாகரம், வேசரம், திராவிடம் என மூன்று பாணிகளாக வகுத்தார்கள் இதன் பிரகாரம் கோயில் சித்திரத் தேர்களையும் வேறு கலைப்படைப் புக்களையும் வெளிப்படுத்தினர்.

நாகரம் என்பது சதுர வடிவமுடையதாகவும் வேசரம் வட்ட வடிவமுடையதாகவும் திராவிடம் எண்கோண வடிவமுடையதாகவும் உருப்பெற்றன. பிறிதோர் முறைப்படி ஆந்திரம் என்னும் அறுகோண கையும் உள்ளடக்கப்படுகின்றது. இத்தகைய வடிவங்களில் இறைவர்கட்கு ஏற்ப தேர்களும் அமைக்கப்படும்.

தேர் தீச்சுவாலையின் தோற்றத்தில் அமைக்கப்படுகின்றது. தேர் நடமாடும் ஆலயமாகும். இது கீழிருந்து மேல் நோக்கி ஒடுங்கிக் காணப்படும். நான்கு தொடக்கம் 10 சில்லுகள் வரையிலும் கொண்டதாகவும் அமையலாம்.. தேரின் ஆதாரம் அச்சாகும். இதன் மேல் ஒன்பது தளங்கள் அமைக்கப்படும். தேரின் அளவிற்கு ஏற்ப சிற்பங்கள் அமையும் இச்சிற்பங்கள் கடவுளர், புராண இதிகாச சம்பவங்கள் யானை, வீரர், குதிரை, அன்னம், மகரம், யாழி, சிங்கம், சங்கநிதி பதுமநிதி முதலானவற்றை வரிவர்க்கங்களில் கொண்டதாக அமைந்திருக்கும். தளங்கள் ஒன்று, மூன்று, ஐந்து என வரிசைப்படுத்தியும் அமைக்கப்படும். இவை பூலோக, சுவர்க்கலோக வாழ்க்கையைக் குறிப்பவையாகும்.

இப்பூவுலகைத் தேராகவும், சூரிய சந்திரர்களைச் சக்கரமாகவும், மந்திரமலையை அச்சாகவும், பதினான்கு உலகங்களும் பதினான்கு தட்டாகவும், ஆகாயம் ஆசனமாயும், நட்சத்திரங்கள் விதானமாகவும், கொடிகள் யாகச் சடங்குகளையும், நாட்கள் குறுக்கு மரங்களாகவும், அஸ்டமலைகள் தூண்களாயும், அஸ்ட திக்கு யானைகள் தாங்கும் ஆசனங்களாகவும், ஏழு கடல்கள் தேர்ச் சீலைகளாகவும், வேதங்கள் உபாகமங்கள் மணிகளாயும், வாயுக்கள் படிகளாயும் வேதங்கள் குதிரையாகவும் கொண்டும் தேர் அமைப்பிற்கு தத்துவம் கூறுவது நோக்கற்பாலது.

தேர்த்திருவிழா இறைவனின் ஐந்தொழிலில் அழித்தலைக் குறிப்பதாகும். அழித்தல் என்பது ஆன்மகோடிகளாகிய அடியவர்களின் காம, குரோத, மத, மாச்சர்யம் என்னும் வினைகளை அழித்தல் அல்லது ஆன்மாக்களின் ஆணவத்தை நீக்கி அழித்தல் எனப் பொருள் கொள்ளலாம். இதனால் இறைவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாக்களிடத்தில் வைத்த பெரும் கருணையை உணர்த்துவதாக சிவனின் திரிபுர தகனம் அமையப்பெறுகின்றது. வானில் உலாவிய பொன் வெள்ளி, இரும்பு ஆகிய முப்புரங்கள், எம்மைப் பீடித்துள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் குறிப்பதாகும். இவற்றை தாரகாட்சன், கமலாட்சன், வித்தியுன்மாலி ஆகிய மூவசுரர்கள் என்றும் கொள்வர். சிவபெருமான் சூரிய சந்திரனை சக்கரங்களாயும் நான்கு வேதங்களை குதிரையாகவும் மற்றைய சரம், அசரம் ஆகிய பொருட்கள் ஒவ்வொரு உறுப்புகளாகவும் அமையப் பெற்ற தேரில் மேருவை வில்லாகவும் விஷ்ணுவை அம்பாகவும் கொண்டு எழுந்தருளி பிரமாவைச் சாரதி ஆக்கி அவரிடம் பிரணவமாகிய சவுக்கைக் கொடுத்து தேரினைச் செலுத்து வித்து அத்தேரில் தான் சென்று முப்புரங்களையும் தமது சிரிப்பால் எரித்து அருளினார். இந்த திரிபுர சங்காரத்தின் உண்மைக் காட்சியே இரதோற்சவம் எனலாம்.

ஆலயத்தில் நடைபெறும் தேர்த் திருவிழாவில் இறைவனது இருளைப் பெறும் நோக்கில் அடியவர்கள் யாவரும் வடம் பிடித்து இழுக்க வேண்டும் என்பதும் மனிதன் தன்னுடைய வாழ்வில் தேர்ச்சி பெறுதல் கொள்வதென்பதையும் உணர்த்துகின்றது. தேரானது பாதாளம் பூவுலகம், ஆகாயம் என்பவற்றை குறிப்பதாகவும் அவையைப்பெற இறைவன் தேரில் எழுந்தருளி இருக்கும் காட்சி இறைவன் மனிதனது இதயஸ்தானத்தில் எழுந்தருளி இருக்கும் நிலைக்கு ஒப்பானதாகக் கொள்ளப்படுகின்றது.

ஆலயம் என்னும் அமைப்பில் தேர் என்பது ஒரு பகுதியாக அமைகின்றது. ஓடுதல் என்னும் செயற்பாட்டில் உடல் தத்துவத்தை நன்கு விளக்கிநிற்கக் காணலாம். அதாவது சரீரத்தை ரதம் என்றும் அதனுள்ளிருக்கும் ஆன்மாவை ரதி அல்லது ஊர்ந்து செல்பவள் என்றும் கருத வேண்டும் என ஞான சாத்திரங்கள் புகட்டுடிச் சென்று இருக்கின்றன. ஆதலால் தான் சரீரத்துடன் தொடர்புடைய இயல்புகளை எல்லாம் தேரில் அமைப்பது வழக்கமாகியிருக்கின்றது.

தேர் இழுக்கும் கயிற்றை பாசமெனக் கொள்வோமாயின். பாசம் கடக்க பாசத்தைத் துணையாகக் கொள்ளல் வேண்டும் என்பதனை வெளிப்படுத்துகின்றது. இங்கே பாசம் என்பது மூவினைகள் ஆகிய ஆகாமியம், பிராருத்தம், சஞ்சிதம் என்று சொல்லப்படுகின்ற மூன்றி னாலும் திரிக்கப்பட்ட கயிறு ஆகும். இவ்வினைகளை நீக்கி இவற்றினூடாக விளைகின்ற பயனை நல்வினையாக்கி அப்பாசக் கயிற்றைக் கொண்டு இறைவனைக் கட்டுதல் வேண்டும் என்பதனை தேர் இழுக்கும் கயிறு வெளிப்பத்துகின்றது. அதாவது பாசம் என்பது ஆண்டவனைக் கட்டும் அன்புநெறி. அன்பால் எம்முடைய மூவினைக் கட்டுக்களையும் நீக்கி பக்தியின் பரவசத்துடன் நம்முடல் வலிமையையும் உள்ளத்தின் ஆரவாரத்தினையும் கொண்டு இறைவனை நமது பக்கம் இழுப்போம். எம்மிடம் அவனருள் தானகவே முன்னோடி வருவது உறுதி. இந்த வகையில் உள்ளும் புறமும் எங்கும் இறைவனே வியாபித்துள்ளான். உள்ளிருப்பவனை புறத்திருப்பவன் தன் பக்தியாகிய சக்தியால் இழுத்து அழைத்துக் கொள்வது போன்றதே தேர் இழுக்கும் செயற்பாடாகும்.

இப்பிரமாண்டமான தேர் சரீரத்தின் அமைப்பாகும் என்றும் சிம்மாசனமாகிய பீடம் எமது இதய கமலத்தைக் குறிக்கும் என்றும் ஏலவே கண்டோம். இந்த வகையில் இறைவன் தேரின் இதயபீடமாகிய தாமரைப் பூப்போன்ற மத்திய பீடத்தில் அமர்ந்திருப்பது சகல ஜீவராசிகளின் இதயத்தில் இருப்பதென்று பொருள்படும். இது மட்டுமல்லாது உடலோடு கூடிய வாழ்க்கைத் தேர் சிறப்பாக ஓடுவதற்கு இதயத்தில் இறைவனை இருத்தல் வேண்டும் என்பதனையும் இறைவனே உடலை இயக்கும் உயிர் என்பதனையும் விளக்குவதாக பின் வரும் செயற்பாடும் அமையும். இறைவன் தேரில் அமர தேர் ஓட ஆரம்பிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் தேரில் இருந்து இறங்கியதும் தேரின் ஓட்டம் நின்றுவிடுகின்றது. இதனூடாக நமது உடலின் உயிர் இயக்கமும் இத்தகையதே என்பதை தேரோடல் தத்துவம் வெளிப்படையாக விளக்குகின்றது.

தேரின் அச்சுக்களை சூரிய, சந்திரராகக் கொள்வோமாயின் அவற்றினைத் தாங்கும் சக்கரங்களை நால்வேதமாகவோ (இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்) அல்லது நாற்பாதங்களாகவோ (சரியை, கிரியை, யோகம், ஞானம்) கொள்ளலாம். நாற்பாதங்களாக கொள்வோமாயின் இப்பாதங்களின் வழியினூடாகச் சென்று இறைவனை அடையலாம் என்பதனை குறிப்ப தாகவும் அமையப் பெற்றிருக்கக் காணலாம்.

உடலைத் தேராகவும், உயிரை தேர்த்தலைவனாகவும், ஐம் புலன்களை குதிரையாகவும் புத்தியை (அறிவு) தேர்ப்பாகனாகவும் கொண்டு பிறிதொரு விளக்கத்தையும் கூறுவர்.

தேரின் மேல் அண்டம் நமது உன்னத இலட்சியங்களையும் குறிக்கோள்களையும் குறிக்கும். மனித இலட்சியங்கள் பல்வகைப் பட்டவை என்பதைக் காட்டவே பலவகை வர்ண வேலைப்பாடுகள் மூலம் மேலண்டம் சித்திகரிக்கப்பட்டிருக்கக் காணலாம். இலட்சியங்கள் எப்படி இருந்த போதும் அலை அனைத்தும் கலசமாகிய முடியை மேல் நோக்கி ஒன்று சேர்கின்றன. (கலசம் வாழ்க்கையின் பெறுபேறான ஜென்ம சாபல்யத்தைக் குறிக்கும்) வாழ்வின் இலட்சியங்கள் வேறுபட்டபோதும் அவை ஜென்ம சாபல்யமென்ற ஒரே பேற்றினை நோக்கி குவிதல் அவசியம் என்பதை மேலண்டமும் கலசமும் விளக்கு கின்றன. அப்படிக் குவியுமானால் ஆத்மாவிற்கு சாந்தி என்கின்ற நிழல் கிடைக்கும் என்பதனை கலசத்திற்கு மேல் உள்ள குடை விளக்கி நிற்கக் காணலாம்.

தேரின் வேகம், காலத்தின் வேகம் அதைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம். தேரின் வேகத்தைக் கட்டுப்படுத்தி நேர் வழியில் செலுத்துவதே முறை இல்லாவிடில் தேர் வழிதவறிச் செல்லும். தேரை வேகத்தடை என்னும் மிண்டிமரம் போட்டுத் தடுத்து நேராக்கி இழுக்கின்றோம். இதனூடாக விளக்கப்படுவது யாதெனில் எமது வாழ்க்கைக் கால வேகத்தில் இறைவனை எம்மிடம் வராதபடி தூரத்தே செலுத்தும் ஐம்புலன்களை தடுத்து மனதை பக்தி என்கின்ற மிண்டி மரத்தை உபயோகித்து எமது வாழ்வை இறைபணியில் ஈடுபடுத்த வேண்டும் என்கின்ற தத்துவத்தை தேரோடும் பொழுது பயன் படுத்தப்படும் மிண்டி மரம் உணர்த்து கின்றது.

இது போன்ற அரிய பெரிய தத்துவக் கருத்துக்களையெல்லாம் தேருடனும், தேர் ஓட்டத்தின் உடனும் ஒப்பிட்டு பார்த்துக் கொண்டே செல்லலாம்.ஏனெனில் ஏனைய மதங்கள் போல் அல்லது சைவசமயமானது மனிதனை நெறிப் படுத்தலையே நோக்கமாகக் கொண்டு தனது செயற்பாடுகளை அமைத்து இருக்கின்றது. இந்த வகையிலே எமது சமயம் கூறுகின்ற அரிய கருத்துக்களை வாழ்வில் கொண்டு வளம் பெறுவோம் என்று கூறி அமைகின்றேன்.

எல்லா உயிர்களிடத்திலும் உம்மை எனக்குக் காட்டி எவ்வுயிர்க்கும் என் மனத்தினாலும், வாக்கினாலும், காயத்தினாலும் எவ்விதத் தீமையும் செய்யாமல் வாழும்படியாகவும் என்னிடத்தில் அன்பு செலுத்துகின்றவர்களிடத்திலும், அன்பு செய்யாதவர்களிடத்திலும் நான் அன்பு செலுத்தி வாழும் படியாகவும், எனக்கு இவ்வுலகில் உதவுகின்ற உடம்பு, அறிவு, செல்வம் முதலியவை என்னுடையவை அல்ல என்றும் என்னிடத்தில் அடைக்கலமாக மற்றவர்களுக்கு பயன்படும் படியாக ஒப்புவிக்கப்பட்டவை என்றும் நான் நம்பி வாழும் படியாகவும் அருள்புரிவீராக என்று இறைவனை வேண்டுவாயாக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
சித்திரத் தேரில் பவனி வர
வாழ்த்துகின்றோம்

தங்களது இல்லங்களில் நடைபெறும்
மங்களகரமான வைபவங்கள் அனைத்தையும்
புகைப்படங்கள் ஆக்கவும், வீடியோவாகவும், திரம்பட
ஆக்கிப் பெற்றுக் கொள்ள நீங்கள்
நாடவேண்டிய ஸ்தாபனம்

சிவம் புகைப்படக் கலையகம்

(அளவெட்டி வடக்கு)

காங்கேசன்துறை சாலை
றொட்டியாலடி,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
சித்திரத் தேரில் பவனி வர
வாழ்த்துகின்றோம்

RAJEEVAN WINDING & MOTORS

Bajaj ஏக விநியோகஸ்தர்

இங்கே விதம் விதமான பஜாஜ் மோட்டார் சைக்கிள்களையும்
ZONGSHEN, YAMATO
போன்ற மோட்டார் சைக்கிள்களையும்,
சகல விதமான மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களையும்
பெற்றுக்கொள்ளலாம்.

ரஜீவன் வைன்டிங் அன்ட் மோட்டோர்ஸ்

இங்கே சகல விதமான வைன்டிங் வேலைகளும்
செய்து கொடுக்கப்படும்.

No. 185, Stanly Road,
Jaffna.
T.P: 077 6158628

இல. 185, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. இல. 6158628

Branch: No. 66, 68, 74, K.K.S. Road,
Chunnakam
T.P: 0777 - 727784

கிளை: இல. 66, 68, 74,
காங்கேசன்துறை சாலை,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவையூர் அம்மனின் அருளின்றி அணுவும் அசையாது

"பெற்ற தாயும் பிறந்த பொன்நாடும்
நற்றவ வானில் நனி சிறந்தனவே" இது ஒரு பொன் மொழி

அன்றொருநாள் சின்னஞ் சிறு வயது துள்ளித் திரியும் பருவம். தாயே! அம்மனாச்சி நீதான் துணை என்று உன்வாய் அடிக்கடி முணு முணுக்கும், சனி, ஞாயிறு பள்ளிக்கூடம் லீவு விட்டால் சரி அம்மாள் கோவில் வீதியே எமக்குத் தஞ்சம். எல்லாச் சிறுவர்களும் சேர்ந்து அம்பாள் வீதியில் கிட்டியடித்தல், தாச்சி விளையாடுதல், பந்தடித்தல், சைக்கிள் ஓடப் பழகுதல் எல்லாம் அம்பாள் வீதியிலே. நேரம் போவது தெரியாமல் நின்று விளையாடுவோம். இனி

அளவெட்டி வடக்கு சாத்தனார் கலட்டி என்ற குறிச்சியில் செல்லையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் மூன்றாவது மகனாகப் பிறந்தேன். 21-06-1928ம் ஆண்டு எனது பெயர் சிவப்பிரகாசம் நான் சிறுவயதிலிந்தே அம்பாளை இடைவிடாது உபாசிப்பவன். இடைவிடாது அம்மாளாட்சி அம்மாளாட்சி என்று தான் மூச்சுவிடுவேன். நித்திரையிலும் அம்பாளின் நினைவுதான். நான் ஆரம்பக் கல்வியை சீலன்கலட்டி ஞானோதய வித்தியாசாலையில் சேர்ந்து படித்தேன். சிறு வயதில் இருந்தே எனக்குச் சித்திரத்தில் மிகவும் ஈடுபாடு இருந்தது. சித்திர ஆசிரியர் சிவலிங்கம் அவர்கள் என்னை சித்திரத்தில் ஊக்குவித்து முதல் குருவாக அமைந்தார். அவரின் வழிகாட்டலிலே வயலில் களி மண் எடுத்து சின்னச் சின்ன உருவங்களும் களிமண்ணில் செய்யப் பழகினேன். நான் எது செய்ய நினைத்தாலும் முதலில் பிள்ளையார் சுளி போட்டு கீழே ஓம் சக்தி என்று எழுதி வணங்கிக் கும்பிட்டுவிட்டுத் தான் எதையும் ஆரம்பிப்பேன். அந்தப் பழக்கம் தினசரி வழக்கமாகி விட்டது! சித்திரம் கீறுவதிலும் பூரண திருப்தி ஏற்பட்டது. அம்பாளின் திருவருள் என்று மனதில் எண்ணிக் கொள்வேன். அம்பாளுக்கும் நன்றி செலுத்துவேன்.

நான் ஐந்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் போது நான் ஒரு சிறு பையன் சித்திரை மாதம். அம்பாள் கோயிலிலே போர்த் தேங்காய் போட்டிக்கு அடித்து கோயிக்கு காணிக்கையாக கொடுக்கும் வளக்கம் இருந்தது. அன்றும் ஆயிரம் தேங்காய்க்கு மேல் சேர்ந்து அடித்துப் போட்டி முடிந்து விட்டது. உடைந்த தேங்காய்கள் ஏலத்தில் விலை கூறத்தொடங்கி விட்டார்கள். சனக் கூட்டத்தில் நின்றவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விலை கூறி 115 ரூபாவுக்குப் போய் விட்டது.

அப்போ கோயிலுக்கு இன்னும் கூட காசு சேரட்டுமே என்று எண்ணி 120 ரூபா என்று கேட்டுவிட்டேன். சனக் கூட்டத்தில் நின்றவர்கள் எல்லோரும் ஆச்சரியப்பட்டு என்னைப் பார்த்தார்கள். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. அதற்கு மேல் ஒருவரும் விலை கேட்கவும் இல்லை. உடனே ஏலம் கூறியவர் முதலாம் முறை 120, இரண்டாம் முறை 120, மூன்றாம் முறை 120 என்று கூறி முடித்து விட்டார். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. நான் சிரித்துக் கொண்டு திகைத்துப்போய் நின்றேன். எல்லோரும் தம்பி காசைக் கட்டிப் போட்டு தேங்காயை எடு என்று ஒரே குரலில் சத்தமிட்டார்கள். நான் 120 ரூபாவுக்கு எங்கே போவேன் என்று பயந்து அழத்தொடங்கிவிட்டேன். என்னை அவர்கள் விட்டபாடில்லை. நான் அம்பாளாச்சியைப் பார்த்து அம்பாளாச்சி இது என்ன சோதனை என்று கோயிலைப் பார்த்து அழுதேன். அடுத்த நிமிடம் அம்மன் கரககக்கார ஐயாத்துரை மாதிரி உருவத்தில் கோவிலுக்குள் இருந்து வெளியே சனக்கூட்டத்தை நோக்கி வந்தா. வந்து என்ன பிரச்சனை? ஏன் பெடியன் அழுகின்றான் என்று கேட்டார். நின்றவர்கள் ஏல விஷயத்தைச் சொன்னார்கள். உடனே அவர் அவன் சின்னப் பெடியன் தெரியாமல் கேட்டுவிட்டான். அந்தக் காசை நான் தருகின்றேன். அவனைப் போகவிடுங்கள். தேங்காயை அள்ளிக் கோயிலுக்குள் போடுங்கள் என்று சொன்னதும் என்னாலே நம்பமுடியவில்லை. அம்பாளாச்சி என்ன புதுமை. என்ன திருவருள் என்று மனம் உருகி பிரார்த்தித்தேன். அன்று தொடங்கி இன்று வரையும் அம்பாள் என் உள்ளக் கோயிலிலே குடியிருக்கின்றாள் ஆரம்பத்தில் நான் சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாசாலையில் படிப்பை தொடங்கிய நான் திரு. த. சிவலிங்கம் ஆசிரியரின் வழிகாட்டலில் சித்திர பாடத்தில் முன்நிலையில் இருந்த நான் அம்பனை வயல் களி மண்ணில் சிற்பங்களும் செய்து பழகிய நான் ஞானோதயா வித்தியாசாலையை என் வாழ்நாளில் மறக்க முடியாதவை. SS C பாஸ்பண்ணிய நான் ஆங்கில கல்வி கற்பதற்காக மகாஜனாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரிக்குச் சென்றேன். நான் சென்ற நல்ல காலம் மகாஜனாக்கல்லூரிக்கு ஒரு இலட்சினை சின்னம் அமைக்க ஒரு சித்திரப் போட்டி வைத்தார்கள். 1947 ம் ஆண்டு அப்போட்டியில் தானும் பங்கு பற்றி முதலாம் இடத்தைப் பெற்றேன். அன்று நான் வளர்ந்த இலச்சினைச் சின்னம் தான் இன்னும் மகாஜனாக்கல்லூரி இலட்சினையாக ஒளிர் விட்டு வீசிப் பறக்கிறது கொடி. எனது சித்திரத் திறமையை நன்குணர்ந்த அதிபர் T.T ஜெயரத்தினம் அவர்களின் தூர நோக்கின் பயனாக என்னை யாழ் நகரில் நடந்த வின்சர் ஆடகிளப்பில் சேர்ந்து படிக்க சிபாரிசு பண்ணினார். அப்போதைய சித்திரவித்தியாதரிசி S.R. கனகசபை அவர்களின் சித்திர வகுப்பில் சேர்ந்து படிக்கும் பொழுது அந்த வகுப்பில் சித்திரம் படிப்பித்த ஆசிரியர் தா. அ. இராசையா அவர்கள் எனக்கு குருவாக அமைந்து சித்தத்தின் அடிப்படை நுட்பங்களை மிகவும் துல்லியமாக விளக்கி என்னைத் தனது சிஷ்யனாக ஏற்றுக் கொண்டார். அவரின் வழிகாட்டலில் அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியில் கற்று திறமைச் சித்தியுடன் யாழ் வந்தேன். எனது வீட்டிற்கு ஏதோ விஷயமாக வந்த மூதறிஞர் அளவையூர் கல்விமான் க. நாகலிங்கம் பண்டிதர் அவர்கள் எனது கலைப்படைப்புக்களைப் பார்த்து ரசித்து விட்டு இந்த கலைப் பொக்கிஷங்கள் எல்லாம் இந்தியாவில் வாங்கியதா என்று கேள்வி எழுப்பினார். அப்போது அங்கு நின்ற எனது சகோதரி அக்கா கௌரி இவையெல்லாம் தம்பி செய்த கைவண்ணங்கள் என்றார். அவர் ஆச்சரியப்பட்டு நிற்கும் பொழுது நானும் தற்செயலாக அங்கு உம்மை நான் யாழ் நகரில் இருக்கும் கலைப்புலவர் க. நவரட்ணம் அவர்களிடம் அறிமுகம் செய்து வைக்கின்றேன். அவர் உமக்கு நல்லவழி காட்டுவார். என்று சொல்லி அடுத்த நாள் அவரிடம் கூட்டிச் சென்று என்னை அறிமுகப்படுத்தினார். க. நவரத்தினம் அவர்களும் எனது கலைப்படைப்புக்களைப் பார்த்துவிட்டு ஆவல் மேலீட்டினால் நாளைக்கே வாரும் யாழ். மத்திய கல்லூரிக்கு உம்மை அங்கு சித்திர ஆசிரியராகச் சேர்த்து விடுகின்றேன் என்று நம்பிக்கை ஊட்டினார். அடுத்த நாள் அங்கு சென்றேன். அவர் என்னை அதிபரிடம் அறிமுகப்படுத்தினார் அத்தோடு நிரந்தர நியமனம் அன்றே யாழ். மத்திய கல்லூரியில் சித்திர ஆசிரியராக 1956 ம் ஆண்டு தொடர்ந்து 1988 ம் ஆண்டு வரை கடமை புரிந்து இளைப்பாறினேன். இந்த இடைக்கால காலப்பகுதியில் கலையுலகில் செடியாக இருந்த நான் வளர்ந்து மரமாக பூத்துக் குலுங்கி மணம் பரிப்பி பிஞ்சாகி காயாகி பழமாகி யாழ் நகரம் மட்டுமல்ல இலங்கை பூராவுமே மணம் பரப்பி நின்றேன். இதற்கெல்லம் காரணமாக நான் என்றும் எண்ணிக் கொள்வது அம்பிகையின் அருளென்றேயாகும்.

கலையுலகில் கால் பதித்தநான் 1956 ம் ஆண்டு யாழ். மத்திய கல்லூரி 125 ஆவது ஆண்டு விழாவில் எனது கலைப் பொக்கிஷங்களை சித்திரமாகவும் உயிரோவியமாகவும், சிற்பமாகவும் கைவினைப் பொட்களாகவும் கலைப்படைப்புக்களைப் படைத்து பெரும் புகழையும், நன்மதிப்பையும் அந்தக் குறுகிய காலத்தில் தேடிக் கொண்டது. அம்பாளின் திருவருள் என்றே எண்ணுகின்றேன். அம்பாளை உபாசித்தவரான பரமகம்சர் இராமகிருஷ்ணர் அன்னை சாரதாதேவி, விவேகானந்தர் ஆகிய மூவரின் திருவுருவப் படங்களை உயிரோவியமாகத் தீட்டி யாழ். வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் 1957 ம் ஆண்டு திரைநீக்கம் செய்யப்பட்டது. 1960 ம் ஆண்டு மகாஜனக் கல்லூரி ஸ்தாபகர் அ. தெ. துரையப்பாபிள்ளையின் உயிரோவியம் சேர் - நிக்லஸ் அட்டிக்கலையினால் திரை நீக்கம் செய்யப்பட்டது. தங்கப்பதக்கமும் சூட்டி பொன்னாடையும் போர்த்திக் கௌரவித்தார்கள். திரு. T.T. ஜெயரத்தினம் அதிபர் அவர்களால் இப்படியே தமிழ் மன்னன் சங்கிலியன், பண்டாரவன்னியன், அரசியல் வாதிகள், ஸ்தாபர்கள், கல்வி மான்கள், ஆன்மீகவாதிகள், கலைஞர்கள், சமூகத் தொண்டர்கள், என பல சிற்பங்களை வடித்தும், ஓவியங்கள் தீட்டியும் 15 தங்கப்பதக்கங்களும், கௌரவ விருதுகளும் பெற்றுள்ளது அம்மனின் திருவருள் இதில் குறிப்பாக சேர் பொன். இராமநாதனின் திருவுரவச்சிலையை திரை நீக்கம் செய்த இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் சிற்பக்கலாநிதி என்று கௌரவப்பட்டம் தந்து தங்கப்பதக்கம் சூட்டி பொன்னாடை போர்த்திய பொழுது நான் மனப்பூர்வமாக அம்மாளாச்சியையே மனதில் பிரார்த்தித்தேன்.

என்னுடைய ஆசையாக எனது ஊரை ஊரின் பெயரை உயர்த்தி கலையூராக தொடர்ந்தும் மிளர வைத்தல் வேண்டும் என்பதாகும். இந்த வகையிலேயே எமக்கெல்லாம் நாயகியாக விளங்குகின்ற அன்னை கலைப்பொக்கிஷமாகவே என்றும் அளவையூரை உயர்த்த பல கலைஞர்களை தன் ஊரில் உருவாக்கி அருள வேண்டுமென்ற விண்ணப்பத்தை அவள் பாதங்களில் சமர்ப்பித்து வணங்குகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
சித்திரத் தேரில் பவனி வர
வாழ்த்துகின்றோம்

ஆனைமுகன் களஞ்சியம்

வட அளவை சனசமூக நிலைய அருகாமை

பலசரக்குப் பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள்,
எரிபொருட்கள் என்பவற்றை எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்.

உரிமையாளர்: ஸ்ரீபதி

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
சித்திரத் தேரில் பவனி வர
வாழ்த்துகின்றோம்

விநாயகர் களஞ்சியம்
அன்
தொலைத்தொடர்பு சேவை

கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.

பலசரக்குப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள்,
பரிசளிப்புப் பொருட்கள்
என்பவற்றை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

வெளியூர் T.P:
009460 221 2878
009421 21 4591935

உள்ளூர் T.P:
060 222 2878
021 4591935

உள்ளூர், வெளியூர்,
இன்ரநெட் அழைப்புக்களை
உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
சித்திரத் தேரில் பவனி வர
வாழ்த்துகின்றோம்

தவளக்கிரி முத்துமாரி அம்பாள்
அங்கத்தவர்களுக்கு வழங்கும்
எமது இனிய சேவைகள்

- ★ நுகர்ச்சி சேவை
- ★ கிராமியவங்கி சேவை
- ★ பார ஊர்தி சேவை
- ★ தொலைத் தொடர்பு சேவை
- ★ புடவை மற்றும் அழகு சாதனப் பொருட்கள் வழங்கும் சேவை
- ★ சுய தொழில் கடன் வழங்கல் சேவை
- ★ வாடகை கதிரை வழங்கல் சேவை
- ★ கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தி

அளவெட்டி மல்லாகம்
ப. நோ. கூ. சங்கம் (வ-து)
அளவெட்டி வடக்கு

தொலைபேசி. இல. 0602212530

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
சித்திரத் தேரில் பவனி வர
வாழ்த்துகின்றோம்

எரிபொருள், மிளகாய்
உள்ளீடுகள் பொருட்கள்
உரவகை, பலசரக்குப் பொருட்களை மலிவான விலையில்
நீங்கள் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்

அப்புத்துரை களஞ்சியம்

உரிமையாளர்: P. மனோகரன்

சிறுவிளான் இளவாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அளவை நகர்

கும்பழாவளை விநாயகர் மீது

பாடிய

கலிவெண்பா

காப்பு

கட்டளைக் கலித்துறை

தேமேவு பொற்கும்பழாவளை மேவிய தேவபரன்
மாமேவு வேழமுகன் சந்திரசேகரவள்ள லுக்கே
பாமேவுசொற் கலிவெண்பாவைப் பாடப்படியுமுகிற்
காமேவு சித்தியளவை விநாயகன் காப்பதுவே.

கலிவெண்பா

பூமாதும்மாமாதும் பூக்கமழ் வெண்டாமரை வாழ்
பாமாதுஞ் சேர்ந்து நலங்குலவு - தேமேவு
பொன்னாரளாகாபுரி நேரளவைதனின்
மின்னார் பல வளங்கண்மேவியே - நன்னயஞ்சால்
சூதங்கதலி பலாசொற்சுவை சேர்நற் கனிகள்
போதலரு முல்லை திகழ்பூங்காவு - மீதுலவு
வண்டு மதுவுண்டு களிமண்டியே காந்தாரம்
பண்டை மறைவேதியரிற் பாடவே - மண்டுபுனல்
வாளைசேல் துள்ளிவளர் பூகந்தன்னிலுறு
பாளை கிழித்து மடற்பங்கயத்தி - னீளுறக்கங்
கொள்ளுந் தடவாவி கொங்கவிளுங்கா - விமலர்ப்
பள்ளநீர் தங்கும் பழனங்க - ளுள்ளனவாய்
பாங்கும் பெறும் கும்பழாவளையாய் வீற்றிருந்து
தீங்ககற்று வண்மை திருமூர்த்தி - தாங்குபெருங்
கள்ளவேடத்தைக் கருத்திலொண்ணா துண்மைமிகு
தொள்ளுமுணர்வுடையோர் சேர்ந்துதம - துள்ளத்தே
யன்புவைத்துக் கைகூப்பியானந்தநீர் சொரிந்து
முன்புநின்று தன்னைமுறை வணங்கி - யின்பசுக
வாழ்வை யெமக்களிப்பாய் வானவனே போற்றியென்று
தாழ்விலாதேத்தகுபலனை - யாழ்வுபெறு
வாரியமுதமென மற்றவர்க்குத் தந்தருளிக்
கூரிருளாம் பாவக்கொடுவினையை - வேரோடே
நீக்கித் தனக்கடிமையாக்கி வைக்கு நீர்மையான்
தேக்குந் திருவருள் சேர்சிற்சோதி - வாக்குமனந்
தேகத்துக் கெட்டாத தேவாதி தேவபிரான்
யோகத்துக் கொட்டாத தேவாதி தேவபிரான்
யோகத்தோர் காணாவுயர்நாதன - வாகுபெறு
மத்தகய முகத்தன் மாலோன் றிருமருகன்
நித்தியமென் சித்தமிசை நேசத்தை - வைத்துமே
வந்தபிணிகள் மனக்கவலை நீக்குகன
சுந்தரவொய்யார துரைராசன் - முந்தியநாள்
திங்கட்குடை யுடையோன் றென்னலிளந்தேரோன்
செங்கண் மாலீன்ற சிறுமதலை - யைங்கணைகள்
கோட்டிக்கருப்பு வில்லைக் கொண்டெய்ய நெற்றிக்கண்
காட்டிக்கனல்வீசிக் காய்ந்தவனை - வாட்டியே
தொந்தரவு செய்த தொலையா வசரருடன்
முந்துபுரஞ் சுட்டமுழுமதல்வ - னிந்துபணி
கங்கைமணியணி யுங்கங்காளன் பங்கிலுறை
மங்கையுமை பெற்ற மகனானோன் துங்கமுறு
மோர்கொம்பிரு செவியுனூற் றெடுக்குமும் மதத்தின்
சீரார்நால் வாயன்றிகழ் கரங்கள் - பேராரு
மைந்துடையானே ரம்பனாரணனுநாரணனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துபணியு மலர்ப்பாத - னிந்திரன்றன்
றெல்லைவினையின் றொடர் நீங்குக்கும்பமுனி
மல்லற்க மண்டலத்தின் மாதீர்த்தாஞ் செல்லார்
புகாரில்வரவிடுத்தே பூவுலகோர் தங்கண்
மகாரையனை காத்தவாறே - தகாதவெமைக்
காக்குங்குணநற் கருணை பொழியுமுகில்
ஆக்கல் திதியழித்தலாதியா - தகாதவெமைக்
காக்குங்குணநற் கருணை பொழியுமுகில்
ஆக்கல் திதியழித்தலாதியா - மீக்குலவு
மெத்தொழிலும் வல்லானெழில் விக்கினேசுவரன்
பத்திரிகைக்குக் கேள்வன் பகரரிய - மெத்துமகஞ்
செய்த சிறுவிதிதன் றீ வேள்வியை யழித்தோற்
கையன்பரனையவமதித்த - செய்யமல
ராசனன்றனோர் சிரத்தையன் றுகிள்ளித் தேவருடை
நீசக்கெறுவடக்கு நின்மலனா - மீசுவரன்
ஆதிவயிரவற்குமன்று விண்ணோரைச் சிறைசெய்
நீதியிலாச் சூரை நெடுவேலான் - போதமரிற்
சித்ரவதை செய்த சிவசுப்பிரமண்ய தேவனுக்கு
முத்திமுதற்றுணையாய் முன்பிறந்தோன் - நித்தியன்னறன்
பங்கயத்தையொத்தபதத்தைப் பணியாமல்
மங்குலெனச் சிக்குமயிரதனைச் - செங்கனிக்கே
யூத்தைவாந்நேரெனவு மோடி நீர்பீழைசொரி
நேத்திரத்தை நீலோற்பலமெனவுங் - கோத்தநிரை
முத்தென்றுஞ் சொத்தை முறுவறனைச் சீசளிகண்
மெத்திச் சொரிமூக்கை மென்குமிழா - யொத்தகுறும்
பூயு மழுக்கும் பெரும்பாவபீடமதா
நீருந்தசையு நிணமுமன்றிச் - சீரில்லாக்
கொங்கைதனைப் பங்கயத்தைக் கோள்கை நிகரெனவுந்
தங்குமரசினிலை சமர்ப்பபடம் - மங்காத
தேர்த்தட்டெனவுஞ் சீய்னாறுமல்குறனை
மார்ச்சாலநோக்கத்தை மாசிங்கத் - தேர்ச்சிபெறு
நோக்கமெனச் சிந்தனை செய்நுண்ண றிவில்லார் போலத்
தாக்கணங்கை நேராமித்தையென - மாச்சுடரு
மங்கையர் மேற் பொங்கிமயல் கொண்டபாவியெற்குப்
பங்கமன்றிவேறே பலனுண்டோ - புங்கவனே
கோகனகஞ்சூதந்தேன் கொட்டுமசோகுமுல்லை
வாகுபெறு நீலமலரைந்தும் - வேகமுறு
பாணமெனத்தொடுத்துப் பாவக்குழிவிழுத்து
நாணமிலாக்காமனுக்கு நாரியர்கள் - வீணாகும்
கண்வலைக்குஞ்சிக்கவலை கொள்ளுமென்மனதைப்
பண்படுத்திவைத்தபராபரனே - நண்பாகப்
பெற்றபிள்ளை செய்த பெரும்பிழையைத் தந்தையர் தாய்
குற்றமெனக் கொள்ளார்குறைகூறார் - கொற்றவனே
யன்னபடி நீயனுக்கிரகஞ் செய்தெனைநின்
நன்னிலையில் வைத்து நடாத்துவாய் - பன்னுகலை
கற்றக விவாணரைப் போற்காரிகைநன்னூலறியாச்
சிற்றறிவைக் கொண்ட சிறியேன்சொல் - சொற்குற்றஞ்
செப்புபொருட்குற்றந்தீயவையும்நல்லவையாய்
ஒப்பமுடனேற்பாயுரவோனே - இப்புவியி
லுற்றகுலதெய்வமும்நீயுன்னையேநம்பினேன்
எற்றுநீர்ஞாலத்திருட்கடலி - னிற்றைவரை
திக்கறி யாமாலுமிபோற்றேம்பித்திரிந்துலைந்தேன்
தக்கபுகழ்சுகத்தைத்தந்தாள் வாய் - மிக்கவனே
"எல்லாப்படியாலுமெண்ணினாலிவ்வுடம்பு
பொல்லாப்புழுமலிநோய்புன்குரம்பை - நல்லா
ரறிந்திருப்பாரதலினாங்கமலநீர் போற்
பிறிந்திருப்பார் பேசார்பிறர்க்" கெனவே - அறைந்திட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதுரையைத் தேர்ந்திலேன் முன்னவனே மூக்கணா
வாதியந்தமில்லாவரும் பொருளே - சோதியே
அன்னையும் நீ அப்பனும் நீ ஆனதுணை சுற்றமும் நீ
பின்னையுள பொருளும் பேறு நீ - நன்முகமாய்
வாடாமகனே மனக்கவலை கொள்ளாதே
யேடாகூடாத்தையினிவிடுதி - கூடாத
கூட்டத்தை நீக்கிக்குணமாயிருவெனவே
நாட்டமுடன் கிருபை நல்காயோ - கேட்டினைச் செய்
தானவரைக்கொற்றத் தலைமைக்கயாசுரனை
வானமவர்க்காய் கொன்றுவரங்கொத்தே - தேனுலவு
கற்பக நாடாளக்கருதுமுகில்வாகனனைப்
பொற்புடனேவைத்த புனிதனே - சொற்பரவு
கொன்றைமணி முடியாய் கோவிந்தரட்சகனே
துன்றுவவைதுணைவனே - நன்றியிலாச்
சத்துருக்கள் மித்துருபோற் சார்ந்து நின்றேயென்றனக்கு
மெத்தனையோ செய்யுமிடையூறுகளு - முத்தமனே
செய்துமின் னுஞ் செய்ய வந்தான் செய்விக்க வுங்கருதி
மெய்யாய்வழிதேடும் வீணரையு - மையாவே
பூதபசாசுகளைப் புல்லரெமக்குவிடும்
வாதைதருபேய் பில்லிவஞ்சனையுஞ் - சோதிப்பாய்
சித்திவிநாயகனே தேவாதிதேவனே
சத்திகணபதியே தண்வீர - கத்தியெனுஞ்
செல்வசந்த்ரசேகரனே தீமையொன்றும் வாராம
வல்லல்வறுமையகற்றுவாய் - தொல்புவியில்
இப்பிறப்பில்லாம லெப்பிறப்பில்யான்வரினும்
அப்பிறப்பிலெல்லாமடியேனுன் - செப்புமலர்ப்
பாதமறவாத பத்தனாகும் படிசெய்
வேதங்களுக் கெட்டாவிண்ணவனே- ஆதிபரா
சித்தர் முனிவர் தெரிந்துரை செய்யாயுள்வே
தத்தைமிகக் கற்றவறிவுடைம - ருத்துவரால்
தீராதகன்மநோய் தீர்க்கவல்லமாமருந்தே
சேராரைக் கண்டனஞ் செய்தீபமே - சீராக
வில்லறத்தில் யானிருந்தேயற்றமுறை பிறழா
நல்லறத்தைச் செய்து நயப்புடனே - தொல்புவியில்
என்றேயத்தோடு மியம்பு மெந்த நாடுநகர்
சென்றாலுஞ் சீர்சிறப்புச் செய்யவைத்தாய் - நன்றிதரு
சற்பாத்தி மக்கள் தங்குசுற்றமித்திரரோ
டற்புதமாய் வாழவைத்தவண்ணலே - சிற்பரம
வத்தனே முத்திதருமாருயிரே பேரொளியே
முத்தனே மூடிகமூர்மூர்த்தியே - வித்தகனே
யெங்கள் குலதெய்வ நீயல்லால்யாருண்டு
நம்காதகீர்த்தி மகாதேவா - துங்கவனே
யெத்தனையோ குற்றங்கள் யான்செய்தேனிப்போது
கத்துகின்ற புன்சொல்லைக்கையேற்றே - யத்தனையு
நீக்கிப் பொறுப்பதுநின் கடமையல்லவோ
ஆக்கங்குல நலன்களான வெலாஞ் - சாக்காடு
மேவும் பொழுதிலுடன் வருமோமேலோனே
கோவேயுன் கண்ணருளைக் கொண்டல்லால் - பாவிகளுக்
கேற்றதஞ்சம் வேறுண்டோ வேகனே யோகபரா
கூற்றனையுமோட்டி விடுங்கொற்றவனே - சீற்றமிகு
சீயங்கரடி நரிசெந்நாய் விடப்பாம்பு
பாயும் புலியாம்பலமிருக - மோயாது
சீவனஞ் செய்தீவகத்துச் சென்றாலு முன்றுணையே
ஆவது வேறோருண்டனுசரிக்கத் - தாவறு சீர்த்
தத்துவமெஞ்ஞான சரமசரம்யாவினுக்கு
மத்துவிதக்கோவேயருள்.

முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவையம்பதி தவளக்கிரி முத்துமாரியம்மன்

இரட்டை மணிமாலை

விநாயகர் காப்பு

நேரிசை வெண்பா

தண்ணுலவு சோலை தயக்குதவ ளக்கிரிவாழ்
விண்ணுலகு மாரியம்மன் மீதிலே - பண்ணுலவு
சீரா ரிட்டைமணி மாலைசெப்பத் தென்னளவைக்
காரார் கயமுகன்றாள் காப்பு.

நூல்

காப்பு - வெண்பா

பாமேவு ரட்டைமணி மாலைதவ ளக்கிரிவாழ்
மாமேவு மாரிமேற் பாடுதற்கு - தேமேவு
வெற்பெறிந்த செந்திநகர் வேலவற்கு முன்பிறந்த
கற்பகத்தின் பொற்பதங்கள் காப்பு. 1

கலித்துறை

காப்பது நின் கடனாத மெமை நிதங் கண்மணியே
மாப்பெரு மாட்டி தவளக் கிரிப்பதி மாரியம்மா
ஆப்பி லிடுக்கி லகப்பட்ட வானர மாயிருந்தேன்
கூப்பிட் டழைத்துக் குறைதீர்த்த மெல்லியற் கோமளமே. 2

வெண்பா

கோமளமே மாரிமுத்தே கூறுதவ ளக்கிரிவாழ்
தீமைபுரி கொற்றவராஞ் செற்றவரை - பூமிதனில்
நிக்கிரஞ் செய்தெம்மை நீக்கியிரட் சித்தலுன்றன்
தக்ககட னல்லவோ சாற்று. 3

கலித்துறை

சாற்றுவ தென்னவுன் தண்ணளி யால்சிறை தான் தவிர்த்தாய்
கூற்றுவ ரன்ன கொடியோரைக் கண்டிக்கக் கூடிய நீ
மாற்றி யெனக்கிட்ட தீர்ப்பை விலக்கிடுன் மைந்தனென்றே
போற்றித் துதிப்பன் தவளக் கிரிப்பதிப் பூங்கொடியே. 4

வெண்பா

கொடிநே ரிடையாளே கோதையே மாரி
வடிவே தவளகிரி மன்னும் - பிடிநடையாய்
புத்திரன் செய்தீங்கைப் பிதாப்பொறுத்தல் போலவே
சித்தம்வைத் தாள்வாய் சிறந்து. 5

கலித்துறை

சிறந்த தபோதனர் தங்கட் கரிய திருவுருவே
மறந்தனை யோதவ ளகிரி மேவிய மாரிமுத்தே
அறந்திக ழன்னையு மன்பனு நீபிழை யானவெல்லாம்
பறந்திட நின்னருள் பாலித் திடுகுவை பைந்தொடியே 6

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெண்பா

பைந்தொடியே சீதளாய் பாச வினைநீக்குஞ்
சுந்தரமே தேமொழியே சோதியே - நிந்தைபுரி
துட்டர் கெறுவகற்றித் தூயதவளக்கிரிவாழ்
கட்டழகி காப்பாய் கனிந்து. 7

கலித்துறை

கனிந்தே மனதி லுனைத்துதிப் போர்க்குக் கருணை செவ்வாய்
மனந்தேம்பி நிற்கு மெனதிடர் நீக்கிடு மாரிமுத்தே
சினந்தே யிகழ்ந்தெமைக் கைவிடில் யாரினித் தேற்றிடுவார்
தனந்தா னியங்கள் நிறைதவ ளக்கிரிச் சிற்சத்தியே 8

வெண்பா

சத்திமக மாரிதவளக்கிரிப்பதியாய்
பத்தி யுடனே பணிபவர்க்கு - வித்தையொடு
செல்வந்திகழவைக்குஞ் சீருடையமாரியம்மா
புல்லறிவன் சொற்கிரங்கிப் போது. 9

கலித்துறை

போதுகைக் கொண்டுன் மலர்ப் பாதம் பூசிக்கும் புண்ணியர் போல்
தீதுடையேன் புகல் சொற்பொருட் குற்றங்கள் தீர்ப்பவள் நீ
போதமும் செல்வமும் தந்தெம் வறுமையைப் போக்கிடுபூந்
தாதவிழ் சோலைத் தவளக் கிரிப்பதித்தற்பரையே. 10

வெண்பா

பரையே தவளக்கிரிப் பைங்கிளியே செந்தா
மரையே யனையே மறவேன் - திரைசூழும்
புதலத்தி லெவ்விடத்துப் போனாலு மென்றனக்கு
நீ துணையாய் நிற்பாய் நிதம். 11

கலித்துறை

நிதமுமுன் சேவை புரிவோரைப் போல நினைந்தெனையுன்
பதமலர் வாழ்த்தித் துதிக்க வருள் தரு பைங்கிளியே
சதமல்ல வேயிந்த வாழ்வெனப் போற்றுத் தபோதனர்க்கும்
புமையதாகத் தவளக்கிரியுறை பூந்திருவே. 12

வெண்பா

திருவே திருவுடைய செல்வமே தேனே
அருவா யுருவா யநாதி - சருவமுமாய்
வீற்றிருக்கு மாரி விளக்குதவ ளக்கிரியாய்
தேற்றரவு தாநீ தினம். 13

கலித்துறை

தினைப்போது தானும் மனதி லுனைத்துதி செய்துவரில்
கனத்தோடு போதக் கலையமு தூட்டுவை கண்மணியே
அனைக்கே நிகரென வுன்றனை நம்பிய அற்பனுக்கே
தனத்தா லுயர்தவ ளக்கிரி மாரி தயவு செய்யே. 14

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெண்பா

செய்ய புஜமீது சீரார் வளங்கணிறை
துய்யதவ ளக்கிரிவாழ் தோகையே - வெய்யவர் செய்
மாசகற்று மாரிமுத்தே மாதாவே யென்றனக்குக்
காசினியி லுன்கிருபை காட்டு. 15

கலித்துறை

காட்டுன் கிருபைமழையெனப் போற்றிடுகான்முளையாம்
மோட்டுக் கவிசொலும் வன்கண்ண னாகுமிழ் மூடனையே
நாட்டிற் பிரபல்ய மாக்கிடு வாய்நங்கை மாரியம்மா
வாட்ட முறாத தவளக்கிரிமட மாமயிலே. 16

வெண்பா

மயிலே யெனது துயர் மாற்றவல்ல மானே
குயிலே குணக்கடலே கோதாய் - புயல்வானம்
நின்றுசொரி யும்வளஞ்சேர் நித்தியமே வாதவளக்
குன்றே யுனைத்துதிப் போர்க்கு. 17

கலித்துறை

துதிசேர் தவளக்கிரிமேவு பான்மொழித் தோகையரே
மதிசேர் கலைஞருரை போல வெண்கவி வையகத்தில்
விதியா யெவரும் புகழ்ந்துனைப் பாடவிடையளிப்பாய்
நதிபோ லருண்மழை யாவர்க்கு நல்கிடு நாயகமே. 18

வெண்பா

நாயகமே நன்மணியே நாட்டுதவ ளக்கிரிவாழ்
தூய மணி விளக்கே சோதியே - தாயு நீ
தந்தையு நீ சுற்றமு நீ தக்கபொறை மாரியுன்றன்
மைந்தனென் பாவிப்பாய் மற்று. 19

கலித்துறை

மற்றோ ருரையுஞ் சொல வறியாத வறியவனைக்
குற்றவேல் செய்யும் படிவைத்த மாரிக் குலக்கொழுந்தே
சற்றே தயைசெய் தவளக் கிரிப்பதித் தண்ணளியே
வற்றாத கல்வியுஞ் செல்வமுந் தந்திந்த மானிலத்தே. 20

முற்றிற்று.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
சித்திரத் தேரில் பவனி வர
வாழ்த்துகின்றோம்

சிவகோ அரைக்கும் ஆலை

கூத்தஞ்சிமா, அளவெட்டி வடக்கு.

ஈரஅரிசி, ஈர உழுந்து, மிளகாய்,
தானியவகை என்பவற்றை
குறித்த நேரத்தில் அரைத்துப்
பெற்றுக் கொள்ளலாம்.



அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
சித்திரத் தேரில் பவனி வர
வாழ்த்துகின்றோம்

பொன்மலர் ஸ்ரோர்ஸ்
அளவை கொன்பக்ஷனறி வேக்ஸ்
அன்
தொலைத்தொடர்பு நிலையம்

பலசரக்குப் பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள்,
பரிசளிப்புப் பொருட்கள்,
எரிபொருள் வகைகள்
என்பவற்றை ஒரே இடத்தில்
பெற்றுக் கொள்ளலாம்.

வெளியூர் T.P:
0094 602 212558
0094 602 213426
0777 3024376

உள்ளூர் T.P:
0602 212558
0602 213426
0777 3024376

உள்ளூர், வெளியூர்,
இன்ரநெட்
அழைப்புக்களை
உடனுக்குடன்
பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
சித்திரத் தேரில் பவனி வருவதையிட்டு
அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்

விநாயகர் சைவ உணவகம்

கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.

உங்களுக்குத் தேவையான பலகார,
சிற்றுண்டி, காலை, மாலை
மதிய உணவு வகைகளை
ஓடர் செய்து நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
சித்திரத் தேரில் பவனி வருவதையிட்டு
அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்

றூபா பன்முக வர்த்தகம்

இல. 104 13 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Ruba Versatile Traders

No. 104, Stanley Road,
Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணேசர் பதிகம்

வெண்பா

பூமேவு கோணலிங்க புங்கவன்மே லெங்குறையைப்
பாமேவு நற்பதிகம் பாடவே - தேமேவும்
அற்புதத்தைத் தொந்திவயிற் றைங்கரத்தைக் குஞ்சரத்தைக்
கற்பகத்தைக் கைதொழுவோங் காண்.

கலித்துறை

சீராருங் கோண லிங்கேசா வுன் பாத தெரிசனையை
நேரோயாங்கண்டு தோத்திரஞ் செய்ய நினைத்ததனால்
பேராக லங்கம தேறிவர வுன்றன் பேரருள் தந்
தேராரு நல்வள மாருத மீந்தரு ளெம்மிறையே. 1

இறையே யுனையன்றி யெங்களுக்கார் துணை யின் றவர்கள்
முறையே யெனச் சொல்லும் புத்திரர்க் கன்பு மொழிந்தவர்கள்
குறையே துமின்றி யனுசரிப் பாரந்தக் கொள்கையைப் போல்
நிறைவாய்க் கிருபை தருவாய் மலையுறை நின்மலனே. 2

நின்மல நிஷகள பார்பதிநேச நிருத்த தில்லைப்
பொன்மய வம்பல வாண பராபர பூரணனே
சின்மய கோணலிங் கேச வெமதிடர் தீரவளி
நன்னயங் கொண்டு வளமாய் வரவருள் நல்குவையே 3

நல்லாருஞ் சுற்றமு மைந்தரும் வாழ்வுமிந் நானிலத்தில்
எல்லாம் விழிமயக் காகுநின் பாத விணைமலரே
யல்லாமல் வேறினி யார்துணை செய்குவ ராதிபரர்
சொல்லா லுயர்ந்த திரிகோண லிங்க சுடரொளியே. 4

ஒளியே யொளிக்கு ளுருவேயெம் முள்ளத் துறைபரனே
வெளியே கலியுகந் தன்னில் வரந்தரும் வேலவனை
வளியே யெனந்தந்த கோணலிங் கேச வளிவரவுன்
னளியே புரிந்துநன் னாவாய் துறைசெல்ல வன்புவையே. 5

வையம் பரவு மாலைமகி பாவுமை மாதுபங்கா
செய்யும் வகையின்றி நற்சா கரத்திற் றிகைந்திடுமெம்
மெய்யில் வருத்தத்தை நீக்கிடு மாலுமி மேலுனது
துய்ய கிருபை புரிவாய் நின் பாதத் துணைதுணையே. 6

துணையான தெய்வ முனையன்றி வேறில்லைத் தொல்லுலகில்
பனைமேவு மாமலை யீசா விளங்கு பராபரனே
இணைமா மலர்ப்பத மேத்தின மெம்மிட ரேகவுன்றன்
அணையாய்ப் புணைவந் தருள்வாய் குருபர ஐம்முகனே. 7

ஐம்முகா வைங்கரன் றன்னை யினிதரு ளாதிபரா
வெம்மிடர் தீரவுன் பாதாம் புயத்தினை யேத்துகின்றோம்
செம்மலும் நீ யெங்கள் தெய்வமு நீதிருச் செல்வமுநீ
மெய்மைய தாய்வருவாய் கோணலிங்கத்து விண்ணவனே. 8

விண்ணவ னேவளி தந்தரு ளாயெனில் விம்மலுறு
மண்ணவ ராகிய யாமென்ன செய்குவம் மாலுமிக்குன்
தண்ணளி யீந்து சுகவழி காட்டித் தடங்கடல்சேர்
பண்ணமக் கோணலிங் கேசாவுன் னற்றுறை பார்க்கவையே. 9

வையகத் தேவரும் வானகத் தேவரும் வாழ்த்துகின்ற
மெய்ய குருபர போற்றியெம் பாலனின் மேற்குறைகள்
ஐய திருவுளத் தெண்ணாது காத்திடு மாதிபரா
செய்ய திருமலை வாசா வருள் பொழி சீர்பெறவே.

முற்றிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அளவைநகர்த் தவளக்கிரிப்பதி

மகா முத்துமாரியம்மை பேரிற் பாடிய

திருப்பள்ளி யெழுச்சி

காலமெலாம் உன்றன் கழலிணையைப் போற்றுவேன்
கோலமிகும் ஏகதந்தக் குஞ்சரமே ஞாலமிசை
பள்ளி யெழுச்சியொன்று பாடிமகா மாரியருள்
கொள்ள வரம் நீயேகொடு.

பாருல கண்ட முயிர்தொகை யாவும்
பயந்து புரந்திடும் அன்னையெம் தாயே
மாரியெனத் திருவருள் பொழிதலி னால்
மாரியெனப் பெயர் தாங்கிய மயிலே
சீர்அள வைப்பதி திருநிறை தலத்தில்
திகழ்தவ ளக்கிரிக் கோயிலில் அமர்ந்தாய்
சூரியன் குணதிசைக் குன்றினை அடைந்தான்
சுடர்த்தொடி யேபள்ளி யெழுந்தரு ளாயே. 1

மதுசொரி மலரினம் நறுமணம் பரப்பி
மலர்ந்தன வண்டிசை பரந்ததெங் கெங்கும்
கதிதரு காலையம் பொழுதணு கியது
காரிருள் அகல்வது கண்டு, நின்னடியார்
பதிதொறும் கண்விழித் தெழுந்தனர் தூய்மை
பரித்துநின் கோபுர வாயிலை அடைந்தார்
துதியுறு நற்றவ ளக்கிரி யுறைவோய்
சுந்தரி யேபள்ளி எழுந்தரு ளாயே. 2

குக்குடம் கூவின, இசைத்தன குருவி
கொடியினம் கரைந்தன பறந்தன, வானில்
தொக்கண மீனினம் ஒளியிழந் தனசீர்த்
தொண்டர் குழாமுனைத் தொழுதிடச் சூழ்ந்தார்
தக்கவண் கோபுர வாயிலில் வந்தார்
சார்தவ ளக்கிரி தங்கிடும் அமுதே
மைக்கிளர் கண்டரை மருவிய பரையே
மாரியம் மேபள்ளி யெழுந்தரு ளாயே. 3

தேவரும் முனிவரும் மனிதரும் விரும்பிச்
செஞ்சிலம் பொலிதரு சீறடி வணங்க
மூவுலகும் புரந் தருள்புரி தாயே
முக்கண னார்துணை யாகிய முதலே
காவள ருந்தவ ளக்கிரி யமர்ந்த
காரிகையே மகமாரி யெம் துணையே
சேவடி தந்தெமை ஆண்டுகொண் டருளும்
செம்பொரு ளேபள்ளி யெழுந்தரு ளாயே. 4

ஆயிரம் கண்ணுடை யாயெனப் புலவோர்
அம்மை நின்பெருமையை அறைகுவர் அவற்றுள்
நேயமி குந்தொரு திருவிழிப் பார்வை
நீயுத வுவையெனில் எமக்கது போதும்
தீயவெவ் வினைகளின் நீங்கிநின் னரிய
திருவடிப் பேற்றினுக் கருகரு மாவோம்
தூயவர் வாழ்தவ ளக்கிரி யுறையும்
சுரிகுழலே பள்ளி யெழுந்தரு ளாயே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவைபன் னாலைமுள் ளானையில் உறையும்
அன்பர்வந் தேத்திட அருள்புரி தாயே
பிளவையும் பேதிவை சூரியும் முதலாம்
பிணிகளைப் போக்கிடும் துணையென நின்றாய்
தளவமல் விகைகர வீரமும் கழுநீர்த்
தடமுடன் சார்தவ ளக்கிரி யமர்ந்த
இளநகை மெல்லியல், எம்பெரு மாட்டி
ஏந்திழை யேபள்ளி யெழுந்தரு ளாயே. 6

அரக்கரு மவுணரு மாய்வடி வெடுத்தே
அனைத்துயிர்க்கும் கொடு மால் விளைவிக்கும்
இரக்கமில் லாணவ இருட்பட லத்தை
ஈர்ந்தொடுக் கிடவரும் எழிற்பெரும் சுடரே
அரத்தக மெல்லடி இணைதொழ வேண்டி
அரியநின் பொற்றிரு வாயில் யடைந்தோம்
திருத்திக ழுந்தவ ளக்கிரி உறையும்
தெள்ளமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 7

அயனரி சிவனென ஓதுமுத் தேவர்
அழித்தலும் காத்தலும் துடைத்தலும் புரிய
மயலறுத் தவர்க்கதி காரமும் வழங்கி
மாபெருங் கருணையின் உயிர்த் தொகைபுரக்கும்
இயல்புடன் வீற்றிருந்த தருளுமெய்த் துணையே
ஏழிற்றவ ளக்கிரி அமர்ந்திடும் தாயே
சுயமுறு சோதியிற் துலங்குமெம் மமுதே
தூயவளே பள்ளி யெழுந்தரு ளாயே. 8

அண்டமும் புவனமும் சராசரம் அனைத்தும்
அகிலமும் நிறைந்துயிர்க் குயிரென நினைத்தே
மண்டிய மலமிருட் கொடும்பிணி தீர்த்து
மாசறு திருவடி மலரளித் தருள்வோய்
கொண்டல்வண் ணன்புகழ்த் தங்கையே அடியர்
குழாம் நிறை யும்தவ ளக்கிரி உறைவோய்
சண்டிகையே மகமாரி யெம் தாயே
தற்பரை யேபள்ளி எழுந்தரு ளாயே. 9

இந்திரை சசியுடன் இருமருங் கினிலும்
எழிலுற நிலைத்துவெண் சாமரை இரட்ட
சுந்தர வீணையை மீட்டினள் வாணி
தோழியரோ டருந் தோத்திர மிசைப்ப
அந்தர மாத ரம்பையர் வாழ்த்த
அருமணிப் பீடிகை அமர்ந்தருள் பொலிந்து
விந்தை மிகும்தவ ளக்கிரி உறையும்
மென்கொடியே பள்ளி யெழுந்தரு ளாயே. 10

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அளவெட்டி வடக்கு - தவளக்கிரி

ஸ்ரீமுத்துமாரியம்மை தோத்திரம்

அருட்கவி. சீ. விநாசித்தம்பிப்புலவர்

அன்னையே அகிலாண்ட கோடிகளெ லாம்காக்கும்
அங்கயற் கண்ணி உமையே
அடங்காத மாரனெனும் அசுரன்கொடுங் கோலாட்சி
அழித்துத் தெய்வீக ஞானம்
உன்னுமவன் மகனாட்சி ஓங்கநல் வரமுதவி
உலகெலாம் வறுமை நீக்கி
ஊனெழுகு நோய்போக்கி வானமுயர் கம்பத்தில்
ஒளிர்கரக மீதமர்ந்து
பன்னக மணிந்தபரன் பாலித்த கலசத்தால்
படியளக்கும் செல்வியே
பாரோடு விண்மருவு தங்கரத மேறிவரும்
பரந்தாமன் மகிழ் தங்கையே
மன்னுநின் பணித் தொண்டர் எண்ணியன கைகூடி
மனங்குளிர வந்தருளுவாய்
வடஅளவைப் பதிதவளக் கிரிமேவு சிங்கார
மகாமுத்து மாரித்தாயே 1

தொண்டுபுரி யடியார்கள் தொழும்மாலை வேளையில்
சொர்ணக் குழந்தைவடிவில்
சுவைமழலை மொழிபேசி மெல்லத் தவழ்ந்து வரும்
தோற்றங்கள் காட்டிநின்று
பண்டுபுரி யாகங்கள் பூசனைகள் ஏற்றுநற்
படைக்காத்த வராயன்தனைப்
பற்றுமென் மகனென்று திருவாக் குரைத்தாடல்
பலகொண் டமர்ந்தாயம்மா
கண்டகண் குளிரவரும் கற்பகத் தெய்வமே
கருதுமவர்க் கமுதகனியே
கலைவீச்சு நின்கோயிற் கும்பாபி ஷேகம்நிறை
கனகசபை யாக அருள்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டுலவு சடையசையத் தண்டைச் சிலம்பசைய
வருபூத மசைய நடித்து
வடஅளவைப் பதிதவளக் கிரி மேவுசிங்கார
மகாமுத்து மாரித்தாயே. 2

எண்ணியழைப் பவர்நெஞ்சி னகலாக இறைவியே
ஏத்துமடி யார்க்கிரங்கி
இளமுறுவல் முகமலர்ந் திரத்னமணித் தோட்டுடன்
இலங்குமுடி ஒளிபரப்ப,
பண்ணிசைத் துடிசூலம் நாந்தகம் தனுபாசம்
பாதுகாப்புப் பிரம்பு
பசியவேப் பிலைநீறு ருத்ராக்க மணிமாலை
பங்கயக் கைகளேந்தி
தண்ணளிப் பொற்றுகில் தனமருவு கச்சீனுறு
சங்கரன் தாலி திகழ
சாந்தசிவ ரூபியாய்க் காந்தளப யம்வாதம்
தந்துவயச் சிங்கமேறி
வண்ணமா துளமேனி கமழவரு வாய்நின்றன்
வழித்தொண்டுப் பேறு தருவாய்
வட அளவைப் பதிதவளக் கிரிமேவு சிங்கார
மகாமுத்து மாரித்தாயே. 3

எங்கும் பொலிந்தருள் தங்கும் படிக்கு முச்சங்கம் வகுத்த தலைவி
பொங்கிப் படர்ந்த பேரங்கிப் பொருப்பிலே பங்குக்கு நின்ற இறைவி
கங்கைச் சலத்தில் வரு சங்கைப் பிடித்தவுடன் மங்கைக்கு நின்ற அழகி
சிங்கத்தில் ஏறியே தங்கச் சிலப்புகள் தொங்கிக் குலுங்க வருக. 4

சிறந்த சிந்தனையும் உயர்ந்த பண்புகளும் ஒருவனுக்குப் பக்க பலமாயிருக்குமெனில், அவன் சூழ்நிலைகளின் எஜமானன் ஆவான். அப்படியில்லையெனில், அவன் சூழ்நிலைகளின் கைதியாக வேண்டியதே, வெற்றியை அல்லது தோல்வியைத் தேர்ந்தெடுப்பது எமது கைகளிலேயே தங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அளவை நகர் - தவளக்கிரி

ஸ்ரீ மகா முத்துமாரியம்மன் திருவூஞ்சல்

காப்பு

சீரோங்கு முலகுதனில் வாம மாரும்
செல்வமலி யளவைவட பாலில் மேய
நீரோங்கு வயலினொடு சோலை சூழும்
நிறையறிவின் பெரியர்கள் வாழ்நீர்மை சான்ற
ஊரோங்கு மருள் புரியுந் தவளக்கிரி
யுறுமாரி யம்மைதிரு வூஞ்சல் பாட
காரோங்கு கடரமத மாநேர் துண்டக்
கணபதிதன் னிருசரணங் காப்ப தாமே.

விருத்தம்

பொன்னாரும் மறைநான்குங் கால்களாக
புகலுமுப வங்கமொளிர் விட்ட மாக
தென்னாரு மிசைநான்கும் கயிற தாக
செப்பரிய பிரணவம் பொற் பலகை யாக
உன்னாருங் கலைகள் மிளிர் பதுமையாக
உம்பருற வாக்கிய பொன்னூஞ்ச லேறி
மின்னாரும் ஒண்டவளக் கிரிப் பாடி
மேயமுத்து மாரியரே யாடீ ரூஞ்சல். 1

பானுவொடு பைங்கதிரோன் குடைகள் தாங்க
பவனொளிர் சிவிறிமிளிர் கவரி வாங்க
கானமுறும் ஆலவட்ட மங்கி வீங்க
கையிலகு வேத்திரந்தென் கடவு ளோங்க
பானல்வழி யயிராணி யடைப்பை தூங்க
பங்கையமா னாடியங்கை பற்றித் தூங்க
தேனவிழ் பூஞ் சோலை வளர் தவளக்கிரி
சேருமுத்து மாரியம்மை யாடீ ரூஞ்சல். 2

செம்பவளத் தாலிலகு தூண்கள் நாட்டி
திகழுமர கதவளைகள் சேரநீட்டி
உம்பருற வயிரமணிக் கைகள் ஓட்டி
ஒளிவிடுவெண் தரளவுயர் கயிறு மாட்டி
அம்பொனினேர் தலையியற்று பலகை பூட்டி
ஆக்கிய பொன் ஊஞ்சல் மிசை அளியொடேறி
வெங்கலியோர்க் கருள்புரியத் தவளக் கிரி
வீற்றிருக்கும் மாரியம்மை யாடீ ரூஞ்சல். 3

அன்பினொடு தொழுமடியார் அல்லல் நீக்கி
அவருள மெய்க் களிகூர வருளின் நோக்கி
இன்பமுறு போகமெலா மெண்ணி யாங்கு
ஈந்தருளுந் நலனுறுமெய்ஞ் ஞான சக்தி
மின்பொலியுஞ் சடையளகம் விளங்கு சோதி
மெய்யழகுங் கண்டடியார் வீழ்ந்து போற்ற
மனப்புனல்சேர் வயல் சூழும் தவளக் கிரி
வருமினிய மாரியம்மை யாடீ ரூஞ்சல். 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டர்மட வார்களெல்லாம் நடன மாட
அயிராணி யணிபணிகள் ஆய்ந்து கூட்ட
ஒண்டவள மறைவாணி யூசல் தாங்கும்
ஒளிபெறுநல் வடம்பற்றி யளியி னாட்ட
சண்டிகையுஞ் சூலியும் மெய்த்தகைமை சால
சாருமுதற் கடைவாயில் காவல் செய்ய
கொண்டல் படி சோலை வளர் தவளக் கிரி
கோயில் கொண்ட மாரியம்மை யாடீ ரூஞ்சல். 5

பூமகள் தன் பொறைதீர்ப்பார் யாரென் றெண்ணி
போந்துனையே வழிபட நீ புரமூன் றட்ட
சாமிதன தேவலினால் தரையுள் ளோரில்
தருமமிலாப் பாவியரை தகுநோ யீந்து
ஏமமிலா நரகழிக்கு இறைமை பூண்டு
இறை அடியார்க் கருள் புரியும் இனிய சக்தி
தாவமட முத்தணியுந் தவளக் கிரி
தையல்முத்து மாரியம்மை யாடீ ரூஞ்சல். 6

கொண்டல் நிகர் சடையளகங் குலுங்கி யாட
கூந்தல்மலர் வண்டினொடு விழி வண்டாட
தொண்டையுறு கனியதர மெழில் கொண்டாட
தொழுமடியார் வினைகளெலா மஞ்சி யோட
முண்டகநேர் கரமுத்து மாலையாட
மூதுணர்ந்த காத்தவனுஞ் சூலமாட
இண்டை மலர் விரிபுனல்சேர் தவளக் கிரி
இனிதிருக்கு மாரியம்மை யாடீ ரூஞ்சல். 7

ஓங்குநுதற் கண்ணுடையா யாடீ ரூஞ்சல்
யுயர் சூலங் கரமுடையா யாடீ ரூஞ்சல்
தாங்கு முத்து மாலையுளா யாடீ ரூஞ்சல்
தரையளந் தோன் சோதரியே யாடீ ரூஞ்சல்
பூங்கனக வணியணிவா யாடீ ரூஞ்சல்
பூமகளின் பொறை தீர்ப்பா யாடீ ரூஞ்சல்
ஏங்கடியார்க் கருள் புரியுந் தவளக் கிரி
எய்தி முத்து மாரியம்மை யாடீ ரூஞ்சல். 8

நான்மறைதே ரந்தணரா னினமும் வாழி
நவில்வீர் சைவரினம் நண்ணி வாழி
மேன்மையுறு மிசையாளர் மிக்கு வாழி
வீரமுறு மன்னர்கள்செங் கோலும் வாழி
சூன்மருவு மெழிலிமழை பொழிந்து வாழி
துகளறுவே ளாளர் கைங் கூழ் துன்னி வாழி
தாங்கு புகழ் மேயவர் வாழ் தவளக் கிரி
தங்கு சக்தி மாரியம்மை வாழி வாழி. 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம்சக்தி

மங்களம்

விக்கினங்கள் தீர்க்கு மெங்கள்
விநாயகருக்கு மங்களம்
வீரனெனத் தேவர் தம்மைக்
காத்தவர்க்கு மங்களம்
இக்குவல யத்தில் உள்ள
எல்லோருக்கும் மங்களம்
இன்னருள்செய் தம்பியான
சண்முகற்கும் மங்களம்
பக்குவமாய் உலகு காக்கும்
பரமனுக்கு மங்களம்
பாலர் இரு வரையும் ஈன்ற
பார்வதிக்கும் மங்களம்
திக்குகளும் போற்று மெங்கள்
திருவூராம் அளவெட்டி
தவளக்கிரி நாயகிக்கும்
சேர்ந்தவர்க்கும் மங்களம்.

மங்களம்! மங்களம்!! மங்களம்!!!

மங்களமா மனைத்தினுக்கும் மங்களமே சிவமே
மக்கள் விழை நாற்பொருளும் வழங்குநலத் தாயே
எங்கள்புக லேவிழிமுன் றேய்ந்தவளே கௌரி
எழில்நாரா யணியுன்னை இறைஞ்சிடுவோம் யாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
சித்திரத் தேரில் பவனி வருவதையிட்டு
அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்

வீ. எம். கே. ஜுவல்லறி

உங்களது பழைய நகைகளைக் கொடுத்து
உடனுக்குடன் புதுப்பொலிவுடன் திகழ
அசல் 22 கரட் தங்க நகைகளைத் தெரிவு செய்ய இன்றே நீங்கள்
நாடவேண்டிய இடம்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து தரப்படும்.

105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 060 - 2212989,
021 - 2227339

கிளை: 15, கண்டி றோட்,
சாவகச்சேரி
T.P: 071 2324412
0777 723021

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
சித்திரத் தேரில் பவனி வருவதையிட்டு
அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்

மணியம் ஸ்ரோர்ஸ்

அளவெட்டி வடக்கு (சிவன் கோயிலடி, சுன்னாகம்)

எங்களிடம் பலசரக்குப் பொருட்களை
நியாய விலையில்
பெற்றுக் கொள்ளலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

P.P

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
சித்திரத் தேரில் பவனி வருவதையிட்டு
அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்

பிரகாஷ் பதிப்பகம்

கணனி மூலமான வடிவமைப்புக்களை ஒவ்(F)செட்,
ஸ்கிறீன் பிறின்டிங், Book Binding (புத்தகம் கட்டுதல்)
என்பவற்றை செய்துகொள்ளவும்,

தரமான பதிப்பு வேலைகளுக்கும்
கணனி வடிவமைப்புக்களுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

Prakash Pathippakam

கரவச்சை, ஞானவைரவர் கோயிலடி,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
T.P. 077- 6273464

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
சித்திரத் தேரில் பவனி வருவதையிட்டு
அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்

கோட்டல் ஜொலி

பலாலி வீதி, திருநெல்வேலி.

காலை, மதிய, மாலை, போசனத்திற்குரிய
சைவ, அசைவ உணவு
வகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
அத்துடன் ஓடர் செய்து
குறித்த நேரத்திலும் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டி ஒரே நிறுவனமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி நவிலல்

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மனிற்கு புதிய சித்திரத்தேர் ஒன்றினை அமைப்பதற்காக 05-08-2003 அன்று தெரிவு செய்யப்பட்ட எமது சபையானது எங்கள் மூதாதையர்கள் பலர் ஆவலுடன் கண்ட கனவினை எல்லாம் வல்ல அன்னையின் திருவருள் துணையினால் 07-07-2005 அன்று நிறைவு செய்து புதிய சித்திரத் தேரின் வெள்ளோட்டத்தை கண்ட நிலையில் 11-07-2005 அன்று அன்னை புதிய தேரில் ஆரோகணித்து அடியவர்களுக்கு அருள் புரியும் நோக்குடன் வசந்த மண்டபத்தில் தன் பிள்ளைகள் உடனிருக்க சர்வ அலங்கார பூஷனியாய் வீற்றிருக்க அம்பிகைக்கு விசேட தீபாராதனைகள் நடைபெறும். தொடர்ந்து சிவாச்சாரியார் அவர்கள் ஒவ்வொரு நாமங்களாக உச்சரித்து புஷ்பங்களை அவளது திருவடித் தாமரைகளில் சமர்ப்பிக்கும் விந்தையை பார்ப்பதா, பூரண சந்திரன் போல் பிரகாசம் வீசிக்கொண்டிருக்கும் அவளது முக ஜோதியில் அரும்பும் இளநகைப் புன்சிரிப்பைப் பார்ப்பதா? அச்சிரிப்பு எமக்கெல்லாம் ஏதோவொன்றைச் சொல்வது போல் அமைந்திருக்க, எமது ஆவலைத் தீர்த்து வைப்பவளாய் எழுந்தருளி ஆடிஅசைந்து தேர்நோக்கி வருகின்ற காட்சியை காணத் தோன்றும் உளப்பூரிப்பை வெளிப்படுத்த இயலாது மெய் சிலிர்க்க கனவு நனவாகப் போகின்றதையெண்ணி கண்கள் கண்ணீர் சிந்த நாம் செய்த அருந்தவத்தின் பயனாக அன்னையவள் புதிய தேர் ஏறி வரும் காட்சிதனைக் காண பல்லாயிரம் மக்கள் திரண்டிருப்பார்கள். இத்தகைய வரலாற்று நிகழ்வு நிகழ்வதற்கு காரணமாயிருந்த உள்ளங்களிற்கு நன்றி கூறுதல் என்பது என்னால் இயலாத காரியம் ஒன்றாகும். இருப்பினும் அன்னை அவள் திருவருள் துணைக்கொண்டு எனது கடமைக்கிணங்க இவ் நன்றியுரையை ஆரம்பிக்கின்றேன்.

எங்களது வாழ்க்கைக் காலத்திலே இந்த அரிய சித்திரத் தேர் அமைய வேண்டும் என்ற பாக்கியத்தினை எங்களுக்கெல்லாம் கொடுத்தருளிய எல்லாம் வல்ல தும்பி முகத்தான் தாயாகிய தவளக்கிரி அன்னையின் பாதகமலங்களிற்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு தொடர்கின்றேன்.

அன்னையினுடைய சித்திரத் தேரினை உரிய காலத்தில் எதுவித குறைபாடுகளும் இன்றி சாஸ்திர முறைகளுக்கு அமைவாக எமது கருத்துக்களையும் ஏற்று உருவாக்கித் தந்த ஆறுமுகம் சிற்பாலய ஸ்தபதி ஜீவரத்தினம் ஜெயப்பிரகாஸ் அவர்களுக்கும் அவருடன் தோளோடு தோள் நின்று உழைத்த அவரது சிற்பாலய ஸ்தபதிகளுக்கும் ஏனைய ஸ்தபதிகளுக்கும் இந்தியாவில் இருந்து வருகை தந்து எழிலார்ந்த சிற்பங்களையெல்லாம் ஆகம முறைப்படி அமைத்துத் தந்த சிற்பிகளுக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

அன்னையினுடைய சித்திரத் தேரினை காலா காலம் பழுதடையாத வண்ணம் பாதுகாப்பதற்குரிய தேர்க்கொட்டகையை மிகத் திறம்பட உருவாக்கித் தந்த கோண்டாவில் ஒப்பந்தக்காரர் திரு. திலீப்குமார் அவர்களுக்கும் அவர் தம் குழுவினர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

இடப்பெயர்ந்து மீண்ட பின் 1997 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரை அன்னையின் தேர்த்திருவிழாவுக்கு பயன்படுத்துவதற்கு தம்முடைய கட்டுத் தேரைத் தந்துதவிய வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயத்தினர்களுக்கும் எமது நன்றிகள்.

இத்தேரினை உருவாக்குவதற்கு எம்முடன் சகலவழிகளிலும் ஒத்துழைத்து தேர் உருவாக்குவதற்கான பணத் தொகையின் பெரும்பகுதியினை பொறுப்பேற்று கொடுத்துதவிய தேர்த்திருவிழா உரித்துடைய உபயகாரர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

இச் சித்திரத் தேரினை உருவாக்கும் முயற்சியை ஆரம்பித்த வேளை தாமாகவே முன்வந்து பொருள் உதவிகள், பண உதவிகள், சரீர உதவிகள், ஆலோசனைகள் வழங்கிய நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

சித்திரத்தேர் உருவாக்கத்திற்கு முதன்மை கொடுத்து அறிவுரைகள் வழங்கியும் நிதி சேகரிப்புக்களை மேற்கொண்டு வழங்கிச் செயற்பட்ட அளவெட்டி வடக்கு தவளக்கிரி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய இலண்டன் அறக்கட்டளைச் சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்த்திருப்பணி சிறப்புடன் நடைபெற தம்மால் இயன்ற ஒத்துழைப்புக்களையும், உடல் உழைப்புக்களையும் நல்கிய பரிபாலன திருப்பணிச் சபை, தொண்டர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

இம்மலரினையும் பத்திரிகையில் வெளிவந்த வெள்ளோட்ட விழா சிறப்பு மலரினையும் சிறப்பிக்குமுகமாக ஆசியுரைகள், வாழ்த்துச் செய்திகள், ஆக்கங்கள் தந்துதவியவர்களுக்கும் நேரில் வருகை தந்து ஆசியுரை வழங்கிய நல்லை ஆதின முதல்வர் அவர்களுக்கும், இவ்விடத்தில் நன்றி கூற கடமைப்பட்டு இருக்கின்றோம்.

இம்மலரினை சிறந்த முறையில் மிக நேர்த்தியாக தமது சிரமத்தையும் கருத்தில் கொள்ளாது அர்ப்பணித்து, செயலாற்றி குறுகிய காலத்தில் அச்சுப்பதித்து தந்துதவிய பிரகாஷ் பதிப்பகத்தார்களுக்கும் எமது நன்றிகள்.

மலருக்குரிய புகைப்படங்களை உரிய காலங்களில் வந்து எடுத்து தந்து உதவிய புகைப்படக் கலைஞர் க. சிவம் அண்ணர் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

இம்மலருக்குரிய விளம்பரங்களைத் தந்துதவிய வர்த்தகப் பெருமக்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

திருப்பணிச் சபையின் கணக்கு விபரங்களை நன்கு பரிசீலனை செய்து பல வழிகளிலும் உதவி புரிந்து வருகின்ற கணக்காய்வாளர் திரு. சு. முருகையா அண்ணர் அவர்களுக்கும் நன்றிகள்.

அன்னையினுடைய சித்திரத்தேர்ப் பவனியைக் காணவேண்டுமென்று அடங்கா ஆவல் கொண்டிருந்த எமது ஆலயத்தின் உரித்துடைய பூஷகர் ஐயா அவர்கள் இன்று எம்முடன் இல்லாது அம்பிகை பாதகமலங்களில் சேர்ந்தவிடத்தும் அவர் தேர்த்திருப்பணி தொடர்பாக வழங்கிய ஆக்கமும், ஊக்கமும் இன்றும் எம்மால் நினைவு கூரத்தக்கதாக அமைகின்றது.

அன்னையினுடைய உற்சவகாலங்களிலெல்லாம் தவறாது வருகை தந்து எம்மை நெறிப்படுத்தி ஊக்கம் கொடுத்து உற்சாகப்படுத்தியதுடன் தனது உடல், பொருள், ஆவி என்பவற்றை அர்ப்பணித்து தான் நிற்கின்ற குறுகிய காலங்களில் செயலாற்றிய அமரர் திரு.ச. சற்குணசிங்கம் அவர்கள் திடீர் மறைவு எமக்கு அதிர்ச்சியாக அமைந்த பொழுதும் அவரது ஆசை நிறைவேறிய நிலையில் அவரது ஆத்மா சாந்தியுறப் பிரார்த்தித்து அவரது சேவைக்காக தலைசாய்க்கின்றோம்.

இவ்விடத்தில் எமக்கு ஆலோசனைகள் வழங்கியவர்கள் எமது தோளோடு தோள் நின்று உழைத்தோர் தொண்டர்கள் நன்றி கூறலில் தவற விடப்பட்ட உள்ளங்கள் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். அருள் நிறைந்த எம்பெருமாட்டியின் மெய்யடியார்களின் பேருதவிகள் ஒத்தாசையுடன் கூடவே திருப்பணிச் சபையினரின் அயரா முயற்சியும் சேர அழகான சித்திரத் தேர் அமையப்பெற்றிருப்பது யாவரும் அறிந்த உண்மையாதலால் அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் மீண்டும் எமது பணிவு அன்பு நிறைந்த நன்றியறிதலைக் காணிக்கையாக்குவதோடு எல்லாம் வல்ல முத்துமாரி அன்னையின் திருவருட் கடாட்ஷம் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென்று அவள் மலர்த்திருப்பாதங்களுக்குச் சிரந்தாழ்த்தி வணங்கி அமைகிறேன்.

சுபம்

தவளக்கிரி,
அளவெட்டி வடக்கு.
08-07-2005

திரு. தாயுமானவர் நிகேதன்
உபசெயலாளர் தேர்த்திருப்பணிச் சபை
செயலாளர் பரிபாலனசபை

குறிப்பு: தேர், தேர்முட்டி திருப்பணிகள் சம்பந்தமான பூரண கணக்கு விபர அறிக்கை ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
சித்திரத் தேரில் பவனி வருவதையிட்டு
அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்

A.V.R Motors

T.V.S, Umasaki Samra

ஆகியவற்றின் ஏக விநியோகஸ்தர்கள்

இங்கே விதம் விதமான மோட்டார் சைக்கிள்களையும்,
சகல விதமான மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களையும்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

ஏ.வீ.ஆர் மோட்டோர்ஸ்

இல. 100 ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

தவளக்கிரி முத்துமாரி அம்மன்
புதிய சித்திரத் தேர் ஓட்டம்
சிறக்கட்டும்

சீலன்
பல்பொருள்
வாணிபம்

பலசரக்குப் பொருட்களுக்கு
நீங்கள் நாடவேண்டிய
ஸ்தாபனம்

தெல்லிப்பளை பண்டத்தரிப்பு வீதி,
சிறுவிளான்,
இளவாலை

தவளக்கிரி முத்துமாரி அம்மன்
புதிய சித்திரத் தேர் ஓட்டம்
சிறக்கட்டும்

நியூ றோயல்
சிகை
அலங்கரிப்பு நிலையம்

தெல்லிப்பளை பண்டத்தரிப்பு வீதி,
அடஅளவை சனசமூக நிலையத்தடி,
அளவெட்டி

உரிமையாளர்
க. கணேசலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி
தவளக்கிரி முத்துமாரி அம்மன்
புதிய தேர் ஏறும் அரிய காட்சியைக்
காண ஆயிரம் கண் வேண்டும்

மலேயன் அழககம்

கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி

நவீன முறையில்
சிகை
அலங்காரம்
செய்யப்படும்

உரிமையாளர்:
சீ. சிவநேசன்



தவளக்கிரி முத்துமாரியின்
வெள்ளோட்ட நிகழ்வும்
தேரேறும் நிகழ்வும்
சிறக்க வாழ்த்துகின்றோம்

அம்பிகைப் பந்தல் பணி

அம்பாள் கோவிலடி,
அளவெட்டி வடக்கு.

தங்கள் வீடுகளில்,
ஆலயங்களில் நடைபெறும்
மங்களகரமான
நிகழ்வுகளுக்கான
பந்தல், மணவறை,
மாலை வகை,
சப்பறம், சாத்துப்படி,
என்பன சிறந்த முறையில்
செய்து தரப்படும்.

உரிமையாளர்:
சின்னத்துரை (பாலன்)

அளவெட்டி
தவளக்கிரி முத்துமாரி அம்மன்
புதிய தேர் ஏறும் அரிய காட்சியைக்
காண ஆயிரம் கண் வேண்டும்



மின்சார இணைப்புக்கள்,
பைப்லைனிங் என்பவற்றை
சிறந்த முறையில் செய்து
கொள்ள நீங்கள்
நாடவேண்டியது

ஆ. முருகையா
(அளவெட்டி வடக்கு)

தொடர்புக்கு: 37/8, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

தவளக்கிரி முத்துமாரியின்
வெள்ளோட்ட நிகழ்வும்
தேரேறும் நிகழ்வும்
சிறக்க வாழ்த்துகின்றோம்

ஈசன் களஞ்சியம்

கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.



விவசாய உள்ளீடுப்
பொருட்கள்,
கிருமி நாசினிவகை,
உரவகை,
துவிச்சக்கர வண்டியின்
உதிரிப்பாகங்கள்
என்பவற்றை ஒரே
இடத்தில் பெற்றுக்
கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி
தவளக்கிரி முத்துமாரி அம்மன்
புதிய தேர் ஏறும் அரிய காட்சியைக்
காண ஆயிரம் கண் வேண்டும்

துஷ்யந்தன் பல்பொருள் வாணிபம்

மகாத்மா வீதி,
அளவெட்டி வடக்கு,

தரமான
பலசரக்குப் பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள்,
எரிபொருள் வகைகள்
என்பவற்றை
பெற்றுக் கொள்ளலாம்.

அளவெட்டி அன்னையின் வெள்ளோட்டமும்,
தேரோட்டமும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

ஏசியன் எலக்ரோனிக்ஸ்

மின்சார இலத்திரனியல்
பொருட்கள்,
CD, VCD, DVD போன்ற
அனைத்துப் பொருட்களையும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே
ஸ்தாபனம்

இல. 11/4 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 0777 785549

குறிப்பு: வீட்டு மின் வேலைகள்
ஒப்பந்த அடிப்படையில்
செய்து கொடுக்கப்படும்.

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
புதிய தேர் ஏறும் அரிய காட்சியைக்
காண ஆயிரம் கண் வேண்டும்

மாருதி ரேடிங் சென்ரர்

General Merchants
and
commission Agents

இலத்திரனியல் பொருட்களை
நியாயமான விலையில்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

16A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 2932

அளவெட்டி அன்னையின் வெள்ளோட்டமும்,
தேரோட்டமும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

Sun Caffee

சிற்றூண்டி வகைகள், உணவு வகைகள்
என்பவற்றைச் சுவையானதாகவும்,
தரமானதாகவும் பெற்றுக் கொள்ள
நாடவேண்டியது.

சண் கபே

அரசடிச் சந்தி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி
தவளக்கிரி முத்துமாரி அம்மன்
புதிய தேர் ஏறும் அரிய காட்சியைக்
காண ஆயிரம் கண் வேண்டும்

துவாரகா பல்பொருள் வாணிபம்

பலசரக்குப் பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள்,
அன்பளிப்புப் பொருட்கள்
என்பவற்றைப் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டியது.

கே. கே. எஸ். வீதி,
மக்கள் வங்கி அருகாமை,
மல்லாகம்.

T.P: 077 6594639

அளவெட்டி அன்னையின் வெள்ளோட்டமும்,
தேரோட்டமும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

சத்தி அரைக்கும் ஆலை

மகாத்மா வீதி, அளவெட்டி வடக்கு.

ஈர அரிசி, மிளகாய்,
தானியவகைகள்
என்பவற்றை
சிறந்த முறையில்
அரைத்துப்
பெற்றுக் கொள்ளலாம்.

உரிமையாளர்
பொ. சத்தியநாதன்

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
புதிய தேர் ஏறும் அரிய காட்சியைக்
காண ஆயிரம் கண் வேண்டும்

லக்கி பார ஊர்தி சேவை

(Transport Service)

தங்களது பொருட்களை ஓரிடத்தில்
இருந்து இன்னோர் இடத்திற்கு
நியாயமான கட்டணத்தில்
ஏற்றி இறக்குவதற்கு தொடர்பு
கொள்ள வேண்டிய ஸ்தாபனம்

மல்லாகம் கிழக்கு,
மல்லாகம்.

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
புதிய தேர் ஏறும் அரிய காட்சியைக்
காண ஆயிரம் கண் வேண்டும்

ஜெநோசன் ஸ்ரோர்ஸ்

(சில்லறைக்கடை)

பலசரக்குப் பொருட்கள்,
வாழைப்பழம்,
சகல மிக்சர் வகைகளும்,
பாடசாலை உபகரண்கள்,
எரிபொருள்கள் முதலியனவற்றை
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

உரிமையாளர்
து. ஜெயலிங்கராசா

குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
சித்திரத் தேரில் பவனி வர
வாழ்த்துகின்றோம்

ஐஸ்பழம், கோன், சர்பத், சொக், பெசல், நோமல்,
நட்ஸ், சோடா வகைகள், மற்றும் சிற்றுண்டி வகைகள்
அனைத்தையும் சுவைத்து மகிழ்ந்திட நீங்கள் நாடவேண்டிய
ஸ்தாபனம்

அம்பிகா
கிறீம் ஹவுஸ்

அருணோதயாக் கல்லூரிக்கு
அருகாமை,
மலைவேம்படி,
அளவெட்டி.

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
சித்திரத் தேரில் பவனி வர
வாழ்த்துகின்றோம்

ரஜீவன் எலக்ரிக்கல்ஸ்

மின்சார உபகரணங்கள், *T.V.* அன்ரனாக்கள்,
பைப் வகைகள்
போட்டோஸ்ரட் பிரதிகள்
செய்து கொடுக்கப்படும்.



1008, K. K. S. Road,
Narchchimar Kovilady,
Jaffna.

1008, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

T.P. 222 7533

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
புதிய தேர் ஏறும் அரிய காட்சியைக்
காண ஆயிரம் கண் வேண்டும்

கட்டிட ஒப்பந்தகாரர்

தங்களது எண்ணங்களை
குறைந்த செலவில்
நிறைவான தரத்துடன்
உரு வடிவில் கண்டிட
நீங்கள் நாடவேண்டிய
ஒரேயொரு ஒப்பந்த நிறுவனம்

சி. சற்குணராசா காளிகோவிலடி,
கொக்குவில் மேற்கு.

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
புதிய தேர் ஏறும் அரிய காட்சியைக்
காண ஆயிரம் கண் வேண்டும்

அஜந்தாஸ்

ரெக்ஸ்ரைஸ்ஸ்



54, பெரியகடை,
25, 4ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

மங்கள வைபவங்களுக்கேற்ற
கூறைச்சேலைகள்
காஞ்சிபுரம்
சேட்டிங், சூட்டிங்,
கோவில் பட்டுக்குடைகள்
மற்றும் பல
பிடவைத் தினுசுகளையும்
உங்கள் எண்ணம் போல்
தெரிவு செய்ய
சிறந்த ஸ்தாபனம்

T.P 222 2899, 222 - 7150, 222 - 7119

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
புதிய தேர் ஏறும் அரிய காட்சியைக்
காண ஆயிரம் கண் வேண்டும்

தேனு களஞ்சியம்

விவசாயப் பொருட்கள், பலசரக்கு
பொருட்கள், எரிபொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள்
என்பவற்றை எம்மிடம்
பெறலாம்.

உரிமையாளர்
த. சிவநேசன்

டச்சுறோட்,
மாரிட்டிச் சந்தி,
அளவெட்டி.

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
புதிய தேர் ஏறும் அரிய காட்சியைக்
காண ஆயிரம் கண் வேண்டும்

கிருபா
துவிச்சக்கரவண்டி சீர்செய்யும் நிலையம்

எம்மால் சகல வகையான துவிச்சக்கர வண்டிகளும்
திருத்திக் கொடுக்கப்படும் என்பதுடன்
மோட்டார் வண்டிகளுக்கான
ஓட்டுக்களும் செய்து கொடுக்கப்படும்

தெல்லிப்பளை,
பண்டத்தரிப்பு வீதி,
அளவெட்டி வடக்கு.

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
புதிய தேர் ஏறும் அரிய காட்சியைக்
காண ஆயிரம் கண் வேண்டும்

மதி ஒலி, ஒளி அமைப்பாளர்கள்

ஆலய உற்சவ காலங்கள்
மங்களகரமான வீட்டு நிகழ்வுகள்
என்பவற்றிற்கு ஒலி, ஒளி
அமைத்து கொடுக்கப்படும்.

சின்னம்மை கோவிலடி,
அளவெட்டி வடக்கு.

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
புதிய தேர் ஏறும் அரிய காட்சியைக்
காண ஆயிரம் கண் வேண்டும்

சுதா தையலகம்

பெண்களுக்கான ஆடைகளை
சிறப்பான முறையில்
தைத்துக் கொள்வதற்கு
நீங்கள் நாடவேண்டிய ஒரே நிலையம்

டச்சுறோட்,
மாரிட்டிச் சந்தி,
அளவெட்டி வடக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
புதிய தேர் ஏறும் அரிய காட்சியைக் காண ஆயிரம் கண் வேண்டும்

நிரூஸ் குளிர்பானகம்

விளான் வீதி,
தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவிலடி,
அளவெட்டி வடக்கு.

குளிர்பான வகைகள், கேக், ரோல்ஸ், கேசரி மற்றும் சிற்றுண்டி வகைகள் யாவும் இவ்விடத்தில் சுவைத்து மகிழ்ந்திட நாடவேண்டிய ஸ்தாபனம்

ஓடருக்கு பலகார வகைகள்
செய்து கொடுக்கப்படும்

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
புதிய தேர் ஏறும் அரிய காட்சியைக் காண ஆயிரம் கண் வேண்டும்

சண்
வீடியோ கொம்

பழைய, புதிய தென்னிந்திய திரைப்பட இறுவெட்டுக்களையும் [CD], ஒளி நாடாக்களையும் [படக்கொப்பி] எம்மிடம் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

சூத்தஞ்சிமா
அளவெட்டி வடக்கு.

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்
புதிய தேர் ஏறும் அரிய காட்சியைக்
காண ஆயிரம் கண் வேண்டும்

கணேசன்
அரைக்கும் ஆலை

ஈர அரிசி, ஈர உழுந்து, மிளகாய், தானியவகை என்பவற்றை எம்மிடம் அரைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

டச்சுறோட்,
மாரிட்டிச் சந்தி,
அளவெட்டி.

**அணுகிட்ட வேளை
முறுவலுடன் வரவேற்று
மறுப்பேதும் சொல்லாது
மனங்கோணாது அள்ளித் தந்த
உள்ளங்களுக்கு
என்றும் எம் நன்றிகள்.**

எமக்கு விளம்பரங்கள் தந்த விளம்பரதாரர்களை ஆதரித்து உதவுங்கள்

வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. ஜெயந்திரன்
அளவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகற்றும் பலகேட்டும் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
பயனொன்று மில்லையடி - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
நிலையெங்கும் காணவில்லை - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
நின்பாதம் சரண் புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி

- பாரதியார்

பிரகாஷ் பதிப்பகம், [illegible], அளவெட்டி வடக்கு, T.P. 077-6273464

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org